Koviloor Digital Library

# காஞ்சியில் காலடி

( இரண்டாம் பாகம் )



ACC.NO: 2441
R-65

Koviloor Digital Library

Koviloor Digital Library

2671
4-5
2441

# காஞ்சியில் காவடி

(இரண்டாம் பாகம்)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

தொகுப்பாசிரியர்:

"செந்தில்துறவி"

கோவிலூர் ஆதீனம்
2441
R65
கோவிலூர்-630 307

சாஸ்தா பதிப்பகம்

(Sastha Publications)

4, கிழக்கு ரத வீதி, திருச்செந்தூர், | 4/1, போயஸ் சாலை, சென்னை-18.

1978 — 2/00

Koviloor Digital Library

ஜனவரி, 1978
உரிமை :
சாஸ்தா பதிப்பகம்
சென்னை-600 018

443793

விலை ரூ. 2-00

## சாஸ்தா பதிப்பகம்

4/1, போயஸ் சாலை, சென்னை-600 018
4, கிழக்கு ரத வீதி, திருச்செந்தூர்

# எமது வெளியீடுகள்

### ஷண்மத ஸ்தாபனம்

(அறுவகைவழிபாட்டுநூல்கள்)

1. காணுபத்யம் ரூ. 2-00
2. கௌமாரம் 3-00
3. சாக்தம் 3-00
4. வைஷ்ணவம் 3-00
5. சைவம் 2-00
6. சௌரம் 2-00

### பக்தி பிரயாணக் கட்டுரைகள்

1. ஐயப்பனோடு ஐம்பது நாள் 5-00
2. முருகன்தலம் முப்பது 2-00
3. திருமால்திருப்பதிகள் 2-00
4. ஐம்பெரு விழாக்கள் 2-00
5. கேரளம் கண்டேன் 2-00
6. பராசக்தி படிவம் 2-00
7. தர்மலோக தரிசனம் 2-00
8. கடல் காக்கும் கருணாநிதி 2-00
9. சண்முகர் வரார் 2-00
10. தலவரலாற்றுச்சுடர் 2-00
11. காஞ்சியில் காலடி-I 2-00
12. திருச்செந்தூர்-கன்யாகுமரி (ஆங்கிலம்) 0-35

### பாராயண நூல்கள்

1. அன்னைக்கு ஆயிரம் 1-00
2. மும்மணி நூல் (கணபதி) 0-25
3. ,, (தேவி) 0-50
4. ,, (முருகன்) 0-25
5. ,, (விஷ்ணு) 0-25
6. ,, (பராம்பிகை) 0-25
7. ,, (சிவம்) 0-50
8. நவகிரஹ ஸ்தோத்ரம் 0-50
9. பகவான் பிடியில் 0-50
10. போற்றி நூற்றியெட்டு 0-25
11. மணிகண்டன் மணிமாலை 2-00

### உபாஸனா தெய்வங்கள்

1. ஹயக்ரீவர் 1-00
2. ஆஞ்சநேயர் 1-00
3. ந்ருஸிம்ஹம் 1-50
4. சுதர்சனம் 1-50
5. காயத்ரீ 1-50
6. மஹாலக்ஷ்மி 1-50

ரூ. 50/-க்கு மேற்பட்ட ஆர்டர்கள் ரயில்மூலம் பார்சல் கட்டணமின்றி அனுப்பித் தரப்படும். பாக்கிங் (Packing) செலவு தனி

ஜீவன் பிரஸ், சென்னை-6000 005. (2163)

Koviloor Digital Library

4-5

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | சங்கரஜயந்தி | ... | 5 |
| 2. | அரசியலும் ஆன்மீகமும் | ... | 18 |
| 3. | சமுதாயம்; சமூகம்; சமயம் | ... | 30 |
| 4. | திராவிடம் - ஆரியம் | ... | 42 |
| 5. | பீடம்; மடம் | ... | 54 |
| | பஜகோவிந்தம் | ... | 69 |
| | ஷட்பதீ ஸ்தோத்திரம் | ... | 131 |
| | ஒரு விளக்கம் | ... | 141 |
| 6. | நடமாடும் க்ஷேத்திரங்கள் | ... | 144 |

Koviloor Digital Library

4-5
KOVILOOR MADALAYAM
KOVILOOR-630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)

# ஸ்ரீ சங்கர ஜயந்தி

இன்று சங்கர ஜயந்தி.

பாரதம் உய்ய, உலகம் போற்ற, நாம் பக்தியோடு, பெருமையோடுவணங்கும் ஸ்ரீ ஆதி சங்கரருடைய அவதார தினம் 'இன்று' என்றதும், வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றும். எழுந்து ஓடிப்போய் பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்ப்பார்கள்! "இன்று எப்படி சங்கர ஜயந்தி வரும்?' வைசாக சுத்தப் பஞ்சமியில்தானே அந்த தினத்தைக் கொண்டாடுகிறோம்! இப்போது அதெல்லாம் தாண்டிப் போய் விட்டதே என்று பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு வைப்பார்கள். அவர்களுக்கு அப்படியொரு மனச்சங்கடம் வராமலிருக்க அந்த "இன்று"க்கு விளக்கம் கூறவேண்டியது கடமையாகிறது.

காஞ்சியில் காலடியின் முதல் பாகம் மாசி மாதத்தில் வெளியாகியது. இந்தப் புனித நூல் தொடர்ந்து பல பாகங்களாக வெளியாகவிருக்கிறது என்று முதல் பாகத்தில் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடவில்லை. ஸ்ரீ பெரியவர்களைப் பற்றி எழுதும் நூல் எப்படி அமையப் போகிறதோ, எப்படி வரவேற்கப்படுமோ, என்னென்ன குறைகளுக்கு இடம் கொடுத்து நமது எண்ணத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து தனக்கும் வைத்துக் கொண்டுவிடுமோ என்ற பீதியில் இப்படியும் அப்படியுமாக எண்ணத்தையும் திட்டத்தையும்குழப்பி, குறிப்பிட்டதும் குறிப்பிடாததும் போல் மழுப்பி விட்டிருந்தோம். எந்த ஒரு நல்ல காரியத்தை மேற்கொள்ளும்போதும் முதலில் அதில் வரும் இடைஞ்சல்களை

Koviloor Digital Library



எண்ணிப் பார்க்கவேண்டும். அதன் பிறகே விளையும் நன்மைகளை பட்டியல் போட்டு கணக்கிட வேண்டும். குருவுக்கு மிஞ்சிய தெய்வம் கிடையாது. ஏதேனும் ஒரு உணர்ச்சியில், குருவுக்கு அபசாரம் செய்யும் விதத்தில் ஓரிரு வார்த்தைகள் உட்புகுந்து விடப்போகிறதே என்ற அச்சம் இருந்ததாலேயே இப்புண்ணிய நூல் தொடர்ந்து சில பாகங்களாக வெளியாகும் என்று குறிப்பிடாமல் விட்டிருந்ததை, இப்போது தைரியமாக "காஞ்சியில் காலடி—2" எனக் குறிப்பிட்டு, வெளிவரவிருக்கும் பாகங்களுக்கும் ஆதரவு தர வேண்டும் என்று வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். இப்படியொரு திட்டத்தோடு எழுதத் தொடங்கும்போது "இன்று சங்கர ஜயந்தி" என்று ஆரம்பித்தால் காலங் கடந்து போய் சங்கர ஜயந்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்களே என்று எண்ணத் தோன்றும். அந்த எண்ணம், சந்தேகம், வியப்பு, எதுவும் வாசக நேயர்களுக்கு ஏற்படத் தேவையில்லை. இந்த இரண்டாம் பாகத்தை பிங்கள (1977) ஆண்டு சங்கர ஜயந்தி அன்று எழுத ஆரம்பித்ததால் "இன்று சங்கர ஜயந்தி" என குரு வந்தனம் செய்துகொண்டு, அந்த அவதாரத்தை நெகிழ்ந்துருகும் நெஞ்சத்தில் இருத்தி, இந்த ஜயந்தி விழாக்கள் இன்றைய நாளில் எவ்வாறு நம் தேசத்தில் கொண்டாடப்படுகின்றன என்பதைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்!

* * *

ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அவதாரம், ஜீவிய சரிதம் பற்றி பல்வேறு சரித்திர, சாஸ்திர, மெய்ஞான, தமிழ் மேதைகள் ஆராய்ச்சிகள் செய்து 'சங்கர விஜயம்' என்ற தலைப்பிலும், "சங்கரர் சரிதம்" என்ற தலைப்பிலும் நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களிடையே ஒற்றுமையைவிட வேற்றுமையைத்தான் வாசகர்கள் அதிகம் காண்கிறார்கள். ஆனால் ஒரேயொரு அபிப்பிராயத்தில் மட்டும் வேற்றுமை தென்படவில்லை. அதுதான் ஸ்ரீ பகவத் பாதாள் தோற்றம் பற்றிய உண்மை! இந்த உண்மையை

Koviloor Digital Library



வலியுறுத்திக் குறிப்பிடுவதில் யாரும் கருத்து வேற்றுமையை வெளியிடவில்லை. இதர சித்தாந்த சிற்பிகள் கூட ஸ்ரீ சங்கரரின் அத்வைத சித்தாந்தத்தை கண்டனம் செய்தும், அதை மாற்றியமைத்தும் பாஷ்யங்களைச் செய்திருக்கிறார்களே தவிர, ஸ்ரீசங்கரர், "இந்த பாரத புண்ய பூமிக்கு அன்னியர்! வேறு எங்கிருந்தோ வந்து நமது புராதன ஸநாதந மதத்திற்கு மாசு கற்பித்துவிட்டுப் போயிருக்கிறார்!" என்று பிரசாரம் செய்யவில்லை. அவருக்குத் தோன்றிய விதத்தில் தர்க்க ரீதியாக வேத உபநிஷத்துக்களை ஆராய்ந்து அலசி, முதன்முதலாக அவற்றிற்கு பாஷ்யம் எழுதி, பாலினுள் அடங்கியுள்ள வெண்ணெயைக் கடைந்தெடுத்து உருக்கி நெய்யாக்கியது போல் உலகம் பிரமிக்கும் அத்வைத சித்தாந்தத்தை பிரகடனப்படுத்தி, தமக்கும், தாம் பிறந்த பரத கண்டத்திற்கும் பெருமை தேடித் தந்த ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுக்கு மறைமுகமாக அஞ்சலி செய்து, அம் மகா புருஷரின் ஞாபகம் உலகம் உள்ளளவுக்கு இருக்கும்படி தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். ஸ்ரீ சங்கரர் அத்வைதத்தை தோற்றுவிக்கா விட்டால், பின்னர் வந்த விசிஷ்டாத்வைதம், த்வைதம், சுத்தாத்வைதம், சிவாத்வைதம் எல்லாம் பாரதத்தில் இன்று ஆங்காங்கே சுடர் விட்டுப் பிரகாசிக்குமா என்பது விடையளிக்க முடியாத ஒரு கேள்வியாகத்தான் இருக்கும். ஒரு பிரபல ஆங்கிலேய சரித்திராசிரியர் தமது இந்திய சரிதத்தில் 14—15 நூற்றுண்டுகளில் தக்ஷிணத்தில் பிரபலமாயும், மகாசக்தி வாய்ந்ததாயும் விளங்கிய விஜய நகர சாம்ராஜ்யத்தைப் பற்றி "Forgotten Empire" என்று குறிப்பிட்டிருந்தார். அவர் எழுதிய ஒரு பக்க விரிவுரைக்கு ஓராயிரம் பக்கம் எதிர்ப்பு நூல் ஒன்று எழுதி, அதற்கு "Never to be forgotten Empire"—என்ற தலைப்பும் கொடுத்து, பாரதத்தோடு தோன்றிய இந்து மதத்தின் சிறப்பை உலக மேதைகள் அறியும் வகையில் மாபெரும் தொண்டு செய்திருக்கிறார் ஒரு இந்திய சரித்திரப் பேராசிரியர்! எப்போதுமே எதிர்ப்பில் தோன்றி வளரும் ஒரு இயக்கம் தான் நீடித்து நிலைத்து நிற்கும். அத்தகைய பெருமையைப்

Koviloor Digital Library



பெற்றிருக்கிற ஸ்ரீபகவத் பாதாளின் அத்வைத சித்தாந்தம், பின்னர் வந்த சித்தாந்தக்காரர்கள் உரைகல்லில் வைத்து அத்வைதத்தை உரைத்ததாலேயே அது புடம் போட்ட தங்கமாக உலகம் பூராவும் வியாபித்துள்ளதை இன்று நாம் காண்கிறோம்.

ஆக, ஸ்ரீசங்கர ஜயந்தி இந்நாட்டினரின் இரத்தத்தோடு கலந்துவிட்டிருக்கும் ஒரு புனித தினம். எப்போதோ ஏதோ ஒரு யுகத்தில் தோன்றிய ஸ்ரீ ராமனுக்கு ஸ்ரீ ராமநவமியைக் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஜன்மாஷ்டமியைக் கொண்டாடுகிறோம். தெய்வம் மனிதனுகப் பிறந்து மனிதனோடு வாழ்ந்து, மனிதன் மிருகமாக மாறுமலிருக்கும் பொருட்டு துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த தசாவதாரங்களில் ஸ்ரீ ராமனும், ஸ்ரீ கிருஷ்ணனும் இன்றியமையாத, நம் இதய கமலத்தில் நிரந்தர இடம் பெற்றிருக்கும் இரு அவதார மூர்த்திகள். இந்த இரண்டு அவதாரங்களுக்கும் இம்மியளவும் குறையாத முக்கியத்துவம் உடைய, சரிசமம் வாய்ந்த அவதாரமே ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அவதாரம். பரமேச்வரனுகவும், சங்கரனுகவும், சதாசிவமாகவும் புராணங்களும், வேத உபநிஷதங்களும் விவரிக்கும் பரம்பொருளான பெரும் பொருளாகவும், விராட புருஷனுகவும் நாம் வழிபடும் சர்வ மங்களத்தைத் தரும் சங்கரனே, ஸ்ரீ ஆதி சங்கரராக பரசுராம க்ஷேத்ரம் என்ற கேரள பூமியில் 'காலடி' எனும் புனித தலத்தில் அவதரித்தார். ஸ்ரீ சங்கர விஜயத்தின் நோக்கம், விஜய சரிதம், விஜய யாத்திரை. விஜய பலாபலன்கள் பற்றி பெரும் பான்மையான மக்கள் அறிவார்கள். ஸ்ரீ சங்கரருக்கு அடுத்தபடிதான் இதர மதத் தலைவர்களுக்கு இந்நாட்டில் இடம் ஒதுக்கப்படவேண்டும் என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். அப்படி உண்மை இருக்கையில், புராதனமான இந்து மதத்திலிருந்து பிரிந்து போய், இந்து மதக் கொள்கைக்கு விபரீத வியாக்கியானங்கள் செய்து, வேறு மதம் என்று பெயர் சூட்டி பிரபலமாகியுள்ள புத்த, ஜைன

Koviloor Digital Library



மதங்களைச் சார்ந்தவர்களைத் திருப்தி செய்ய அரசாங்கம், மஹாவீர் ஜயந்தி, புத்த ஜயந்தி என்று அங்கீகாரம் அளித்து அவற்றைக் கொண்டாட விடுமுறையளிப்பதோடு, ஆங்காங்கே அரசாங்கத் தலைவர்கள் இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் விழாவைபவங்களில் பங்கு கொண்டு கூட்டத்தோடு சேர்ந்து "கோவிந்தா" போட்டு அந்த நன்நாட்களைக் கொண்டாடுகிறார்கள்!

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழிக்கேற்ப நமது இந்து சகோதரர்கள் இதர மதத் தலைவர்கள் ஜயந்தியைக் கொண்டாடும் பெரும் நோக்கையும், பெருந்தன்மையையும், தன்னடக்கத்தையும் நாம் பாராட்டத்தான் வேண்டும். என்றாலும் நம் வீட்டுக் குழந்தை பளபளவென்று மின்னிக் கொண்டு வளராமல் உடம்பு பூராவும் சேற்றைப் பூசிக் கொண்டு வந்து நிற்கும் அளவுக்கு நாம் அதைப் புறக்கணிக்கக்கூடாதல்லவா? இன்று நாடு போகும் நிலையில், நமது குழந்தை, சேற்றைப் பூசிக்கொள்ள வேண்டியதுதான் என்று வருத்தத்தோடு கூறவேண்டியிருக்கிறது. அதுவும் பாரதத்தின் தக்ஷிண பாகம் தான் இந்து மதத்தின் மூச்சுக் காற்று. இங்கேதான் நமது மதத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் அவதரித்திருக்கிறார்கள். ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வர், ஸ்ரீவல்லபர், ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் போன்ற பாஷ்யகாரர்களும் ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் பல நூறு வருஷங்களுக்கு முன்பே அவதரித்து அருமையான சித்தாந்தங்களை தோற்றுவித்தும், பாகவதோத்தமமான பக்திச் சுவையொன்றை மட்டுமே மையமாக வைத்து தமிழில் பிரபந்த தேவார திருவாசக பாடல்கள் இயற்றி, வடதிசையிலிருந்து தென்திசைக்கு வந்து பாரத புண்ய பூமியை சம நிலையில் நிலைக்கச் செய்த அகத்திய மாமுனிக்கு அளித்து, தக்ஷிணமென்றும் திராவிடம் என்றும் சரித்திரம் வருணனை செய்யும் இந்த பாகத்திற்கு சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார்கள். இத்தனை மகோந்நத பாக்கியம் இந்து மதத்திற்கு

Koviloor Digital Library



எளிதாகக் கிட்டச் செய்த அவதார புருஷரான ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் ஜயந்தி தினம் இன்று தான் என்று அறிந்ததும், இன்று வந்த பத்திரிகைகளைப் புரட்டினேன். ஓரிரு தனிப்பட்ட பக்தி மன்றங்கள் கொண்டாடவிருக்கும் ஸ்ரீசங்கர ஜயந்தி விழா பற்றிய செய்திகள் மட்டுமே அவை பிரசுரித்திருந்தன. வேறு எந்த விஷயமும் ஸ்ரீ சங்கரரைப் பற்றி அந்த பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை போலும், பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? பத்திரிகை சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இரண்டையும் எக்கச்சக்கமான அளவில் பெற்றிருக்கும் எழுத்தாளர்கள் அவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஏனெனில், கடந்த பல வருஷங்களாக அத்தகைய எழுத்துச் சுதந்திரம் பெற்ற எழுத்தாள அடிமைகளில் ஒருவனாக காலத்தைக் கழிப்பவன் நான். இன்று என் அபிப்பிராயத்தை ஏற்காத (என் எழுத்தாள) நண்பர்கள் மன்னிக்க வேணும்! நிற்க.

ஸ்ரீ சங்கரர் ஜனித்த கேரளத்திலேயே சங்கர ஜயந்தி கொண்டாடுவது துர்லபம். காலடியில் அமைந்துள்ள ஆலயங்களில் நமது ஜகத்குரு பரமாசாரியர்கள் முன்னின்று நடத்தும் ஜயந்தி விழாவைபவ பூஜைகள்தான் கேரளத்தில் பிரதானமாயுள்ளது. ஆங்காங்கே சமீப காலத்தில் நமது ஆசாரியாள் திக் விஜயத்தின்போது தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீ சங்கர அத்வைத, மன்றங்கள், பூஜா சங்கங்கள் பாடசாலைகளில் சங்கர ஜயந்தி ஓரளவுக்குக் கொண்டாடப்படுகிறது. நாடு பூராவும் கோலாகலமாகக் கொண்டாடப்படவேண்டிய ஒரு விழா 'காம சோமா' வென்று காதும் காதும் வைத்துப் பேசுவது போல் நடைபெறுவது மிக மிக துரதிருஷ்டவசமானது. ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டு ஒடி ஒளிபவனைப் போல் கேரளத்தில் இவ்விழாவை இரண்டொரு இடங்களில் பெயரளவுக்கு நடத்துகிறுர்கள். பெருமளவுக்கு நடத்தி, நாட்டு மக்களனைவர் கவனத்தையும் இந்த சுப தினத்தில் ஈர்க்க வேண்டிய மாநிலம் கேரளம். அது, தனக்கு இயற்கை அளித்த மாபெரும் பாக்கியத்தையும், வாய்ப்பை

Koviloor Digital Library



யும் இழந்துவிட்டது என்று இங்கு குறிப்பிடுவதில் தயக்கம் காட்டவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், கேரள வாசி களைப்போல் தங்களுடைய குறை, நிறைகளை அறிந்தவர்கள் இந்நாட்டின் மற்ற மாநிலங்களில் இல்லை. கேரளத்தை பரசுராமர் கடலுக்கடியிலிருந்து எழுப்பி தமது முழு பலத் தையும் அங்கு வாழும் மக்களுக்கு அளித்துள்ளார். பரசுராம அவதாரத்தின் மகிமையே கொள்கை, கோட்பாடு, கடமை ஆகிய மூன்றுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது. அத்தகையதொரு அவதாரத்தின் ஆதார பலத்தில் வாழும் மக்களுக்கு வேறு எவரும் போய் நீதி நெறி விளக்கம் கூற வேண்டியதில்லை. ஆயினும், ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாவுக்கு அவர்கள் சரியான முக்கியத்வம் கொடுக்காமலிருப்பது விசனத்தைத்தான் தருகிறது. ஆனால் இப்போதுள்ள ஆசாரிய மகா புருஷர்கள் அடிக்கடி கேரள ராஜ்யத்தில் விஜய யாத்திரை செய்து வருவதால், காலடியின் பெரு மையை நம்மைப் போல் அவர்களும் உணர ஆரம்பித்திருக் கிறார்கள். இன்னும் இரண்டொரு வருஷங்களில் இங்கு முதலில் குறிப்பிட்டதுபோல் கேரள மக்கள் சங்கர ஜயந்தி நாளில் இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலக மக்களையே கேரளத்துக்கு இழுப்பார்கள் என்று நம்பலாம். வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வருபவர்கள் கேரள வாசிகள். சுமார் இருபது வருஷங்களுக்கு முன்புவரை மலை யாளத்து தெய்வமாக இருந்த மணிகண்டனை—ஸ்ரீ ஐயப்பன்— இன்று கிட்டத்தட்ட அகில இந்திய தெய்வமாக மாற்றி இரண்டு மூன்று மாதகாலம் அறுபதுகோடி மக்களையும் சபரி கிரிவாசனுடைய ஞாபகத்தில் இருக்கச் செய்துவிட்டவர் களாயிற்றே அம்மக்கள்! ஸ்ரீபகவத் பாதாளை அவர்கள் முழு மூச்சோடு கொண்டாடத் தீர்மானித்துத் திட்டம் தீட்டி செயல்படுத்தத் தொடங்கி விட்டால் நாட்டின் மற்ற மாநிலங்களை வெகுவிரைவில் வியப்பில் ஆழ்த்தி விடுவார்கள். மேட்டிலிருக்கும் தண்ணீர் பள்ளத்தை நோக்கி ஓடுவது போல் ஸ்ரீ சங்கர சித்தாந்த பக்தர்கள் அனைவரும் கேரள காலடி க்ஷேத்திரத்திலேதான் தங்கள் எண்ணம் பூராவையும்

Koviloor Digital Library



இருத்தி வைத்திருப்பார்கள் எனக் கூறுவது மிகையாகாது. இதை மனத்தில் கொண்டுதானோ என்னவோ, நமது ஸர்வக்ஞ பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள், அவரது குரு மகராஜருடைய அனுக்கிரக பூர்வமான அங்கீகாரத்தோடு, கேரள காலடி க்ஷேத்திரத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் காணிக்கையாக ஸ்ரீ சங்கர ஸ்தூபி ஒன்று சுமார் 75 அடி உயரத்திற்கு எழுப்பத் திருவுள்ளம் கொண்டு, அம்மாபெரும் பணியை அநேகமாக நிறைவேற்றிவிட்டார்கள். வெகு சீக்கிரத்தில் ஸ்ரீ சங்கர பக்தர்கள் காலடியில் காஞ்சியை தரிசிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தியை தேசிய ஜயந்தியாகக் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்துவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும். அரசியல் வாதிகளுக்கும் ஆன்மீகம் தேவை. 'ஆன்மீகத்திற்கு முழுக்குப் போட்டவர்கள்தான் எங்கள் கட்சியில் சேரலாம்' என திட்டவட்டமாகக் கூறி, கட்சிக்கு ஆதரவாளர்களைச் சேர்த்து, பிறகு அது ஆளும் கட்சியாகவும் மாறியுள்ள விந்தையைத் தமிழகத்தில் பார்க்கிறோம். ஆனால் அந்த ஆளும் கட்சியினர் ஆன்மீகத்திற்கு பேச்சளவிற்கே முழுக்குப் போட்டுள்ளனர். உள் மனதில் 'ஆன்மீகம் அழிவற்றது! அரசியல் அழிவுக்குட்பட்டது என்று அவர்களுக்குத் தெரியும். ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள பெரும்பான்மை மக்களின் மனம் புண்படாதபடி அரசியலை நடத்திச் செல்ல அவர்கள் முற்பட்டாலேயே அவர்கள் அரசியல் வாழ்க்கை நீடிக்கும் என்ற உண்மையும் அவர்களுக்குத் தெரியும்! அதனாலேயே ஆன்மீகத்தோடு பட்டதும் படாததுமாக ஒன்றுபட்டு செயல்படுகிறார்கள்.

இத்தகைய அரசியல் வாதிகளும், மற்றும் நாட்டில் உள்ள இதர உயர்மட்டத்திலும் கீழ்த்தளத்திலுமுள்ள அரசியல் வாதிகளும் எவ்வித பேதமும் இன்றி ஒன்றுபட்டு அரசியல் விழாக்களை நடத்துவது போல், ஆன்மீக விழாக்களுக்கெல்லாம் முதன்மையாயுள்ள ஸ்ரீ சங்கர ஜயந்தி

Koviloor Digital Library



விழாவை வெகு சிறப்பாக நடத்தி உலகின் எண் திசைகளி லும் இருந்து எதிரொலி கேட்கும்படிச் செய்ய வேண்டும்.

மத்திய அரசில் புத்த ஜயந்தி, மகாவீர் ஜயந்தி எல்லாவற் றிற்கும் அரசு விடுமுறை, தேசீய விழா பட்டியலில் இடம் தரப்பட்டிருக்கிறது. அந்த விழாக்களில் அரசியல் தலைவர்கள், அந்தந்த மதத் தலைவர்களோடு மேடைகளில் தோன்றி அந் தந்த மதச் சிற்பிகளைப்பற்றி, தெரிந்த, தெரியாத விஷயங்களை எல்லாம் பேசுகிறார்கள். அவர்கள் பேச்சு பத்திரிகைகளில் படங்களோடு பிரசுரமாகின்றன. ரேடியோவிலும் தூரதரி சனத்திலும் மக்களை மகிழ்விக்க இடம் பெறுகின்றன. ஆனால், இவையெல்லாவற்றிற்கும் ஆதி காரணமாயுள்ள ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளின் அவதார ஜயந்தி விழா இரண்டாம் பட்சமாகத்தான் கருதப்படுகிறது. அரசினர் பட்டியலிலும் இடம் பெறவில்லை. அரசியல் வாதிகளின் கவனத்திலும் இது இருப்பதில்லை. அத்வைத சித்தாந்தத்தைச் சேர்ந்த ஆன்மீகத் தலைவர்கள் தான் ஸ்ரீ சங்கர ஜயந்தியைக் கொண் டாடுகிறார்கள். ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் வேத பரிபாலனத் திற்குச் செய்தருளிய மகத்தான் பாஷ்யங்களை பாமர மக் களுக்கும் புரியும் வகையில் உபநிடத உண்மைகளை விளக்கிச் சொல்லி, ஸ்ரீ சங்கரரின் பாதாரவிந்தங்களின் துணை கொண்டு ஆன்மீக வளர்ச்சிக்குப் பாடுபடுகிறார்கள்.

* * *

"உலகிலேயே நாஸ்திகம் கடைபிடிக்கப்படவில்லை. பேச்சளவிலும், எழுத்தளவிலும் இதை உபயோகித்து பாமர மக்களை ஏமாற்றி ஒரு சிலர் திட்டமிட்டு செயல்படுகிறார்கள். அவர்களுடைய மாயவலையில் விழுந்தவர்கள்கூட கண்டானந் தித்த உண்மை என்னவென்றால், இந்த நாஸ்திக பிரசாரகர் கள் அனைவருமே தீர்ந்த ஆஸ்திக வாதிகள். ஆஸ்திகம் அவர் களிடம் நிறைகுடமாயுள்ளதால் தளும்பி வழிவதில்லை. கூட்டத்தில் இடித்துப் புடைத்துக் கொண்டுபோய் கோயிலில் கடவுளை தரிசிக்காமல் வீட்டில் குளிர் சாதனத்தோடு அமையப் பெற்றுள்ள அந்தரங்க பூஜை அறையிலமர்ந்து ஆனந்தமாக மனக்கண்ணால் அந்த கருவறை தெய்வத்தை

Koviloor Digital Library



வணங்குகிறார்கள். அதேபோல் தூய, துல்லிய, எளிய, தியாக வாழ்க்கை வாழ்ந்து ஊர் ஊராக விஜயம் செய்து மதபிரசாரமும், பக்தி பிரசாரமும் செய்து புனிதப் பணியின் சிறப்புப் பிறவிகளாகத் திகழும் மதத்தலைவர்கள், மகான்களை மனத்தில் வைத்து வணங்குவதோடு, மேடைகளிலும், எழுத்திலும், நண்பர்கள் குழாமிலும் மதத்தையும், பக்தியையும், மதத் தலைவர்களையும் கேவலமாக கண்டனம் செய்ததற்கு மனதார மன்னிப்பும் கேட்டுக்கொண்டு, அந்த மன்னிப்பு கிடைத்துவிட்டதாக எண்ணிக் கண்ணீர் சிந்துகிறார்கள். இத்தகைய சிலர் காரணார்த்தமாக நாட்டில் நடமாடுவதால்தான் நாட்டில் நாஸ்திகம் ஆஸ்திகத்தின் பெருமை குன்றாமல் இருக்க உதவுகிறது! சூரிய சந்திரனை ராகு பிடிப்பதுபோல் பிடித்து மறைத்து அந்த சுயம்பிரகாச சூரிய கிரணங்களில் மற்ற கிரஹங்கள் ஒளியோடு திகழ்வதைப்போல், ராகுவாயிருக்கும் நாஸ்திகம் ஆதவனாக உள்ள ஆஸ்திகம் மிளிரக் காரணமாயிருக்கிறது! இந்த ராகு ஆக்கிரமிப்பால் தாற்காலிகமாக ஏற்படும் கிரகணம் போலவேதான் அகில பாரதத்தின் பக்தி வாழ்வில் அவ்வப்போது களங்கம் காணப்படுகிறது. இவ்வுண்மையை நமது சகோதர சகோதரிகள் மட்டுமல்ல: உலக மாந்தரனைவருமே நன்கு உணர்ந்திருக்கிறார்கள்! இதற்கு ஒரே ஒரு சான்று கூறலாம். நமது புண்ய தேசத்திற்கு வரும் உல்லாச யாத்ரீகர்கள் இம்மண்ணில் காலை வைத்ததும், நமது தூய பாக்திமார்க்கத்தையும் அதன் அங்கங்களாக விளங்கும் ஆலயங்களையும், பரமாசாரியர்களையும், யோகீச்வரர்களையும் பார்க்க வெகு உற்சாகத்தோடு விழைகிறார்கள். அரசு அதிகாரிகளும், மந்திரி பிரதானிகளும் நாட்டில் வளர்ச்சியடைந்துள்ள தொழிற்கூடங்களுக்கும், பாசன திட்டங்களுக்கும் அவர்களை அழைத்துச் சென்று காட்ட ஆர்வத்தோடு கவர்ச்சிகரமான பிரசார ஏடுகளுடன் அணுகும் போது அந்த உல்லாசப் பிரயாணிகள் வானோங்கி நிற்கும் ஆலய கோபுரங்களின் படங்களையும் பரமாசாரியர்களின் படங்களையும், அவர்கள் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும்

Koviloor Digital Library



புனித ஸ்தலங்களையும் பார்க்கவே முதலில் அக்கறையும் ஆர்வமும் காட்டுகிறார்கள்! பல்வேறு நாடுகளிலிருந்து வரும் யாத்ரீகர்களில் முக்கால்வாசி பேர்கள் இந்தத் துறையில் ஈடுபாடு கொண்டிருப்பதை கவனித்த பிறகும்கூட நமது மதச் சார்பற்ற அரசாங்கம், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று சாதிக்கிறது. பாரத தேசத்தின் பெருமைக்கு காரணமாயுள்ள மதத் தலைவர்களை தகுந்த முறையில் கௌரவிக்கத் தயங்குவதால் அரசுக்கு நஷ்டமே தவிர நாட்டு மக்களுக்கு நஷ்டமில்லை! என்றோ ஒரு நாள் அரசு கொள்கையை ஆன்மீகக் கொள்கை வென்றுவிடும். அன்று முதன் முதலாக இமய முதல் குமரிவரை தேசியமத விழாவாகக் கொண்டாடப்படப்போவது "ஸ்ரீ சங்கர ஜயந்தி" தான் என்று பெருமிதத்தோடு குறிப்பிடலாம்.

இப்படியொரு அற்புதம் இந்நாட்டில் நடக்கத்தான் போகிறது. அன்று காலடி, காசி, காஞ்சி ஆகிய முப்பெரும் க்ஷேத்திரங்களும் உலக மக்களின் கவனத்தையே கவரும் என்று நம்பலாம். ஏனெனில்,காலடியில் அவதரித்து, காசியில் அத்வைத சித்தாந்தத்தை உருவாக்கி, காஞ்சியில் ஸர்வக்ஞ பீடத்திலமர்ந்து பாரத இந்து மதத்தின் ஏகபோக தலைவராக சுடரொளிவிட்டுப் பிரகாசித்த ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் இம்மூன்று க்ஷேத்திரங்களையும் முக்கண் படைத்த ஸ்ரீ சங்கரனுடைய அவதாரமே என நிரூபிப்பது போல் தமது ஜீவிய சரிதத்தோடு தாமே வலிய முன்வந்து இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்! இமய முதல் குமரிவரை பூலோக கயிலாயமாக எத்தனையோ க்ஷேத்திரங்கள் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக, இதிகாச புராண தொடர்போடு இருந்து வந்துகொண்டிருந்தாலும், ஏறக்குறைய இரண்டாயிரத்தைந் நூறு ஆண்டுகளுக்கு முன், வேத பூர்வமான ஸநாதன மதத்திற்கு ஊறுவிளைவிக்க நம்மில் சிலர் வெகுதீவிரமாக ஈடுபட்டு, வேத வாக்கியங்களை திருத்திக் கூறி மக்களின் மனத்தில் இருந்துவந்த தெளிவை அகற்றி இருளைப் புகுத்த முற்பட்ட சமயம், ஸ்ரீ பகவத் பாதாள் காலடியில் அவதரித்து மத

Koviloor Digital Library



விரோத சக்திகளை அடியோடு அழித்து, மங்கிக் கொண்டிருந்த நமது ஸநாதன மதத்தின் புகழையும் உயர்ந்த உண்மைகள், நோக்கங்களையும் தமது பிரம்ம சூத்திர பாஷ்யங்கள் மூலம் பிரகாசிக்கச் செய்தார்கள். காலடியில் அவதாரம்: காசியில் அவதார நோக்க இயக்க ஆரம்பப் பூர்த்தி. காஞ்சியில் அவதார நோக்கத்தின் பூர்த்தியால் ஏற்பட்ட பரிபூரண திருப்தியோடு ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்து பாரதம் உய்ய ஸ்தூலமாகவும் சூக்ஷ்மமாகவும் காட்சி தந்து கொண்டிருக்கிறார்.

இந்த ஸ்தூலமான காட்சியைத் தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடம் மக்கள் கண்டானந்திக்கிறார்கள். ஸர்வக்ஞாத்மன் என்ற இளைஞனை முதல் பீடாதிபதியாகக் கொண்டு இன்றுவரை 68 பீடாதிபதிகள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்து; அரும்பெரும் ஆன்மீகத் தொண்டு புரிந்து, பாமர மக்களின் அஞ்ஞானத்தை அகற்ற பேருதவி செய்து வந்திருக்கிறார்கள். இப்போது 68வது பீடாதிபதிகளான ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், அவரது பிரதான சிஷ்யரான புதுப் பெரியவாள் என பாரதம் போற்றும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் ஆஸ்திகர்கள் மனத்தில் வேத ஸ்வரூபமாகவும், பாமர பக்தியுள்ளங்களில் ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாளுமாக திவ்ய காட்சியளித்து நிலையானதொரு இடம் பெற்றுள்ளார்கள். ஸ்ரீ பரமாசாரியாளான பெரியவர்கள் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தின் ஊர் எல்லையில் உள்ள தேனம்பாக்கத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுடைய மூலஸ்தானம் போல் தங்கியுள்ளார்கள்! பிரதம சிஷ்யரான ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகளோ ஸ்ரீ பகவத் பாதாளின் உற்சவ மூர்த்தியாக நாடு பூராவும் திக் விஜயம் செய்து வருகிறார்கள். 25 நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ ஆதி சங்கரர் காலடியைப் பிறந்த மண்ணாகக் கொண்டு, காசி மாநகரில் தமது அவதார நோக்கப் பூர்த்தியை உலகம் வியக்க நிறைவேற்றிவிட்டு, தமது பெயரும், சிந்தாந்தமும் பாரதத்தின் ஆன்மீக பொக்கிஷமாகிய வேத வேதாந்த, சாஸ்திர இரத்னங்கள்

Koviloor Digital Library



கலியுகம் முடியும் வரை உலக மதங்களின் மத்தியில் 'ச்யமந்தக மணி' போன்று ஒளி வீசச் செய்ய வேண்டி பாரதத்தில் நான்கு திசைகளிலும் நான்கு பீடங்களை நிறுவி மாந்தர்களிலும், மகான்களிலும், மேதைகளிலும் சிறந்த நான்கு மாமணிகளுக்கு பீடாதிபத்யம் கொடுத்து, இந்து மதத்தின் சிற்பியாகவும், சித்தாந்த சக்கரவர்த்தியாகவும் திகழ்ந்து. ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் அம்பிகை ஸ்ரீ காமாக்ஷியின் கருணை நோக்கில் ஸர்வக்ஞபீடாரோகணம் செய்தருளி, அம்பிகை காமகோடியின் அருட்பெயரால் மிளிரும்படி ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாபிதம் செய்தார்கள். அன்று முதல் இன்று வரை எவ்வித இடையூறும் தர்க்கமும் இன்றி 67 மகான்கள் பீடாதிபத்யம் பெற்று தேச மக்களை—முக்கிய மாக திராவிட மக்களை தூய்மைப்படுத்தும் கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள்.

அதே தொண்டைத்தான் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நவ நாகரீக, அணுகுண்டு சகாப்த மெய் சிலிர்க்க வைக்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கு இடையே தமது அருள்மொழியாலும், நெறிவாழ்க்கையாலும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், அவர்கள் அடிச்சுவட்டிலிருந்து அணுவளவும் பிறழாது பீடுநடை போட்டு மக்களைக் கவர்ந்து, மனமாற்றம் செய்யும் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் மெய்ஞானத்தின் மகத்தான சக்தியை எடுத்துக் காட்டி அமோக வெற்றியடைந்து வருகிறார்கள். ஸ்ரீபகவத் பாதாளின் ஜனன ஜயந்தி நாளாகிய இந்த தினத்தை இந்த தேசத்து ஆட்சியாளர்கள் அசட்டையாகத் தட்டிக் கழித்தாலும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் திருவுருவ தரிசன பாக்கியத்தை நேரிலும் பட உருவிலும் உலக மக்களில் அநேகர் கண்டானந்தித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஆதி சங்கரருக்கு நாம் அஞ்சலி செலுத்த, எடுக்கும் ஒவ்வொரு ஜன்மத்திலும் நாம் கடமைப்பட்டிருப்பதால் நம்மைச் சூழ்ந்துள்ள பல பிரச்னைகளுக்கிடையே "இன்று சங்கர ஜயந்தி" என்று மனதிற்குள்ளாவது சொல்லிக் கொண்டு அந்த அவதாரத்திற்கும், அவருடைய சிஷ்ய பரம்பரைக்கும் அடிபணிகிறோம்.

Koviloor Digital Library

# 2. அரசியலும் ஆன்மீகமும்

ஆன்மீகமும், அரசியலும் வெவ்வேருகவே தோன்றிணுலும், உலகமும், அதில் மாந்தரும் தோன்றிய நாள் முதல் சேர்ந்தே செயல்படவேண்டிய நியதியையும் உலகையும் மாந்தரையும் படைத்த பரம்பொருள் நிர்ணயித்திருக்கிறது. இரு துருவங்களாக இவை காட்சி தந்த போதிலும், அரசியல் இன்றி ஆன்மீகம் வளருவதில்லை. ஆன்மீகம் இன்றி அரசியல் வளருவதில்லை. இவ்விஷயம் பற்றி இரண்டாயிரம் பக்கங்கள் வேண்டுமாஞலும் எழுதலாம். ஏனெனில், உலகம் பூராவும் எழுப்பப்படும் அன்ருடப் பிரச்னைகளில் இதுவும் ஒன்று. ஆனல் இதில் ஒரு வேடிக்கை என்னவென்ருல் அரசியலோடு மோதுவதை ஆன்மீகம் விரும்பாது. ஆன்மீகத்தோடு மோதுவதை அரசியல் விரும்பாது. இந்த நியதிக்கு புறம்பாக எப்போதேனும் அதிசயமாக ஒரு மோதல் ஏற்படுமேயானுல் அதை இரு சாராரும் பெரிது படுத்தாமல் தமக்குள்ளேயே சமரசம் செய்துகொண்டு விடுவார்கள். பொதுமக்கள் காதுவரை இது பரவலாக எட்டாது. அப்படியே இரண்டொருவருக்குத் தெரிந்தாலும் அரசியல் நலனை உத்தேசித்து அரசியல்வாதிகளும் ஆன்மீக நலனை உத்தேசித்து ஆன்மீகவாதிகளும் பிரச்னையை பொது மக்களுக்குத் தெரியாதபடி மூடி மறைத்துவிடுவார்கள். பொதுவாக உலகம் பூராவும் அன்று முதல் இன்றுவரை இத்துறைகளில் கையாளப்படும் உத்திகளைக் குறிப்பிட்டுவிட்டு, நமது பாரத புண்ய பூமியில் இந்த மனித வாழ்வின் இன்றியமையாத இரு அம்சங்கள்பற்றி சுருக்கமாக ஆராய்ந்து பார்ப்போம். இக்கட்டுரையாளரின் கருத்துக்கு மாருன கருத்து சில வாசகர்களுக்கு இருக்கக்கூடும். தயவு செய்து அவர்கள் போர்க்கொடி தூக்கவேண்டாம். ஏனெனில், இவ்விரு பிரிவிலும் முரண்பாடும், எதிர்ப்பும் ஏற்படும்போது வெற்றி,

Koviloor Digital Library



தோல்வி சமமாகத்தான் கிடைக்கும். இதை அது வென்று விட்டதாகவோ, அதை இது வென்றுவிட்டதாகவோ இறுதியில் கூற இயலாதவகையில் சமரசக்கொடி இடையில் பறந்து விடும். ஆகவே, கட்டுரையாளரோடு கருத்து வேற்றுமை கொள்ளும் வாசகர்கள், தங்களுடைய கருத்தை எதிர்ப்பவர்கள் எத்தனை பேர் இருக்கக்கூடும் என்று சற்று சிந்தித்துப் பார்த்தார்களானுல் கட்டுரையாளருக்கெதிராக தூக்கிய எதிர்ப்புக் கொடியை கீழே போட்டு விடுவார்கள்.

இன்று பாரத தேசம் துண்டாடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் மதம் என்ற ஆன்மீகத்தின் ஆணிவேர் தான். இந்து மதம் இந்நாட்டில் ஏகபோக உரிமையை அனுதிகாலமாகப் பெற்று வந்திருக்கிறது. வேதம் அனுதியானது. அதை எந்த தனிமனிதரும் உருவாக்கவில்லை. தொகுக்கவில்லை. கற்பனையிலிருந்து உதிக்கவில்லை. இயற்கையெனும் பரம்பொருளின் இச்சையால், இமய முதல் குமரி வரை பரவியுள்ள பாரத உப கண்டத்தைப் புனிதப்படுத்தி, என்றென்றும் உலகின் கண் சுடரொளியாகப் பிரகாசிக்கத் தோன்றிய மாபெரும் உண்மைகளை தன்னுள் அடக்கிய வேதங்களின் பலத்தால் அழிவற்றத் தன்மையோடு விளங்கும் மதம் இது !

பரம்பொருள் வியாஸ மகரிஷியாக அவதரித்து வேதங்களைத் தொகுத்த பெருமையை நாம் அறிவோம். உலகத்தில்பல்வேறு மதங்கள் இருந்துவருகின்றன. அவையெல்லாம் ஒரு தனிப்பட்ட மகா புருஷரால் உருவாக்கப்பட்டவை. தானே தோன்றியதாக அந்த மதங்களில் எதுவும் கூறிக் கொள்வதில்லை. மதத்தின் ஆதி கர்த்தாவையே தெய்வமாகக் கொண்டாடுகின்றன. அந்த மதச்ரேஷ்டரின் அடிச்சுவட்டில் வந்த சிஷ்ய மேதைகளின் வாக்கு, வரலாறுகளைப் போற்றிப் பெருமையடைந்தாலும், ஆதி கர்த்தருக்கே அவை அஞ்சலி செலுத்துகின்றன. அம்மகான்களுடைய வாழ்க்கைச் சரித சம்பவங்களை அந்தந்த மதத்தினர் முழு

Koviloor Digital Library



நம்பிக்கையுடன் புனித தினங்களாகக் கொண்டாடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அம்மதத்தை உலகம் பூராவும் பரவச்செய்ய பெரு முயற்சிகள் எடுத்துக்கொண்டு, ஏராள மாக பொருட்செலவும் செய்து பிற மதக்காரர்களை வசீகரிப் பதில் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்துகொண்டு, உலகம் பூராவும் பிரசாரம் செய்துவருகிறார்கள். மதத்தை தோற்றுவித்த அம்மகான்களின் திருவுள்ளம் எப்படியோ தெரியாது. ஆனால் உலகில் அம்மதம் பரவ மதத்தினர் உழைக்கவேண்டும். உற்சாகம் காட்டவேண்டும். என்று அவர்கள் விரும்பினார்களோ, இல்லையோ. அம்மதத்தைச் சார்ந்த பிற்கால சந்ததியர் தலைப்பொறுப்பாக அம்மதங் களை பிரசார 'மதங்களாக' மாற்றிவிட்டார்கள்! இல்லா விட்டால் இன்று உலக மாந்தர்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாகவும், முஸ்லீம்களாகவும் இருப்பதற்கில்லை.

பாரதத்தில் புராதன இந்து மதத்திற்கும் நம்மிடையே வேற்றுமைகள் தோன்றியதால் சோதனைகள் ஏற்பட்டன. வேற்றுமை காரணமாக தோன்றிய மதங்கள்தாம் புத்த மதமும் ஜைனமதமும். இந்து மதத்தின் கொள்கைகளில் சில வற்றை மாற்றியமைத்து கௌதம புத்தர் தமது கொள்கை களை பிரகடனம் செய்தார். பின்னர் அவர் கொள்கைகளை ஏற்ற மேதைகள் அவர் பெயரால் புத்த மதத்தை உருவகப் படுத்தி, பிரசாரத்தில் ஈடுபடலாயினர். புத்த மதத்தின் கொள்கைகளை நன்கு ஆராய்ந்து, அவற்றில் சிலவற்றை ஒதுக்கி, சிலவற்றை புதிதாகச் சேர்த்து மகான் வர்த்தமன மகாவீரர் ஜெயின மதத்தை ஸ்தாபித்தார். ஆக, இந்திய உபகண்டத்தில் ஸநாதன இந்து மதத்தில் புத்த, ஜைன மதங்கள் என்ற இரண்டு கிளைகள் தோன்றலாயின. அப் போதைய அரசியலுக்குத் தலைவராயிருந்த மாமன்னர்களின் அங்கீகாரம், ஒத்துழைப்பு, பேருதவிகளினால் புத்த மதம் இந்து மதத்தையே மறைத்துவிடுமோ என்று அஞ்சும் வகை யில் வளர்ந்தது. "வளர்பிறையாகவே அது என்றும் இருந்து விடுமோ, தேய்பிறையே அதற்கு வராதோ" என்று ஸ்ரீ ஆதி

Koviloor Digital Library



சங்கர பகவத் பாதாள் வழிவந்த அத்வைத சித்தாந்த சிஷ்ய மேதைகள் கவலையடைந்தார்கள். பெரும் எதிர்ப்பை பரமாசாரியரின் கடாட்சத்தில் திளைத்த அந்த சிஷ்ய மகாச்ரேஷ்டர்கள். மக்கள் கவனத்தை நூதனமாகத் தோன்றிய புத்த மதத்திலிருந்து திருப்ப, ஸநாதன மார்க்கத்தை நாடு பூராவும் பிரசாரம் செய்து, புல்லுருவியென வளர்ந்த புத்த மதத்தை நாடு கடந்து போகும்படிச் செய்துவிட்டார்கள்! பகவத் பாதாளின் சிஷ்யர்களுடைய மேதா விலாசத்தாலும், குரு பக்தியாலும் அத்வைதமே இந்நாட்டின் சித்தாந்தமாகவும், இந்து மதமே மதமாகவும் மாறிவிட்டன.

புத்தமதம், பாரதத்தைச் சுற்றியுள்ள எல்லா தேச மக்களையும் வசிகரிக்கவில்லை. கீழ்த்திசை நாடுகள் இரண்டிலும், இலங்கையிலும் இறக்குமதியாகி, அந்த தேச மாந்தர்களுக்கு இன்றியமையாததாக அமைந்து, நிலையான இடமும் பெற்றுவிட்டது. தாயகத்தில் அதன் பெருமை குன்றிவிட்டது. புகுந்த இடத்தில், பெருமை வாலளாவ ஓங்கிவிட்டது!

அடுத்து வந்த ஜெயின மதமும், இந்து மதத்திற்கு பெரிய எதிர்ப்பாக அமையவில்லை. ஏனெனில், அப்போது தேசத்தை ஆண்டு வந்த மன்னர்களில் பெரும்பான்மையோர் இந்து மதத்திற்கே முதல் இடம் அளித்தார்கள். அவர்களுடைய ஆதரவு கிடைக்காத போதிலும், ஜைன மத பிரசாரத்தின் எளிமையும், அடக்கமான பொறுமை வாய்ந்த மக்கள் தொடர்பும் ஜனங்களைக் கவர்ந்தன. வலிய வந்து அம்மதத்தை தமதுடைமையாக்கிக் கொண்ட இந்துக்கள், அதன் மீது ஏற்பட்ட மோகம் அகன்று, தாய் மதத்திற்குத் திரும்பி வரும்பும்போது, நமது மதத் தலைவர்கள் சாஸ்திர ரீதியாகவும் முழுமையான உறுதியோடும், அவர்கள் திரும்புவதை எதிர்த்தார்கள். ஆகவேதான், சுமார் பதினெட்டு பத்தொன்பதாம் ஆண்டுவரை அந்நிய மதங்களின் வலிமையிலும், வலியுறுத்தலிலும், பலாத்காரத்திலும், பசப்பு வார்த்தைகளிலும் சிக்குண்டு இந்து மதத்திலிருந்து பிரிந்து

Koviloor Digital Library



சென்று பிற மதங்களை ஏற்றுக்கொண்டு பலர் மதத்துரோகி களாக மாறிவிட்டனர்!

'இந்து மதம் சாஸ்த்ரீய ஸநாதன மதம் : 'கொள்கை களில் சிறந்தது' என உலகத்தினரால் போற்றப்படுவது! இதற்கு எதிர்ப்பு உள் நாட்டில்தான் அவ்வப்போது ஏற் படுமே தவிர, உலக நாடுகளில் எதிர்ப்பு சிறிதளவேனும் கிடையாது. காரணம் ஒன்றேதான். இந்து மதம் பிரசார மதம் இல்லை: வேறு மதத்தினரிடம் போய் தற்பெருமை யடித் துக் கொண்டு, பிரசாரத்தில் ஈடுபட்டு "மதம் மாறி இந்து மதத்தைத் தழுவுங்கள்" என்று அறை கூவியோ, ஆசை வார்த்தை காட்டியோ யாரையும் அழைப்பதில்லை தவிர, தாமே மதம் மாற விரும்பி வருவோரையும் சாஸ்தரீய மடாதி பதிகள் அங்கீகரிப்பதில்லை. இப்போது சில சமூக சேவா சங்கங்களும், சீர்திருத்த வாதிகளும் மதம் மாறுபவர்களை வரவேற்கிறார்கள். ஆனால் சாஸ்தரீய வழியைப் பின்பற்று வோர் பிற மதத்தினரிடம் த்வேஷமும் காட்டுவதில்லை: பற்றும் காட்டுவதில்லை! ஏனென்றால் இந்து மதம் நிறை குடம் போன்றது; குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளும்பாது. அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும் நிறைகுடமாக அமையும் வாய்ப்பைப் பெற்றுள்ள மதம் எக்காரணம்பற்றியும் எதிர்ப்பையோ, ஊடுருவலையோ கண்டு அஞ்சத் தேவையில்லை. இந்த அபிப்பிராயத்தை வலியுறுத்த வேண்டி சிறிது நமது தேச சரித்திரத்தைப் பார்ப்போம்.

* * *

இந்திய உபகண்டம் என்று சொல்லுமளவுக்கு பாரதம் பரந்து விரிந்து காணப்படுகிறது. ஆதிகாலம் தொட்டு, யுகங்களையெல்லாம் கடந்து கலியுகத்தில் உழலுபவரை இந்து மதம் இந்திய எல்லைக்குள், இந்துமதத் தலைவர்களா லும், இந்துமத மாமன்னர்களாலும் போற்றப்பட்டு வந் திருக்கிறது. இதிகாஸ, புராண காலங்களில் பிற மத பிர சாரமோ, படையெடுப்போ இருந்ததாக யாரும வருணனை

Koviloor Digital Library



செய்யவில்லை. கலியுகத்திலும் இந்த சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்டே மதமும், அரசியலும் உலக சரிதத்தில் முக்கிய இடம் பெற்று சரிதம் பூராவுமே வியாபித்திருக்கின்றன!

அரசியலையும் ஆன்மீகத்தையும் உலக மாந்தரனைவரும் புறக்கணிக்கத் துணிவதில்லை என்று உலக சரித்திராசிரியர்கள் திருஷ்டாந்தங்களோடு கூறியுள்ளனர். நாமும் இன்று கண்கூடாக இந்த உண்மையைப் பார்த்து, சமூகத்தில் இரு கண்களாக இந்த இரண்டும் இருந்து வருவதை உணர்வதோடு, நமது அன்றாட வாழ்க்கையையும் இவற்றின் தன்மைக்கேற்ப அமைத்துக் கொள்கிறோம். இவை இரண்டும் மோதிக் கொள்வதைவிட, ஒற்றுமையுடன் செயல்படுவதையே சமுதாயம் விரும்புகிறது. ஆனால், சமுதாயத்தின் விருப்பத்தை அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகமாக உணருவதில்லை. அரசியலுக்கு உட்பட்டுத்தான் ஆன்மீகம் செயல்படவேண்டும் என்பது அவர்களுடைய துணிபு. அரசியலில் ஆட்சி, அதிகாரம், பொருள் மூன்றும் அடங்கியுள்ளன ஆன்மீகத்திலோ இவை மூன்றும் அணுவளவு கூட இல்லை! இம்மூன்றுக்கும் கட்டுப்பட்டே இந்தப் பொருளாதார உலகில் மக்கள் வாழ வேண்டியிருப்பதால் அரசியலின் கை சற்று ஓங்கியதுபோல் காட்சியளிக்கிறது. அதுவும் அரசியலில் அகந்தையும், ஆணவமும், ஆடம்பரமும் அணியாகக் கொண்ட தலைவர்கள் கையில் பதவி போயடையும்போது, ஆன்மீகம் அடங்கி ஒடுங்கி இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றம் மக்களின் மனத்திரையில் மயக்கத்தை உண்டாக்குகிறது. அப்போதுதான் ஆன்மீகத்தின் ஆணி வேரான ஆஸ்திகம் திரைக்குப் பின்னால் போய்விடுகின்றது. நாஸ்திகம் முத்தப் பல்லக்கில் ஏறிவிடுகிறது! ஆனால், ஆடம்பர அரசியலுக்கு ஆட்டம் அடிக்கடி ஏற்பட்டுவிடுவது சகஜம். அப்போது அதன் பலத்தில் பவனிவரும் நாஸ்திகம் ஓடி ஒளியும்! உடன் ஆஸ்திகத்தை மறைத்துக் கொண்டிருந்த திரை தானாகவே விலகிவிடும். அரசியலும் ஆன்மீகத்திடம் சரண் புகுந்துவிடும்! இதுவே இன்றைய நாடகம்!

Koviloor Digital Library



மேற் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு உதாரணங்களாக நமது பாரத தேச சரித்திரத்திலிருந்து பல்வேறு மேற்கோள் களை எடுத்துக் காட்டலாம். இக்கட்டுரையின் நோக்கம் அதுவல்ல. மேலும் தேச சரித்திரம் இந்தக் காலத்தில் கல்வியறிவு இல்லாதவர்களுக்குக் கூட ஓரளவுக்குப் பரிசய மாகியுள்ளது. ஆகவே, இதைப் படிக்கும்போது 'சரித்திரச் சுழல்கள்' வாசகர்கள் மனத்தில் நிழற்படம் போன்று தோன்றி மறையும்!

சில அரசியல்வாதிகள் ஆன்மீகத்திற்கு அப்பாற்பட்ட வர்கள் போல் நடிப்பார்கள். ஆன்மீகத்தில் நேரிடையாக ஈடுபடாமல், எதிர்ப்பாளர்களின் ஏளனப் பேச்சுக்கு இலக் காக நேரிடும் என்பதற்காக ஏதோ மறைக்கு ஒதுங்கியவர்கள் போல் தொட்டதும் தொடாததுமாக விலகிவிடுவார்கள். ஆனால் உள்மனத்தில் ஆன்மீகம் வேரூன்றி நிற்கும்.

ஆன்மீகத்தில் திளைக்கும் தலைவர்களுக்கு அரசியல் வாதிகளின் தர்மசங்கடமான நிலை நன்கு புரியுமாதலால் அவர்கள் சற்று அனுதாபத்தோடுதான் அவர்களைப் பார்ப் பார்கள். அரசியல்வாதிகளிடம் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லை. சமூ கத்தை பாதிக்கும் வகையில் ஆன்மீகத்துறையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், அரசியல்வாதிகளுக்கு அது தெரி யாமல் போகாது. அவர்களாகவே மறைமுகமாகத் தலை யிட்டு அந்த இடையூறு பெரிதாக்கப்படாமல் ஆரம்பத்தி லேயே தடுத்து நிறுத்தப்படவேண்டி நடவடிக்கைகளை எடுத் துக் கொள்வார்கள். இதை மேல்மட்டத்தில் உள்ள அரசி யல் ஆன்மீகத் தலைவர்கள் நன்கு உணர்வார்கள் என்பதா லேயே இந்த 'ராஜதந்திரம்' பற்றி இங்கு குறிப்பிட வேண்டி யிருக்கிறது. இந்தக் கூற்றுக்கும் பல நிகழ்ச்சிகளை உதா ரணங்களாக எடுத்துக் காட்டலாம். இங்கே அது பொருத்த மாக இருக்கும் என்றாலும், பின்னொரு சந்தர்ப்பத்தில் இந்த அரசியல்—ஆன்மீக உறவு பிளவுபற்றிய விவரங்களை விளக்கி எழுதினால் ஒவ்வொன்றும் ஒரு புத்தகமாகி விடும். ஆகவே,

Koviloor Digital Library



உலக சரித்திரத்தை ஒதுக்கிவிட்டு, இந்திய சரித்திரத்திலிருந்து மட்டும் இரண்டொரு உதாரணங்களை இங்கே குறிப்பிடலாம்.

இந்திய சரித்திரத்தில் பல சம்பவங்கள் இன்றும் சர்ச்சைக்கு இடமாகவே இருந்து வருகின்றன. முக்கியமாக ஆன்மீக சரித்திரத்தில், வேத, உபநிடத, இதிகாச, புராண காலங்கள் குறித்து அபிப்பிராயபேதம் அளவுக்கு மீறியே இருக்கிறது. இதற்குக் காரணம் நமது ஆன்மீகத் தலைவர்களிடையே அவ்வப்போது தலைதூக்கும் வேற்றுமை மனப்பான்மைதான் என்று வருத்தத்தோடு கூறவேண்டியிருக்கிறது. அவர்கள் ஒன்றுகூடி விவாதித்து, ஆராய்ந்து இந்தக் காலங்களை கணக்கிட்டு ஒருமுகமாக ஏற்று தங்கள் சிஷ்யர்களுக்கும் பக்தர்களுக்கும் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்களானால், இந்தக் கால நிர்ணய அபிப்பிராய பேதம் பாமர மக்களிடமிருந்தும் மறையக்கூடும்.

ஒரே ஒரு உதாரணமாக, இக்கட்டுரைத் தொடரின் நடுநாயகனாக வீற்றிருக்கும் ஸ்ரீபகவத்பாதாளுடைய காலம் பற்றிச் சிறிது ஆராயலாம். அத்வைத சித்தாந்த சிற்பியான ஸ்ரீ ஆதிசங்கரர் சுமார் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காலடியில் அவதரித்ததாகவும், சித்தாந்தத்தைத் தோற்றுவித்து, அப்போது இந்து மதத்திற்கு இருந்துவந்த எதிர்ப்புகளை தமது வாதத் திறமையால் அடக்கி ஒடுக்கி, எதிர்த்த புத்த, ஜைன மதங்களை புறமுதுகு காட்டி ஓடி மறையும்படிச் செய்தருளினதாக ஒரு "சங்கர விஜய" நூல் கூறுகிறது. இந்த அபிப்பிராயமும், விளக்கமும் சில அத்வைத பீடங்களுக்கு அனுசரணையாக இருப்பதால், அவை ஸ்ரீ ஆதிசங்கரரின் காலத்தை மேற் குறிப்பிட்ட வகையில் பிரகடனம் செய்வதோடு, இதற்கு மாறான அபிப்பிராயம் தெரிவிக்கும் ஆன்மீகத் தலைவர்களை கண்டனமும் செய்கின்றன. இந்த வகையில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாகவே இன்று நமது நாட்டில் பிரபலமாயுள்ள, ஆதி ஆசாரியாள் ஸ்தா

கோவிலூர் ஆதீனம்
2441
R65

Koviloor Digital Library



பித்த ஐந்து பீடங்களில் நான்கு ஒரு வரிசையிலும், ஒன்று தனியாகவும் இருந்து வருகிறது. தனியாக இருந்து வருவது தான் காஞ்சியில் காலடியாகத் திகழும் ஸ்ரீ காமகோடிபீடம்.

ஆன்மீகத்தில் அரசியல் புகுந்து விளையாட இந்த வேற்றுமை காரணமாகி விட்டிருக்கிறது. அதுவும் முக்கியமாக ஸ்ரீ ச்ருங்கேரி பீடத்திற்கும் ஸ்ரீ காமகோடி பீடத்திற்குமிடையே இந்த வேற்றுமை சற்று விரிவாகவே இருந்துவருவதால் தென்திசையிலுள்ள அத்வைத சித்தாந்தத்தைச் சேர்ந்த சிஷ்யர்களுக்கு மனக்கலக்கமும், சில சமயம் சோர்வும் ஏற்பட்டு விடுகிறது. சிருங்கேரி பீடத்தை ஆச்ரயிப்பவர்கள் அந்தப் பீடாதிபதி வலதுகண் என்று கருதும்போது, காமகோடி பீடாதிபதியை இடது கண் என்று கருதுகிறார்கள். அதேபோல் ஸ்ரீ காமகோடி பீடத்தின் பக்தர்களுக்கு இடது கண் ச்ருங்கேரி பீடமாக அமைகிறது! ஏனெனில், தக்ஷிணத்தில் ஸ்ரீ பகவத் பாதாளின் இரு கண்களாகத் திகழ்பவை இவ்விரு பீடங்களும்! ஆகவே, பகவத் பாதர்களுடைய இரு கண்கள் இவை என்று குறிப்பிடுவதும் மிகையாகாது.

மனிதனுடைய இரண்டு கண்களும் வலது கண்களாகவும், இடது கண்களாகவும் சிருஷ்டி அமைக்கவில்லை. இடம், வலம் என்பது வேத—உபநிஷதங்களிலேயே இடம் பெற்றிருக்கும் உரிமை என்று ஒரு ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இடமும் வலமும் தனித்தனியே இருந்தாலும் இரண்டும், ஒரே அலுவலைச் செய்யும் தன்மையுடையவை. இடது கண் பார்ப்பதற்கும் வலது கண் பார்க்காமலிருக்கவும் சக்தி பெறவில்லை. இம்மாதிரியேதான் மனித உறுப்புகளில் ஜோடியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் இரு காதுகள், நாசித்வாரங்கள், கைகள்,கால்கள் எல்லாம்! இவற்றில் அவரவர் செய்த பூர்வ புண்ய, பாவத்தின் பலனாக அதிக சக்திகளும், ஊனங்களும் ஏற்படக்கூடும். அதை உதாரணமாகக் காட்டி இடம், வலம் இரண்டுக்குமிடையே தீராத வேற்றுமையைக் கற்பிப்பது ஏற்கக்கூடிய வாதம் அல்ல. தென்னாட்டு ஆன்மீகத்தில் அரசியலைப் புகுத்தி பக்தி

Koviloor Digital Library



உள்ளங்களில் புண் ஏற்படக் காரணமாயிருக்கும் ஒரு சிலர் பகிரங்கமாக புறக்கணிக்கப்படுவதற்கு முன்பு, அவர்கள் தாமாகவே இந்த அர்த்தமற்ற அரசியலிலிருந்து விலகி, பண்பிலும், பக்தியிலும் சிறந்த இந்த தக்ஷிணத்தில் ஆன்மீக வளர்ச்சி மகோன்னதமாக இருக்க வழிவகை செய்யலாம்.

மேற்குறிப்பிட்ட சில பகுதிகள் இந்த அத்தியாயத்தின் தலைப்பிற்கு முரணாகத் தோன்றக்கூடும். அரசியலும்—ஆன்மீகமும் பற்றி எழுதும்போது ஆன்மீகத்தில் உள்நாட்டு அரசியல் புகுந்து விடுவதை குறிப்பிடுவது அவசியமா என்ற கேள்விக்கு இதோ பதில் தயாராக உள்ளது! ஆன்மீகத்திற்குள்ளேயே அரசியல் பூசல் உலக மதங்கள் எல்லாவற்றிலுமே இருந்து வருகின்றன. காலப் போக்கில் அவை பெரும் பிளவாக மாறி பின்னர் ஒன்றுகவும் சேர்ந்து விடுகின்றன. இத்தகைய அதிசய சம்பவங்களைப் பற்றிக் கேட்டறிந்திருக்கும் வாசகர்கள், 'ஏன் இதைப்பற்றி எழுதவில்லை என்று கேட்கக்கூடும் மேலும் இந்தக் கேள்விக்குப் பதில் கூறும் வகையில் இக்கட்டுரைத் தொடரின் பிற்பகுதியில் சந்தர்ப்பம் வருமோ வராதோ என்ற ஐயப்பாட்டினுல் இந்த அத்தியாயத்திலேயே ஓரளவுக்கு எழுதி விடுவது தவறு இல்லை, என்பதால் சிறிது ஆராய்ந்து பார்த்துவிட்டு அடுத்த அத்தியாயத்திற்குப போவோம்.

* * *

இன்று நமது நாட்டில் மதச் சார்பற்ற அரசு நடக்கிறது. ஆங்கிலேய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த பிறகு ஆட்சிப் பொறுப்பை பெரும்பான்மை கட்சியாக விளங்கிய காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. பத்துகோடி முஸ்லிம்களுக்கென நாட்டைத் துண்டாக்கி, ஆட்சிப் பொறுபபை ஏற்ற காங்கிரஸ், நியாயமாக அப்போதே முஸ்லிம்களைப் போலவே மதத்தின் பெயரால் நமது பாகத்தை ஹிந்துஸ்தான் என்று பெயரிட்டு, இந்துக்களின் ஏகபோகதேசமாக இதை அறிவித்திருக்க வேண்டும். ஆனுல் சமதர்ம சமுதாயம், விட்டுக் கொடுக்கும் கொள்கை, இரண்டுக்குமே முக்கியத்வம் கொடுத்த நமது

Koviloor Digital Library



அரசியல் தலைவர்கள் தங்கள் முதுகெலும்பைத் தாமாகவே ஒடித்துக் கொண்டு, கொதித்துக் கொண்டிருந்த தேச மக்களின் ஆன்மீகக் கொந்தளிப்பில் மதச் சார்பற்ற அரசு என்ற பனி மலையைத் தூக்கிப் போட்டு அடக்கிவிட்டார்கள்! இந்த விசித்திர பிரகடனத்திற்கு அர்த்தம், விளக்கம், தேவை எல்லாவற்றையும் நமக்கும் நாம் வாழும் உலகுக்கும் தெளிவாகத் தெரிவிக்க அவர்கள் அன்று மேற்கொண்ட முயற்சி இன்று வரை வெற்றி பெறவில்லை!

இந்த 'மதச் சார்பற்ற அரசு' உலகில் எந்தெந்த நாடுகளில் இன்று இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தோமானுல் எங்குமே இல்லை என்று தைரியமாகக் கூறலாம். உலக கம்யூனிஸ்டு நாடுகள்தான் முதன் முதலாக இந்த விநோத கொள்கையை மக்கள் மீது சுமத்தியது. அந்நாடுகளிலேயே இந்தக் கொள்கை வெற்றி பெறவில்லை என 'உலகம் சுற்றும் வாலிபர்'கள், வயோதிகர்கள், அறிவாளிகள், அறிவிலிகள் இந்தக் கட்டுரையாளரோடு நெருங்கிப் பழகியுள்ளவர்கள் கூறியிருக்கிருர்கள். சிலர் துணிவோடு தமது பிரயாணக் குறிப்புகளிலும், அனுபவங்களிலும் வெளியிட்டிருக்கிருர்கள். கம்யூனிஸ்டு நாடுகள் தவிர மற்ற எந்த நாட்டிலும் அரசியலும் ஆன்மீகமும் மக்களின் அன்றாட வாழ்க்கைத் தராசின் இரு தட்டுகளாகவேதான் இருந்து வருகின்றன. மதப்பற்றுள்ள அரசு ஆட்சிதான் தீவிரமாக நடைபெறுகிறது. என்ருலும் விருப்பு வெறுப்பின்றி தங்கள் நாடுகளில் வாழும் பிறமதத்தினருக்கு பாதுகாப்பும்' சலுகையும் காட்டுவதில் இவை தயங்குவதில்லை. இதற்கு விதிவிலக்காக இருந்து வந்த சில முஸ்லிம் நாடுகள் கூட இப்பொழுது கொஞ்சம் தங்கள் இருப்புப்பிடி ஆட்சியை இளக விட்டு, பிற மத சடங்குகள் ஆராதனைகளை அந்தந்த மதத்தினர் அந்நாட்டில் செய்வதை தடை செய்யலாமல் விட்டு வைத்திருக்கின்றன. ஆனுல் இஸ்லாத்திற்கு விரோதமான எந்த செய்கையும், பிரசாரமும், உடனுக்குடனே களைந்தெரியப்பட்டுவிடுகிறது. அம்முயற்சிகளில் ஈடுபடும் பிற மதத்தினர்கள் தண்டனைக்குள்ளாகிருர்கள்! அல்லது நாடு கடத்தப்படுகிருர்கள்! மதச்

Koviloor Digital Library



சார்பற்ற அரசாக அவை ஒருபோதும் கூறிக்கொள்வதில்லை அதற்கு மாருக மதச் சார்புடைய நாடு என்றுதான் பெருமிதத்தோடு பறை சாற்றி வருகின்றன.

ஆனல் நாம் செய்த துரதிர்ஷ்டத்தின் காரணமாக இந்த முப்பது ஆண்டு சுதந்திர வாழ்க்கையில் நாம் எத்தனையோ தாழ்வுகளைப் பார்த்துக் கொண்டும், அனுபவித்துக் கொண்டும் வருகிறோம். அவற்றிற்கெல்லாம் சிகரம் போல் அமைந்திருப்பது நமது 'மதச் சார்பற்ற அரசு!' நல்ல வேளையாக அரசியல் வாதிகள் ஆளும் வெறியில், போதையில் பாரத புண்ய பூமியில் வாழும் மக்களையும் "மதச் சார்பற்ற மக்கள்" என்று அறிவிக்கவில்லை! அரசியல் சாஸனத்தை நாற்பத்தி இரண்டு தடவை திருத்தத் துணிந்தவர்கள் ஒரு திருத்தம் போட்டு "மதச்சார்பற்ற மக்கள்" என்ற கூருமல், நமது ஆன்மீக வாழ்க்கையில் அவர்களுடைய முதுகெலும்பு ஒடிந்து உளுத்துப்போன விபரீத அரசியலைப் புகுத்தாமல் இருந்தது நாம் செய்த பெரும் பாக்கியம்!

ஆகவே, இந்திய அரசியலும் ஆன்மீகமும், இன்று ஒன்ருேடொன்று போரிடாமலும், உறவாடாமலும் தாமரை இலைத்தண்ணீர் ஆக ஒட்டியும் ஒட்டாததுமாகவே இருக்கின்றன. ஆனல் பாலுக்குள் வெண்ணெய் மறைந்திருப்பது போல் அரசியலில் ஆன்மீகமும், ஆன்மீகத்தில் அரசியலும் மறைந்திருப்பதை இந்த இரு துருவங்களிலும் வாழும் தலைவர்கள் நன்கு அறிவார்கள். அரசியல் என்ற பாலில் 'பக்தி மதம்' என்ற உறை மோரை விட்டால் அதிலிருந்து ஆன்மீகம் என்ற வெண்ணெய் ஏடு மேலே மிதக்க ஆரம்பித்துவிடும். அதேபோல் ஆன்மீகம் என்ற பாலில் 'தேசப்பற்று' என்ற உறை மோரைக் கலந்தால் அரசியல் என்ற வெண்ணெய் வெளிப்பட்டுவிடும். ஆகவே, மதச்சார்புள்ள அரசானலும், சரி, சார்பற்ற அரசானலும் சரி, அந்நாட்டில் அரசியல் வளர ஆன்மீகம் இன்றியமையாததொரு சாதனம். ஆன்மீகம் வளர அரசியல் இன்றியமையாததொரு சாதனம்.

Koviloor Digital Library

# 3. சமுதாயம் : சமூகம் : சமயம்!

மேற்குறிப்பிட்ட முப்பெரும் கோப்புகளுக்குள் தான் மனித இனம் அடங்கிக் கிடக்கிறது. சமுதாயத்தின் நீளம், அகலம், கனம் வண்ணம், பரிமாணம் எல்லாம் அளவிட்டுச் சொல்வது கடினம். ஏனென்றால், உலகின் எண் திசைகளிலும் பரவியிருக்கும் மனித சமூகங்கள் அனைத்தையும் ஒன்று படுத்திக் கூறப்படுவதே சமுதாயம். அஷ்டதிக்கு பாலகர்கள் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றனவே, அவர்களுக்குத் தான் அந்த சமுதாயத்தின் பரப்பு நன்கு தெரியும். மனிதன் போடும் கணக்கில், அந்த தேசத்தின் பெயரைக் குறிப்பிட்டு அத்தேச மக்கள் உலக சமுதாயத்தின் ஓர் அங்கம் என கூறப் படும். "ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு உலக மனிதர்களனைவரையும் சமுதாயம் என்றும, ஒரு தேச மக்களை சமூகம் என்றும், அந்த சமூகத்தினர் கடைப் பிடிக்கும் மதக் கொள்கைகளை சமயம், சமயாசாரம் என்றும் சரித்திராசிரியர்கள் குறிப்பிட்டனர்; ஆனால் இப்போதைய சரித்திராசிரியர்கள் இப்படிக் கூறுவதில்லை. காரணம் இந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் உலக ஜனத் தொகை பல நூறு சதவிகிதம் பெருகி விட்டிருக்கிறது. அதே போல் அவர் களிடையே வெவ்வேறு மதங்களும் தோன்றி உள்ளன. உலக சமுதாயம் என்று கூறுவது இனி பொருந்தாது. அந்தந்த தேசத்தின் பெயரில் ஒரு சமுதாயம் என்று பொதுவாகக் குறிப்பிட்ட பின்னர், அத்தேச மக்களை அவரவர் பற்றுக் கொண்டிருக்கும் மதத்தோடு இணைத்து அம்மதத்தின் பெயரால் சமூகம் என்று அழைப்பதுதான் பொருந்தும்" என ஒரு ஆராய்ச்சியாளர் உதாரணங்களோடும், உபமான உபமேயங்களோடும், புள்ளி விவரங்களோடும் எடுத்துக் காட்டியிருக்கிறார். அவருடைய நீண்ட கால ஆராய்ச்சியை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஏனெனில், இன்றைய உலகத்

Koviloor Digital Library



தின் ஜனப் பெருக்கத்தைக் கணக்கிட்டுச் சொல்வோர், உலக மக்கள் இனம் சுமார் 600 கோடி இருக்குமென எழுது கிருர்கள். ஆகவேதான் மனித இன ஆராய்ச்சி பேராசிரியர் வெகு வெகு தயக்கத்தோடு சமுதாயத்திற்கு மேலே கூறிய விளக்கத்தைத் தந்திருக்கிருர்! அவருடைய அபிப்பிராயத்தை யொட்டி இன்றைய பாரத சமுதாயத்தை எடைபோட்டுப் பார்க்கலாம் இந்த ஆராய்ச்சியாளருக்கு பல வருஷங்கள் முன்பே 'பாரத சமுதாயம் வாழ்கவே" என பாரதியார் பாடிக் காட்டியிருக்கிருர்!

* * *

பாரத சமுதாயத்தின் சரிதத்தை வேத காலத்திலிருந்து சங்கிலித் தொடர்போல் எழுதிக் கொண்டு வரலாம். ஆனல் அது இன்றைய பாரத சமுதாயத்தின் வர்ணனையாக அமையாது. ஏனெனில், வேத காலத்தில் பாரத தேசத்தில் ஸநாதன இந்து மதம் ஒன்றுதான் இருந்தது. கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்று பாகங்களாக தேசத்தைப் பிரித்துக் காட்டி, தூய வாழ்க்கை நடத்துவது ஒன்றையே குறிக் கோளாகக் கொண்ட நமது மூதாதையர்களின் சரிதமும், அவர்கள் வகுத்துக் கையாண்ட சாஸ்திர விரதங்களும்தான் இன்றும் நமக்கு ஜீவநாடியாக உள்ளது. இவையெல்லாம் இன்றைய பாரத இந்து சமுகத்துக்குத்தான் பொருந்தும். மற்ற மதத்தினருக்கு இது புலி, கரடி போன்று வெறுக்கத் தக்கவையாகத்தான் இருக்கும்!

பின்னர் இதிகாஸ காலத்தில் பாரத இந்து மனிதன் பகிரங்கமாக வெளிப்படுகிறன். ஏன்"...தெய்வ அவதாரங் களே ஸ்ரீ ராமனுகவும், ஸ்ரீ கிருஷ்ணனுகவும், ஸ்ரீ பலராமனுகவும் மனித உருவில் வந்து, மனிதரோடு வாழ்ந்து அவதார நோக்கத்தைப் பூர்த்தி செய்த விருத்தாந்தங்களைப் படிக்கும் போதும், கேட்கும் போதும் நம்மில் ஒருவராக தெய்வமே வந்து தோன்றியதாலோ என்னவோ, அந்த இதிகாஸ

Koviloor Digital Library



சம்பவங்கள் எல்லாம் நேற்று நடந்தவைபோல் நமக்குத் தோன்றுகின்றன.

இதிகாஸங்களுக்குப் பிறகு புராண காலம். இது சர்ச்சைக்குரியது. நம்பத்தகுந்தவை கால், நம்பத்தகாதது முக்கால் என்ற அளவுக்கு இந்தப் புராணங்களை மொழி பெயர்த்தவர்களும், விரிவுரை எழுதியவர்களும் தேசமக்களுக்கு மகத்தான சேவை செய்திருக்கிறார்கள்! இந்தப் புராணங்கள் பற்றி சில பிரவசனமேதைகளோடு விவாதித்த போது, மேலே குறிப்பிட்ட உண்மைகள் அவர்களிடமிருந்து வந்தவை! “இப்படியொரு சர்ச்சைக்குரிய விஷயத்தையே நீங்கள் திரும்பத் திரும்ப மேடைகளில் காலட்சேபம் செய்கிறீர்களே! அது தவறல்லவா? நீங்கள் தெரிந்துகொண்ட அளவுக்கு உண்மைகளை ஆர்வமுடன் உங்கள் பிரவசனத்தைக் கேட்க வருபவர்களுக்கு நீங்கள் எடுத்துக் காட்ட வேண்டாமா?” என்று கேட்டதற்கு அவர்கள், “அது சாத்தியமில்லை, ஏனெனில், பல நூறு ஆண்டுகளாக பிரவசனக்காரர்களும் மற்ற மேதைகளையும் கூறி வந்ததை நாங்கள் மாற்றிக் கூறினால், ஜனங்கள் எதிர்ப்பார்கள், எங்கள் வியாக்கியானத்தை ஏற்கமாட்டார்கள். ஆகவேதான் நாங்கள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக மாறிவிட்டோம். மேலும் அந்தக் காலத்தில் காலட்சேபம், பிரவசனம் எல்லாம் பொது ஜனங்களின் நன்மைக்காக ஒரு சில மேதைகளால் செய்யப்பட்டு வந்தன. இப்போது பெரும்பாலும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுடைய குடும்ப காலட்சேபத்தை முன்னிட்டே இதைச் செய்து வருகிறார்கள். வயிற்றுப் பிழைப்பு என்று வந்துவிட்டால் உங்களுக்குத் தான் தெரியுமே, பழமொழி! ‘பசி வந்தால் பத்தும் பறந்து போகும்’ என்பது பழமொழியல்லவா? ஆகவேதான் பதினெண்புராணங்கள் எத்தகைய உயர்ந்த நோக்கத்தோடு, மகரிஷிகளால் உருவாக்கப்பட்டதோ, அதற்கு நேர்மாறாக இப்போது மேடைகளில் அரங்கேறி, உருமாறி காட்சியளிக்கிறது! நமது மதத் தலைவர்கள் ‘ஏதோ ஒருவிதத்தில் பக்தி

Koviloor Digital Library



பரவுகிறது!' என்ற காரணத்தால் இத்துறையில் ஈடுபட்டுள்ள வர்களை சீர்திருத்துவதில்லை'' என்று அவர் சமாதானம் கூறியதோடு, வெகு அழகாக புராண பாத்திரங்கள் இரண் டொன்றை எடுத்து உதாரணம் காட்டி, இன்றைய மனித னுடைய குண பேதங்கள்தாம் அன்றைய புராண அரக்கர் கள் எனக் கூறி திகைப்பிலாழ்த்தினர்.

பாரத சமுதாயத்தின் இப்போதைய நிலையைச் சற்று ஆராய்வோம். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் பாரத தேசம் அந்நிய முஸ்லீம் ஆட்சியில் சிக்குண்டு தவித்தது. தங்கள் மத வெறி வேட்கையைத் தணித்துக் கொள்ள பரந்த பாரத புண்ய பூமியும, பசுவைக்காட்டிலும் சாது வான இந்து மதத்தினரும் இஸ்லாமியரின் கூரிய பார்வையி லிருந்தும், கத்தி முனையிலிருந்தும் தப்பவில்லை. கோடிக் கணக்கான இந்து மதத்தினரை முஸ்லீமாக்கும் வெறியாட் டத்தை ஆடி, சுமார் ஆயிரம் வருஷங்கள் வெற்றி கண்ட னர். இந்து மதத்திலேயே பல்வேறு பிரிவுகள் தோன்றி ஞலும், மதக் கோட்பாட்டிலிருந்து விலகி இரு புது உப மதங்களை உருவாக்கிய கௌதம புத்தரும், வர்த்தமன மகாவீரரும் தங்களுடைய புத்த, ஜைன மதங்களும் முஸ்லீம் களின் மதம் மாற்றும் கொள்கைக்கு இலக்காகியதை சூக்ஷ்மமாகப் பார்த்து மனம் கலங்கியிருக்க வேண்டும்!

* * *

தவிர பாரத சமுதாயம் ஸ்ரீ பகவத்பாதாள் காலத்தில்— அதாவது ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டு களுக்கு முன்பு—எவ்வாறு இருந்தது என்பதையும் இங்கு நாம் பார்க்க வேண்டியவர்களா யிருக்கிறோம். ஸநாதன வேத பூர்வமாக வந்த மதக் கொள்கை, கோட்பாடுகளுக்கு அநேகர் விபரீதமாக விளக்கங்கள் கூறி, சாதாரண மக்களை திசை திருப்பி நேர்வழியிலிருந்து விலகிச் செல்லக் காரணமாயிருந் தனர். இந்து மதத்தின் அடிப்படையிலேயே தங்களுக்கு தோன்றிய விதத்தில் மதங்களை உருவாக்கி பிரசாரம் செய்

Koviloor Digital Library



தார்கள். மத சித்தாந்தமோ, தத்வமோ அவர்கள் அறிவுக்கு எட்டவில்லை. குறுக்கு வழியில் சென்று குறுகிய காலத்தில் மதத்தினால் ஏற்படும் பாலாபலன்களை அனுபவிக்கலாம் என மக்களுக்குப் பிரசாரம் செய்து, அதில் வெற்றியும் கண்டனர். இம்முயற்சியும், மத எதிர்ப்பும் விந்திய மலைக்கு வடக்கே உள்ள ஆர்யவர்த்தத்தில்தான் அதிகமாக தலைவிரித்தாடியது. தெற்கே திராவிட தேசத்தில் இந்த போலிப் பிரசாரம் பரவ வில்லை என்றாலும், வட நாட்டில் இந்து மதத்திற்கு இந்துக் களிடமிருந்தே வந்த எதிர்ப்பை சிதறடிக்க திராவிட தேசமே வழி காட்டியாக நின்றது என நாம் பெருமையுடன் தலை நிமிர்ந்து இன்று நிற்கக் காரணமாயிருந்த அவதார சீலர் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாள் காலடி க்ஷேத்திரத்தில் தோன்றி, அங்கு பால்யத்திலேயே தாம் ஒரு மதக் காவலர்; தளபதி என்பதை எண் திசையும் எதிரொலி செய்ய வடக்கு நோக்கி புனிதப் போர் நடத்த படையெடுத்தருளினார்!

ஸ்ரீ சங்கர விஜயம் பற்றிய வரலாறுகளையெல்லாம் திரட்டிப் பார்த்தோமானால் பகவான் சங்கரரின் பாதம் படாத இடம் பாரதத்தில் இல்லை என்று உறுதியோடு கூற லாம். முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி இந்து மதத் தின் இதய கமலமாகிய காசி மாக்ஷேத்திரத்தில் சில காலம் தங்கியிருந்து மத எதிர்ப்பு மேதைகளை சவால்விட்டு அழைத்து வாதம் செய்து நமது புராதன மதத்தின் சிறப்பு மிகுந்த ஸ்தானத்திற்கு இதை மறுபடியும் எடுத்துச் சென்று அமர்த்தினார் ஸ்ரீ சங்கரருடைய அத்வைத சித்தாந்தத்தின் மகிமையையும் அதற்கு அனுசரணையான சூத்ர பாஷ்யங் களின் தெளிவையும் மெய்சிலிர்க்கும் ஆன்மீக போதனைகளை யும் கேட்ட மதத்ரோகிகள் ஓடி மறைந்தனர். மதாபிமானி கள், காலடி யளித்த விராடபுருஷனின் பாதார விந்தங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அன்று அவர்கள் போற்றிய விதத்திலேயே அம்மகானின் பாதுகையை தலைமேல் வைத்துக் கொண்டு, அத்வைதத்தை அன்று முதல் தொடர்ந்து பிரசாரம் செய்து பாரத இந்து சமூகத்திற்கு நல்வழி காட்டி

Koviloor Digital Library



உய்வித்து வரும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் சீடர்களாக விளங்கும் அத்வைத பீடாதிபதிகள் இவரையும் நாம் ஜகத்குரு என சற்றும் தயக்கமின்றிக் கூறிக் கொண்டாடுகிறோம்; வணங்கி வாழ்த்துகிறோம்.

இன்று நாடு உள்ள நிலையில், அவர்கள் அத்வைதிகளின் குருபீடம் மட்டுமல்ல, இந்து மதத்தின் குருபீடமாகவே அங்கீகாரம் பெற்று, நாட்டில், பல்வேறு பாகங்களுக்கும் விஜய யாத்திரை செய்து வருகிறார்கள். ஸ்ரீ சங்கரருக்குப் பிறகு பாரத சமுதாயத்தில் பெரும்பான்மையான இந்துக்களும், சிறுபான்மையான புத்த, ஜைன மதத்தினரும் இருந்து வந்தனர். இடையில் எட்டாம் நூற்றாண்டு இறுதியில் இஸ்லாம் படையெடுப்பு மத்திய ஆசியாவிலிருந்து ஏற்பட்டது. மதம் மாற்றும் கொள்கையோடு வந்த முஸ்லீம்கள் இங்கேயுள்ள அரசியல் அலங்கோலம், ஒற்றுமையின்மை, பலஹீனம் எல்லாவற்றையும் கவனித்துவிட்டு படையெடுப்பின் பலனை அவ்வப்போது சீர்தூக்கிப் பார்த்துக்கொண்டே முஸ்லீம ஆட்சியை ஸ்தாபிதம் செய்துவிட்டனர்! அன்றுதான் முதன் முதலாக அந்நிய மதம் பாரத இந்து சமுதாயத்தில் புகுந்து அசைக்க முடியாத இடத்தையும் பிடித்துக் கொண்டுவிட்டது!

அதற்குப் பிறகு சுமார் பதினைந்தாம் நூற்றாண்டில் வர்த்தக விஸ்தரிப்பாக கடல் கடந்து வந்த ஐரோப்பிய நாட்டினர்-டச்சு, பிரஞ்ச், இங்கிலிஷ்-ஆடம்பர உல்லாச வாழ்க்கையே தங்கள் இலட்சியம் என, பெயரளவுக்கு ஆண்டு வந்த முகமதிய மன்னர்களிடம் சலுகைகள் பெற்று வர்த்தகத்தை ஆரம்பித்தனர் அப்போது இஸ்லாம் மதம் பாரதத்தில் இடம் பெற்று விட்டதை உணர்ந்த அந்த அந்நியர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் பெருமையைப் பாமர மக்களுக்குக் கூறி, அவர்கள் கழுத்தில் சிலுவையைத் தொங்கவிட்டனர்! மத்தியிலும், மாநிலங்களிலும், 17-ம் நூற்றாண்டில் முகலாய ஆட்சி ஆட்டம்

Koviloor Digital Library



கண்டபோது வர்த்தகத்திலும், மத மாற்றத்திலும் ஈடுபட்டிருந்த ஐரோப்பியர் கொஞ்சம் கொஞ்சமாக ஆட்சியிலும் தலையிட்டு வெகு சீக்கிரத்திலேயே மகத்தான வெற்றிகண்டு விட்டனர்! முதலில் அவர்களிடையே இருந்த ஒற்றுமை மனஸ்தாபத்தாலும், பேராசையாலும் மண்ணாசை காரணமாக வேற்றுமையாக மாறி, இறுதியில் அவர்களுக்குள்ளேயே மோதிக் கொண்டனர். இந்தப் போட்டாப்போட்டி போர்களில் ஆங்கிலேயரின் ராஜதந்திர மும், விடா முயற்சியும் அவர்களுக்கு நிரந்தரமான வெற்றியைக் கொடுத்துவிட்டது!

முறையாக, சட்ட திட்டத்தோடு ஆட்சிபுரியும் கலையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் ஆங்கிலேயர் என உலக சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். ஏனெனில், சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குள் ஆங்கிலேயரின் மும்பெரும் இலட்சியம் நிறைவேறிய அற்புதத்தை உலகம் கண்டு வியந்தது. முதலாவது அவர்களுடைய வர்த்தகம். இரண்டாவது கிறிஸ்தவ மத பிரசாரம், மூன்றாவது உலகின் ஐந்திலொரு பாகத்தில் அவர்களுடைய ஆட்சிக் கொடியை பறக்கவிட்டது! ஆக, ஆங்கிலேயரின் முப்பெரும் லட்சியம் நிறைவேறியபோது 2500 ஆண்டுகளுக்கு முன்பு பாரத இந்து சமுதாயமாக இருந்த நம் நாடு, கலப்பட சமுதாயமாக மாறி, அந்நிய மதங்களான இஸ்லாத்திற்கும், கிறிஸ்துவுக்கும் நிலையான பாகம் அளித்துவிட்டது! பிரசார மதங்களான அவ்விரு அந்நிய மதங்களும் காட்டு தீ போல் பரவி, பாரத சமுதாயத்திலிருந்து இந்து மதத்தையே விரட்டி விடாமலிருப்பதிலும், பாரதத்தில் இந்து மதமே பெரும்பான்மை மதம் என்று காட்டுவதிலும் நமது பல்வேறு மதத் தலைவர்கள் பகிரங்கமாக எதிர்க்காமல், தங்கள் தபோவலிமையாலும், தூய வாழ்க்கையாலும், இடைவெளியின்றித் திக் விஜயம் செய்வதாலும் உலகம் வியக்க உண்மையை நிலைநாட்டினர்.

உலக சமுதாய தத்வம் இப்போது உலகத்தின் மற்ற எல்லா தேசங்களையும் காட்டிலும் பாரதத்தில்தான் அதிக

Koviloor Digital Library



மாக பரவியுள்ளது. அதற்கேற்றாற்போல் நமது பாரத சுதந்திர அரசு மதச்சார்பற்ற அரசாக தனக்குத்தானே பெயர் சூட்டிக் கொண்டு அதிலிருந்து பிறழாமலிருக்கும் பொருட்டு, அரசியல் சாஸனத்திலேயே கடுமையான விதி முறைகளையும் வகுத்து, உலகத்தின் இரு துருவங்களுக்கும் எட்டும் வகையில் கூறிக் கொண்டிருக்கிறது. ஆகவே, 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்று நாமும் வாழ்த்துக் கூறிவிட்டு, சமுதாயத்தில் அடங்கியுள்ள சமூகங்களையும் சமயங்களையும் சற்று நிதானத்தோடு ஆராய முற்படுவோம்.

• • *

சமுதாயத்தில் பலதரப்பட்ட மதங்கள் இப்போது புகுந்துவிட்டன மதங்களின் அடிப்படையில் மக்கள் பிரிந்து காணப்படுகிறார்கள். ஒரு மதக் கோட்பாடுகளுக்கடங்கிய வர்களை அம்மதத்தின் பெயராலான சமூகம் என அழைக் கிறோம். உதாரணமாக இந்த அகண்ட பாரத தேசத்தில் இப்போது இந்து மதத்தினர் மிக மிக அதிகமானவர்களாத லால் இந்து சமூகம் என அழைக்கப்படுவது முதல் இடத் தைப் பெற்றிருக்கிறது. அடுத்து இஸ்லாம் மதம்: அதற்கு அடுத்தது ஜைன மதம் அதற்கு அடுத்தது கிறிஸ்து மதம்! இப்படியே புத்தமதம், சீக்கிய மதம் என்று சிறிய அளவிலும் மதத்தினர் உள்ளனர்! அந்தந்த மதத்தின் பெயரால் அழைக் கப்படும் சமூகங்கள் எல்லாமாகச் சேர்ந்ததுதான் பாரத சமுதாயமாக உலகின்கண் காட்சி தருகிறது. இப்படி பல மதத்தினர் எல்லா நாடுகளிலும் உள்ளனர். ஆனால் அவர் கள் தாய் மதம் தோன்றிய இடத்திற்கே முதலில் தலை வணங்குகின்றனர். தாங்கள் வாழும் நாட்டின் பிரதான மதத்தினருடைய கண்டிப்பான விதிகளுக்குட்பட்டே அங்கு வாழ்கின்றனர். ஆனால் பாரத சமுதாயத்தில் உள்ள சமூகங் கள் அவ்வாறில்லை. தாய் மதத்தைச் சார்ந்த இந்து சமூகத் தினருக்கு உள்ள சலுகைகள், சுதந்திரம், உரிமை எல்லாம் அந்த சிறுபான்மை மதத்தினருக்கும் இங்கே அரசினரின்

Koviloor Digital Library



"மதச் சார்பற்ற" கொள்கையால் கிடைக்கிறது. இந்தியாவைத் தவிர நாலைந்து கம்யூனிஸ்டு நாடுகளிலும் இந்தச் சலுகை காட்டப்படுகிறது ஆனால் அந்த நாடுகளில் தாய் மதம் என்று எதுவும் கிடையாது. எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையைத்தான் தேச மக்களும், கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசினரால் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. நாம் செய்த பெரிய புண்யவசத்தால் நமது சுதந்திர அரசாங்கம் இந்து மதத்திற்கு அத்தகைய ஊறு விளைவிக்கத் துணியவில்லை. இனி எப்படியோ ?

இந்து சமூகம் உலகில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பதாகக் கணக்கிட்டுக் கூறப்படுகிறது. கிறிஸ்துவ மதமும் இஸ்லாமிய மதமும் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளன. அவை பிரசார மதங்களாதலால் உலகின் பல பாகங்களிலும் பிரசாரம், மதமாற்றம் என்ற ஒரே குறிக்கோளோடு பரவலாகக் காணப்படுகின்றன. இஸ்லாம் மத பிரசாரமும், மதமாற்றமும் கட்டாய முறையில் இருபதாம் நூற்றாண்டில் நடைபெறவில்லை என்றும் மனித இன ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ மதம் மட்டும் தனது விஸ்தரிப்பை நிறுத்தவில்லை ஆகவே, தான் உலகத்தில் கிறிஸ்தவ சமூகம் பெரிதாக இருக்கிறது.

பிரசார சமூகங்கள் இனிமேலும் தோன்றலாம், தோன்றாமலும் இருக்கலாம்! ஆனால் பிரசாரமின்றி உலகத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ள பாரத இந்து சமூகத்தை இனி எக்காலத்திலும் துண்டாட முடியாது என்று உறுதியுடன் சொல்லுமளவுக்கு நமது மதாசாரியர்களின் அரும்பெரும் புனிதத்தொண்டு பலமடைந்து விட்டிருக்கிறது. அந்நிய மதத்தினர் தாய் மதமான இந்து மதத்திற்குத் திரும்ப விரும்புபவர்களின் எண்ணிக்கைதான் நாளுக்கு நாள் பெருகி வருகிறதே தவிர, இந்து சமூகத்திலிருந்து அந்நிய மத சமூகத்தில் பற்றுகொண்டு மாறுபவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்! ஆனால் விஷம்போல் ஏறிக்கொண்டு

Koviloor Digital Library



வரும் ஜனத்தொகையும், சமுதாயத்தை பிடித்துள்ள பணப் புழுக்கந் தீராத தொத்து நோய்களும், வேலையில்லாத் திண் டாட்டங்களும், வர்த்தக தொழில்துறை தேவைகளும் தேக்கங்களும் அரசினராலேயே தீர்க்கப்பட வேண்டியவை. ஆன்மீகத் தலைவர்களுக்கு மாந்தரைப் பிடித்தாட்டிவைக்கும் இந்தப் பொருளாதார பேய்களை எப்படி விரட்டமுடியும்! இவை மேலும் மேலும் வளர்ந்தால் சமுதாயத்திலுள்ள பல்வேறு மதச்சார்புடைய சமூகங்களிலும் சமய சந்தர்ப் பத்திற்கேற்ப மனமாற்றம் ஏற்படக்கூடும். ஆனால் அப்படி யொரு நிலை முற்றிப்போய் நமது புராதன இந்து சமூகத் திற்கு கெடுதல் நேரிடுமானால், அரசாட்சியிலமர்ந்துள்ள வர்களே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டிவரும். ஏனெ னில், சுதந்திர அரசை நிறுவும்போதே அவர்கள் ஆன்மீகத் துறையில் பெரும்பான்மை மதமாகிய இந்துமதத் தலைவர் களின் முழுமையான அங்கீகாரத்தைப் பெறுமலும் ஆலோ சிக்காமலும் "மதச் சார்பற்ற அரசு" என்று பிரகடனம் செய்துவிட்டார்கள். விஷ விருக்ஷத்தின் நிழலில் ஒதுங்கிய வர்கள் விஷக் காற்றைத்தான் சுவாசிக்கவேண்டும். தொடர்ந்து அதன் நற்பயனையோ விபரீத பயனையோ அனு பவித்துத்தான் ஆகவேண்டும்: நிற்க.

* * *

தேச சமூகத்தின் பல பிளவுகளே சமயம் என்று கொள் வதில் தவறில்லை. இந்து மதத்தில் உள்ள சமயங்களை முதலில் பார்ப்போம். ஸ்ரீ பகவத் பாதாளின் அத்வைத சித்தாந்தம் ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டுகள் இந்துமதத்தின் ஒரே அங்கமாக இருந்துவந்தது. ஆனால் சுமார் பத்து பதினோராம் நூற்றாண்டில் ஸ்ரீ ராமானுஜர் அவதரித்து, ஆழ்வாராதிகள் மறைமுகமாக பரவச் செய்துகொண்டிருந்த வைஷ்ணவ சம்பிரதாயத்தை ஆராய்ந்து சீர்ப்படுத்தி, விஸிஷ் டாத்வைத சித்தாந்தத்தை உருவாக்கினர். அம்மகானு டைய தீவிர பிரசாரத்தின் காரணமாக இந்து மதத்தில் வைஷ்ணவ சமயம் தோன்றலாயிற்று. ஏற்கெனவே யிருந்த

Koviloor Digital Library



புத்த, ஜைன மதங்களோடு வைஷ்ணவ சமயமும் சேர்ந்து கொண்டது. சைவ சமயம் என்று பின்னர் பிரஸித்தி பெற்று விளங்கச் செய்ய அடிகோலியவர்கள் சைவ சமயசாரியர்களும், நாயன்மார்களும் இவர்களும் தக்ஷிண பிரதேசமாகிய திராவிடத்தில் பலமுறை யாத்திரை செய்து, மக்களுடைய சைவ சமயம்—சித்தாந்தத்தை—பற்றிய உண்மைகளை பிரசாரம் செய்து, வெகு வேகமாகப் பரவிக் கொண்டிருந்த வைஷ்ணவ சம்பிரதாயத்தைத் தடுத்தார்கள். ஆக, இந்து மதத்தின் இரண்டாவது அங்கமாக சைவசமயம் தோன்றலாயிற்று. பின்னர் வந்த மதத் தலைவர்களான ஸ்ரீமத்வாசாரியர், ஸ்ரீ வல்லபாசாரியர் போன்றவர்கள் வைஷ்ணவ சமயத்துக்கு புது மெருகு கொடுத்து நாடு பூராவுமே பிரசாரத்தை விஸ்தரித்து இந்து மதத்தின் சிறப்பே விஷ்ணு ஆராதனையில்தான் அடங்கியுள்ளது என்று பறைசாற்றினர் சைவமும், வைஷ்ணவமும் இந்து மதத்தின் முக்கிய சமயங்களாக சித்தாந்த பலத்தோடு அங்கங்களாகி விட்டன ஆனால் பகவத் பாதாளின் அத்வைத சித்தாந்

Koviloor Digital Library



தத்தை பின்னர் வந்தவர்கள் ஏற்காததோடு எதிர்த்து, தங்கள் வாதத்திற்கேற்ப சித்தாந்தங்களைத் தோற்றுவித்த போதிலும், ஸ்ரீ ஆதிசங்கரரின் அத்வைத பீடங்களின் தலைவர்கள் தங்களுடைய ஆதிகுரு வகுத்த வழியிலிருந்து விலகாமல், சிவ வைஷ்ணவ பேதமின்றி மக்கள் நல்வாழ்வுக்கான பக்திமார்க்கத்தோடு சித்தாந்தத்தைப் போட்டுக் குழப்பாமல், இதர சித்தாந்த தெய்வங்களான சக்தி, சிவம், விஷ்ணு ஆகிய மூன்று தெய்வங்களையும் எவ்வித வித்தியாசமும் காட்டாமல் ஆராதித்தார்கள்.

சைவமும்—வைஷ்ணவமும் நூதன சமயக் கோட்பாடுகளுடன் ஒன்றோடொன்று மோதிக் கொண்டபோதெல்லாம், அத்வைதத் தலைவர்கள் சமயச் சார்பின்றி செயல்பட்டு வந்ததாலேயே இன்று பாரத இந்து சமூகத்தில் அவர்களுக்குத் தனிச் சிறப்பு இருந்து வருகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டில் நாம் செய்த பெரும் பாக்கியமாக சமய பேதம் பாராட்டாமல் இரு பெரிய சமயத்தினரும், மற்றும் அறுவகை வழிபாட்டு உபாசனைக்காரர்களும் அத்வைத சித்தாந்த தலைமைப் பீடாதிபதிகள் சஞ்சாரம் செய்யும் இடங்களில் எல்லாம் உற்சாகத்தோடு கூடி, பீடாதிபதிகளுக்கு வரவேற்பு கொடுத்து, அவர்களை வழிபட்டு, அந்தத் தவயோகிகளின் கருணைக் கடாட்சத்தின் பெரும்பயனை அடைகிறார்கள்.

பாரத சமுதாயத்தில் இந்து சமூகத்தில் மட்டும்தான் இப்படி சமயப் பிரிவுகள் தோன்றிவிட்டதாக யாரும் கருத வேண்டாம், புத்த ஜைன, மதங்களிலும், முஸ்லிம் கிறிஸ்து மதங்களிலும் வெவ்வேறு கோட்பாடுகளைக் கொண்டவர்கள் தங்களுக்கென ஒரு பெயரை வைத்துக்கொண்டு அப்பெயரிலேயே சமயங்களை ஸ்தாபித்து, மத வழிபாடுகளை நடத்தி வருகிறார்கள். மதச்சார்புடைய இக்கட்டுரையில் பிற மதங்களைப்பற்றிய விவரங்களை எழுதுவது பொருந்தாது. என்ற காரணத்தால் 'இந்த பிற மத சமயங்கள்' பற்றிய வர்ணனையை இப்போதைக்குத் தள்ளிப் போடுவோம்.

Koviloor Digital Library

# 4. திராவிடம் - ஆர்யம்

அகண்ட பாரத தேசத்தின் நான்கு திசைகளுக்கும் யாத்திரை செய்து, தமது அத்வைத சித்தாந்தமும், ஸநாதன மதமும் உலகம் உள்ளளவுக்கு பெருமையுடன் இருக்க நான்கு பீடங்களை ஸ்தாபித்து, ஸ்ரீ காஞ்சிமாநகரில் ஸர்வக்ஞபீடம் ஏறி ஆன்மீக சக்கரவர்த்தியாக, ஆர்யம்—திராவிடம் இரண்டிலும் ஆட்சி புரிந்தவர் ஸ்ரீ ஆதிசங்கரர் நான்கு திசைகள் என்று குறிப்பிட்டதை பின்னர் ஜனத்தொகை, இயற்கையமைப்பு, நாகரிகம் ஆகியவற்றின் ஆதாரத்தில் விந்திய பர்வதத் தொடருக்கு வடக்கில் உள்ள பாரதப் பிரதேசத்தை ஆர்யவர்த்தம் என்றும், அங்கு வாழும் மக்களை ஆர்யர்கள் என்றும், விந்திய பர்வதத்திற்குத் தெற்கில் குமரிமுனைவரை உள்ள பூமியை திராவிடம் என்றும், அங்கு வாழும் இந்துக்களை திராவிடர்கள் என்றும் அழைத்தனர் வேத, வேதாந்தங்களும், இதிகாஸ புராணங்களும், ஏனைய சாஸ்திரங்களும் வடமொழியான சம்ஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டும், பேசப்பட்டும் வந்ததால் பெரும்பான்மையான இந்து மதத்தினரின் மொழியாக சம்ஸ்கிருதம் கருதப்பட்டு வந்தது. மேலும் வடதேசத்தில்தான் இவையாவும் தோன்றியதால் வடமொழி நூல்கள் என அவற்றையும் அந்த வடமொழியை ஆர்யமொழி என்றும் பிரித்துக் கூறினுர்கள். ஆகவேதான், ஆர்யம், திராவிடம் என நாடு துண்டாடப்பட்டதாக நமது சரித்திராசிரியர்களில் சிலர் குறிப்பிட்டிருக்கிறுர்கள். ஓரளவுக்கு உண்மையும் அதுவே! ஆர்யபகுதி மொழி, கலை, கலாசாரம் எல்லாம் திராவிட தேசத்தின் நடைமுறையோடு ஒற்றுமையாக இருந்ததில்லை. திராவிட மொழிகளில் சம்ஸ்கிருத ஊடுருவல் அதிகமாயுள்ளதால் பல நூறு வருஷங்களுக்கு முன்பு, அதாவது பகவத் பாதாள் காலத்தில் பாரத

Koviloor Digital Library



தேசமெங்கிலுமே சம்ஸ்கிருதம்தான் பேசுவதற்கும் எழுதுவதற்கும சகஜமாக உபயோகிக்கப்பட்ட மொழி எனக் கூறலாம். அதற்கு முன்பிருந்த திராவிடத்தில் இப்போதுள்ள தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் இருந்திருந்தால் கலப்படமற்ற நூறுக்குநூறு திராவிடராக அவதரித்த ஸ்ரீ ஆதிசங்கரர் தமது சூத்ர பாஷ்யங்கள். சித்தாந்த ரகஸ்யங்கள், பக்தியோக ஞானயோக கவிதா ச்ருஷ்டிகள் எல்லாவற்றையும் வடமொழி என்றும் ஆர்யமொழி என்றும் இன்று வாதம் செய்யும் சம்ஸ்கிருதத்தில் செய்தருளியிருக்க வேண்டியதில்லை. ஏதேனும் ஒரு திராவிட மொழி, முக்கியமாக அம்மகான் அவதரித்த கேரள மொழியில் எழுதி, இமயத்திலிருந்து குமரி வரை எதிரொலி செய்ய பிரகடனப்படுத்தியிருக்கலாம். அவ்வாறு ஒரு நிகழ்ச்சி ஏற்படாததிலிருந்து பாரத தேசத்தின் ஆர்யம்-திராவிடம் ஆகிய இரு பிரதேசங்களிலுமே சம்ஸ்கிருதம்தான் உபயோகத்தில் இருந்தது என்று நாம் ஊகிப்பதிலும் தவறில்லை. ஆனால் திராவிட மொழிகளின் புராதனத் தன்மை—முக்கியமாக தேனினுமினிய நம் தீந்தமிழை—பற்றி ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும்போது வடமொழியான சம்ஸ்கிருதம் வேதத்தைப் போன்றே அநாதியானது. அது தேவ பாஷை. அதன் காலத்தை நிர்ணயிப்பது இயலாது. ஆனால் பின்னர் வந்த மொழிகளின் காலத்தை சுமாராக நிர்ணயிக்கலாம்; அப்படி கணக்கிட்டுப் பார்த்து தமிழும், தெலுங்கும் ஏறக்குறைய ஆறுயிரம் ஆண்டுகளாக இருந்து வரவேண்டுமென அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள் தமிழ் மொழியின் தெய்வத் தன்மையைப் பற்றியும், தணிகாசல முருகனுடைய அருள் உபதேசத்தால் அகத்திய மாமுனி தமிழ் மொழியைப்பெற்று அதுவரை வடமொழி ஆர்யமுனிவராக இருந்தவர் திராவிட தமிழ்மொழி முனிச்ரேஷ்டராகி விட்ட விந்தை பற்றியும், அதைத் தொடர்ந்து வந்த வரலாறுகளனைத்தையும். எவ்வித சர்ச்சைக்கும் உட்படாமல் தமிழ் இனத்தினர் ஏற்கின்றனர். ஆனால், மொழி கலை, கலாசாரம், பழம் பெரும்

Koviloor Digital Library



சித்தர்கள். ஆழ்வாராதிகள், நாயன்மார்கள் சரித்திரங்களை எழுதுவோர் ஒருமுகமான அபிப்பிராயத்திற்கு ஒரு போதும் உட்படமாட்டார்கள்.

அதே போல்தான் திராவிடத்தின் பெருமையை இமயம் வரை எட்டச் செய்த நமது இந்து மத பரமாசாரியர்கள் பற்றிய சரித்திரம் வெவ்வேறுவிதமாக அமையப் பெற்றிருக்கிறது. இந்து மதத்தின் சிற்பிகள் என தேசம் பூராவும் ஒருங்கே போற்றப்படும் ஸ்ரீ பகவத் பாதாள், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீவல்லபர், ஸ்ரீமத்வர், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் ஆகிய நால்வரும் வெவ்வேறு சித்தாந்தங்களைத் தோற்றுவித்தனர். தங்கள் சித்தாந்தங்களுக்கு நிரந்தரமாக ஜீவன் இருக்க வேண்டி சூத்ர பாஷ்யங்களையும், பக்தி, யோக, ஞானயோக கர்மயோக மார்க்கங்களையும் சமூகம் சரிவர செய்ய மதத்துக்கு அனுசரணையாக தேவாராதனையையும் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வகையில் பார்த்தால் ஸ்ரீபகவத் பாதாள் இந்து சமூகத்திற்குச் செய்த தொண்டு மிக மிக முக்கியத்வம் வாய்ந்தது. அந்த அவதார புருஷருடைய ஆன்மீக சிருஷ்டிகளும், அறுவகை வழிபாடு முறையும் சித்தாந்த ரீதியில் இரு துருவங்கள் என்றாலும், சாதாரண, எளிய, பாமர மக்களின் நலனை உத்தேசித்து கர்ம யோகத்தையும், பக்தி யோகத்தையும் பிணைத்து ஷண்மத ஸ்தாபனத்தை (அறுவகை வழிபாடு) தோற்றுவித்தார். இந்த ஆறு தெய்வங்களுக்குள் அடங்கியவைதான் இந்து மதத்தினர் கொண்டாடும் புராணங்களிலும், இதிகாசங்களிலும் வரும். முப்பத்து முக்கோடி தேவதைகளும்! மத சம்பந்தமான ஆராய்ச்சியிலேயே ஆயுள் பூராவும் ஈடுபட்டிருக்கும் அறிஞர்களும், மெய்ஞ்ஞானத்தில் ஊறிப்போன அடியார்களும் ஸ்ரீ ஆதிசங்கரருடைய இந்து மதத் தொண்டை எல்லாவற்றிற்கும் மேலாகத்தான் வைத்துப் பேசுகிறார்கள்: எழுதுகிறார்கள்! இதற்கு முக்கியதொரு காரணமாக அமைந்திருப்பது அம்மகான் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு சமயத்திலும் விசேஷப்பற்று

Koviloor Digital Library



வைக்கவில்லை. அறு சமயமும் அவருக்கு ஒன்றாகவே இருந்து வந்தது போல் அவருக்குப் பின்னால் வரும் அத்வைத பீடாதிபதிகளும் பொதுவான சமயபபற்றுக் கொள்கையையேதான் கடைப்பிடிக்கிறார்கள், இன்னும் கூறப் போனால் இந்த மாபெரும் பீடர் பரம்பரையின் காலத்தில் இந்துமததகில் பிறமதங்களின் ஊடுறுவலும் அம்மதங்களுக்குள்ளேயே தோன்றிய வெவ்வேறு சமயங்களும்கூட இந்த பீடாதிபதிகளுக்கு வேற்றுமை உணர்ச்சியை வளர்க்கவில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு இவர்கள் கடைப்பிடித்த கொள்கையும், ஒரு காரணமாகும். அந்நிய ஆங்கிலேய ஆட்சியில் தீவிர கிறிஸ்தவ மத பிரசாரம் இருந்த போதுகூட, நமது மதத் தலைவர்கள் நிதானத்தோடுதான் செயல்பட்டார்கள். புராதன இந்து மதத்தின் சிறப்பைக் கூறி, அவ்வழியைப் பின்பற்றி வந்ததால்தான் அந்நிய மத ஆட்சி பீடம் நமது குரு பீடங்களை கண்காணிக்கவில்லை : கட்டாயப்படுத்தி அவர்கள் வழிக்கு வர வற்புறுத்தவில்லை! நிற்க;

ஆர்யர்களை பிராமணர்கள் என்றும், திராவிடர்களை பிராமணரல்லாதார் என்றும், திராவிட நாட்டில் உள்ள பிராமணர்கள் எல்லோரும் ஆர்யர்களேதான் என்றும் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன்பு 'சுயமரியாதை கட்சி' ஒன்று தோன்றி, திராவிட மக்களைப் பிளவுப்படுத்தி, குழம்பிய குட்டையில் தூண்டிலைப் போட்டு விளையாடியது. அக்கட்சியின் விபரீத விளையாட்டால் இன்னல்களை அனுபவித்த மத, சமயப்பற்றுள்ள அநேகருக்கு ஆங்கிலேய ஆட்சி ஏதோ கண் துடைப்பது போல் பாதுகாப்பு அளித்ததே தவிர 'மதத்தில் குறுக்கிட மாட்டோம், பாதுகாப்போம்' என விக்டோரியா ராணி அறிவித்த பிரகடனத்தின்படி பாதுகாப்பு அளிக்கவில்லை. உள்நாட்டு மதம் பற்றிய பூசல் எனப் புறக்கணித்துவிட்டு, தங்களுடைய கிறிஸ்துவமத பிரசார இயந்திரத்தை மேலும் முடுக்கிவிட்டனர். பிற பிரதேசத்தைக் காட்டிலும், ஆங்கிலேய ஆட்சியின்போது கிறிஸ்தவ மத பிரசாரத்திற்கு அதிகமாக பலியாகியது திரா

Koviloor Digital Library



விடமேதான். மேலும் இந்து மதத்தினர் என சொல்லிக் கொண்டு மதத்துரோகிகள் நாஸ்திக பிரசாரம் செய்து ஆங்காங்கே சிறிதளவு வெற்றியும் கண்ட பிரதேசமும் திராவிடம்தான். இவர்களுடைய நாஸ்திக பிரசாரம் அந்நிய மதம் பரவக் காரணமானதாலேயே இவர்கள் இந்து மதத்தினரின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டார்கள். ஒரே மதத்தினரிடையே இரு கருத்துக்கள் தோன்றி பரஸ்பரம் பகைமையும் ஏற்பட்டுவிட்டால், அங்கு அந்நியருடைய பிரவேசத்திற்கு தடை எப்படி இருக்க முடியும்?

திராவிட தேசம், இத்தனை முறைகேடுகள் இருந்தும் உண்மையிலேயே பாரத சரித்திரத்தில் பெரும்பாக்கியம் பெற்றிருக்கிறது. இந்த உண்மையை சீர்தூக்கிப் பார்த்து உணர சிறிது தேச சரித்திர சம்பவங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம்.

விந்திய மலைக்கு வடக்கே இருக்கும் பூமி முழுவதும் கிழக்கில் உள்ள ஒரிஸா மாநிலத்தின் ஒரு பகுதியும், மேற்கேயுள்ள மகாராஷ்டிரத்தில் வட பகுதியும் ஆர்ய வர்த்தத்தைச் சேர்ந்தவை என்று வழக்கில் இருந்து வருகிறது. இப்பிரதேசத்தில்தான் இந்து மதத்தின் ஜீவன் வேத-உபநிஷத காலத்தில் அடக்கமாயிருந்தது. ஸ்ரீபகவத் பாதாள் தேச யாத்திரையை ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொண்டு, இந்த மதத்தைத் தாய் மதமாகக் கொண்டு அதில் அநீதமான, கொடூரமான, நியாயத்திற்கு உட்படாத பிரிவுகளை உண்டாக்கிய நமதுமதத்தினரிடமிருந்தே வந்த சவால்களை ஏற்று, காசி க்ஷேத்திரத்தில் அப்பிரிவினரின் தலைவர்களை வாதத்துக்கு அழைத்து, வெற்றிகண்டார். ஸ்படிகம் போன்று உலகில் பிரகாசித்த இந்து மதத்திற்கு களங்கம் இம்மதச் சார்புடைய தீவிர வாதிகளிடமிருந்தே வந்த பிறகு, காலப்போக்கில் கருத்து வேற்றுமை ஏற்படுவதுசகஜம்தான். இந்த ரீதியில் புத்த, ஜைன மதங்கள் தோன்றி ஆர்ய பூமியை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டன. அப்போது ஆங்கு ஆட்சிபுரிந்த இந்து மன்னர்கள், மாமன்னர்கள் எல்லோரும்

Koviloor Digital Library



எந்த மதத்தில் மீது பற்று வைப்பது, எதை ஏற்பது எதை ஒடுக்குவது என்று புரியாத நிலையிலேயே சுமார் ஆறு ஏழு நூற்றாண்டுகள் குழம்பித் தவித்தனர். நேற்று இந்து மதம். இன்று புத்தமதம், நாளை ஜைன மதம் என்று எள்ளி நகையாடும் விதத்தில் சில மன்னர்கள் மதம் மாறித் தவித்தார்கள். என "வின்சென்ட் ஸ்மித்" என்ற ஆங்கில சரித்திராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய உள்நாட்டுக் குழப்பத்தினிடையேதான் ஆர்ய பிரதேசத்தில் அந்நிய படையெடுப்பு ஏற்பட்டது. மத்திய ஆசியாவிலிருந்தும் பாரசிக நாட்டிலிருந்தும், கொடுமைக்கும் கோர தாண்டவத்திற்கும் பெயர்போன முஸ்லிம் மத வெறியர்கள், அந்தந்த நாட்டு மன்னர்களின் தலைமையோடும், பெரும்படைகளை திரட்டிக்கொண்டு இமயத்திலுள்ள குகைவழியாக பாரத புண்ய பூமியில் புகுந்து முதலில் கொலை, கொள்ளையிலும், பின்னர் மதமாற்றத்திலும் மின்னல் வேகத்தில் செயல்பட்டு முன்னேறினார்கள். ஏற்கெனவேயே பிளவுபட்டுக் கிடந்த பிரதேசமாக ஆரியம் இருந்துவந்ததால் முஸ்லிம் படையெடுப்புக்கு மகத்தான வெற்றி, எளிதாக எதிர்ப்பு அதிகமின்றிக் கிடைத்துவிட்டது. நாளடைவில் பரந்த ஆர்ய பூமியை தங்களது ஆட்சிக்குட் படுத்திக்கொண்டு, பிறகு கொலை கொள்ளை முதலிய தீயச் செயல்களைக் குறைத்துக்கொண்டு பல்வேறு பலாத்காரத்துக்கு மக்களை உள்ளாக்கி, இஸ்லாம் மதத்திற்கு மாற்றினார்கள். இத்தகைய கொடுமைகளையும், கோர யுத்தங்களையும் பல நூற்றாண்டு காலம் தொடர்ந்து அனுபவித்த காரணத்தாலேயே ஆர்ய பூமி திராவிடர்களுக்கு அந்நிய பூமியாகத் தோன்றத் தொடங்கிவிட்டது. வெவ்வேறு மதக் கோட்பாடுகளுக்கிடையே அடங்கி ஒடுங்கி நடுங்கிக்கொண்டு இருந்தும்கூட ஆர்ய மக்கள் இந்து மதம் போதித்த சித்தாந்த உண்மைகளையும் யோக மார்க்கங்களையும் அதிகமாக வழக்கில் வைத்துக் கொள்ளாமல் "சரணாகதி தத்வம்" ஒன்று தான் புகலிடம் என்று பக்தி மார்க்கத்தை மேற்கொண்டார்கள்!

Koviloor Digital Library



ஆனால் இதற்கும் அப்போது அங்கு இருந்த முகம்மதிய, முசலாய ஆட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். மதச் சடங்குகளுக்கு சுதந்திரம் கிடையாது என்று மூர்க்கத்தன மாக இந்து மதத்தினரை அடக்கி ஆட்சி செலுத்தினர். அப்படியிருந்தும், துகாராம், துளஸிதாஸ், கபீர்தாஸ், ஸ்ரீவல்லபாசாரியர், ராமாதாசர் சைதன்யர் போன்ற மகான்கள் சொல்லவொண்ணாத பயங்கர கொடுமைகள் இழைக்கப் பட்ட காலத்தில்கூட இறைபணியிலும், பக்தி பூர்வமான கைங்கரியங்களிலும் ஈடுபட்டு, திகைத்துத் தவித்த ஆர்ய மக்களுக்கு வழிகாட்டியாகவும் தைரிய மூட்டும் மதத் தலைவர்களாகவும் விளங்கினர்.

நாம் செய்த புண்ய வசத்தால் திராவிட பகுதியில் மேற் குறிப்பிட்ட கொடுமைகள் பரவவில்லை. ஆங்காங்கே சிறு சிறு பூசல்கள் தோன்றும். ஆனால் இருந்துள்ள மத ஒற்றுமை யிலிருந்து எழும் எதிர்ப்பு அப்பூசல்களை ஈசல்களைப்போல் மறையச் செய்துவிடும். ஆனால் இங்கு இந்து சமூகத்தில் அப்போது சமயப்பூசல்கள் பரவலாகவே இருந்து வந்தன. சைவ வைஷ்ணவ பேதம், புத்த-ஜைன பேதம், சித்தாந்த சார்புடையவர்கள் இடையே ஏற்படும் மோதல்கள் எல்லாம் ஓரளவுக்கு மத ஒற்றுமை குலையக் காரணமாயிருந்தன. ஆனால் அந்நிய மதங்களான இஸ்லாம், கிறிஸ்து இரண்டும் விந்திய பர்வதத்தைத் தாண்டிக் குதிக்காமலேயேதிராவிடத் தில் புகுந்துவிட்டன. முஸ்லீம் மதத்தினர் ஆர்யத்தில் ஆடிய வெறியாட்டத்தில் பத்து சதவிகிதமே திராவிடத்தில் ஆடினார்கள். தேனொழுகப் பேசிப் பேசியும் ஜீவகாருண்யத் தின் ஜீவ ஊற்றுபோல் நடித்தும், கிறிஸ்து மதத்தைப் பரப்பிய பாதிரிமார்களும். முஸ்லீம்களும் கடல் மார்க்கமாக, மேலைக்கடலோரப்பகுதியில் வியாபார நோக்கத்தோடு இறங்கி, நாளடைவில் மதப்பிரசாரத்தால் மத மாற்றம் செய்து, திராவிட பிரதேச வாசிகளோடு இரண்டறக்கலந்து விட்டார்கள். இவ்வாறு, நமது இந்து மத சகோதரர்கள், இந்திய முஸ்லீம்களும், இந்திய கிறிஸ்தவர்களுமாக மதம்

Koviloor Digital Library



மாறிய பிறகு, எப்படி பாரத இந்து சமுதாயம் என்று நாம் கூறிக்கொள்ள முடியும்? ஒரு மதத்தில் பல்வேறு சமயங்கள், வழிபாட்டு பிரிவினர் இருக்கலாம். ஒரு மதத்தில் இன்னொரு மதம் புகுந்துவிடும்போது சமுதாயம் பிளவுபட்டு விடுகிறது.

ஆர்யப்-திராவிடம் என்று இன்றைய இருபதாம் நூற்றாண்டில் யாரும் பேசத் தேவையில்லாதபடி பிரிட்டிஷாரின் இருநூறு ஆண்டு ஆட்சி பாரத தேசத்தை ஒன்று படுத்திவிட்டது. அந்நிய நாட்டினர் இந்நாட்டுக்குச் செய்த பெரியதொரு சேவையாகும் இது. வெளியேறிப் போகும் போது ஆங்கிலேயர் தேசத்தை மதத்தின் அடிப்படையில் துண்டாடினார்கள். நல்லவேளையாக இந்து, முஸ்லீம் என்ற இரு பெரிய மதத்தின் பெயரால் நாட்டைப் பிரித்து சுதந்திரம் வழங்கினார்கள். அவ்வாறின்றி, அவர்கள் இந்நாட்டிற்கு வந்தபோது இருந்த நிலைக்கே தேசத்தைப் பல துண்டுகளாக்காமலும், ஜாதி, மத, இன பேதப்பிளவுகளாகத் துண்டாடாமலும் விட்டு வைத்தார்கள்! ஏதோ ஒரு விதத்தில் இருநூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர்கள் நன்மை செய்ய வேண்டாமா? அந்த நன்றியோடுதான் நமது வேத-உபநிஷத காலத்தில் காசியையும், ராமேச்வரத்தையும், அதாவது (வடக்கு-தெற்கு இரண்டையும்) ஒன்றுபடுத்திய இந்து மதத்தையே மறைமுகமாக மறுபடியும் பாரதத்தில் அரியாசனத்தில் அமர்த்திவிட்டுச் சென்றார்கள். அவர்கள் காட்டிய நல்வழிகளில் இந்த ஒன்றை மட்டும் ஆட்சியில் குறிப்பாயிருந்த நமது காங்கிரஸ் தலைவர்கள் மாற்றவில்லை. "அந்நியன் வந்து நம் தேசத்தை இணைப்பதாவது" என்று அவர்கள் தேசீய கொள்கைக்கு ஏற்ப, இணைந்த பிரதேசத்தைப் பிளக்கும் பணியை எடுத்த எடுப்பில் மேற்கொள்ளாமல், சற்று காலம் தாழ்த்தி மொழிவாரி மாநிலங்களாகப் பிரிவினை செய்து அரசியலை மட்டும் அங்கே புகுத்தினார்கள். ஆனால் பிரிட்டிஷார் காலத்தில் ஒன்றுக்கப்பட்ட ஆன்மீக பாரதம் பிரிக்கப்படவில்லை.

Koviloor Digital Library



இவ்வாறு காங்கிரஸ் ஆட்சியில் மொழி வாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட திராவிடத்தில் நான்கு மாநிலங்களே இடம் பெற்றிருக்கின்றன. தேசத்தின் ஆன்மீக அரசு திராவிடத் தலைவர்களால்தான் ஸ்தாபிக்கப்பட்டது. நமது மதத்தலைவர்கள் போதித்த அரிய பொன் மொழிகளைத் தான் ஆர்யமும் கொண்டாடுகிறது. விந்திய மலைக்குத் தெற்கே வரும்போதெல்லாம் ஆர்ய வர்த்தக யாத்ரீகர்களுக்கு இங்குள்ள ஆன்மீகக்காட்சிகள் கண்களை நிரப்பிவிடுகின்றன. கேரளத்தில் தோன்றிய ஆதிசங்கரருக்கு இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் தான் காலடியில் புனித சின்னம் அமையப் பெற்றது. அதுவரை கேரள வாசிகள் தங்கள் வாரிசுகளுக்கு ஸ்ரீ சங்கரரின் பெயரை மட்டும் வைத்து அழைத்தார்களே தவிர, கேரளத்திலிருந்து உதயமாகி இமயவரை ஒளி பரப்பிய ஸ்ரீ பகவத் பாதாளின் அத்வைத சித்தாந்தத்தை அவர்கள் அறியவே இல்லையோ என்ற அளவுக்கு அசட்டையாகவே இருந்துவந்தார்கள். ஆனால் இப்போது தக்ஷிணத்திலுள்ள ஸ்ரீ சங்கரருடைய பீடாதிபத்யத்தை ஏற்றிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர்களான ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபதிகளும், ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளும் அடிக்கடி புனித யாத்திரையை மேற்கொண்டு கேரளம், உள்ளிட்ட நமது பாரத தேச மாநிலங்கள் எல்லாவற்றிற்கும் விஜயம் செய்து, ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் மதாபிமானம், மதத் தொண்டு பற்றி பிரசாரம் செய்து வருவதால் மீண்டும் அத்வைதமும், அதன் சிற்பியான ஸ்ரீ ஆதி சங்கரரும் பாரத தேசமெனும் மதத்தேருக்கு அச்சாணியாக அமைந்துவிட்ட விந்தையை இன்றைய தலைமுறை கண்டானந்தமடைகிறது!

காலடியில் தான் சங்கரர் அவதரித்தார் என்று கர்ண பரம்பரைக்—கதைகள் வாய் வழியாகவும் எழுத்து மூலமாகவும் வந்தபோதிலும் கேரளத்தில் அந்தப் புண்ணிய தலம் எது என்பது கண்ணுக்கும், கருத்துக்கும் புலப்படாத புதிராகவேதான் இருந்து வந்தது. இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில், கும்பகோணம் நடுக்காவேரி ஸ்ரீநிவாச சாஸ்திரி என்ற

Koviloor Digital Library



அறிஞர், சாஸ்திர மேதை சங்கர பகவத் பாதாள் விஜயம் பற்றிய ஆராய்ச்சியில் பல வருஷங்களாக ஊறிப்போனவர் "எப்படியும், அப்புனித தலமான காலடியைக் கண்டுபிடித்து விடுவது" என்ற சங்கற்பத்தோடும், பரமாசாரியாளான ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளின் அனுக்கிரக பூர்வமான ஆசிகளோடும் கேரள யாத்திரையை மேற்கொண்டார்.

ஸ்ரீ ஆதிசங்கரர் காலத்தில் இருந்த பாரத சமுதாயம் இப்போது இந்திய உபகண்டத்தில் எங்குமேயில்லை. என அறுதியிட்டு கூறுமளவுக்கு எல்லாம் மாறிவிட்டிருக்கும் இக் காலத்தில் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரின் முயற்சியை டயித்தியக் காரத்தனம் என்று சிலர் பரிகசித்தார்களாம். அதற்கேற் றாப்போல் முதல் இரண்டு யாத்திரைகளில் கேரளத்தில் அம்மகானுக்கு எவ்வித உருப்படியான தகவலும், கிடைக்க வில்லை; நாட்டில் அப்போது பரவலாயிருந்து வந்த சித்தாந்த மும் கேரள வாசிகளின் பக்தி யோகத்தை ஊ றுவிச் செல்ல வில்லை. சங்கரன், நாராயணன் ஆகிய இரு பெரும் தெய்வங் களும், அன்னையின் பகவதி சொரூபமும் தான் அவர்களுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன. இந்த தெய்வங்களின் பரிவார தேவதா நிலையங்களும் அவர்கள் ஆராதனையில் இருந்து வந்தன. ஸ்ரீநிவாச சாஸ்திரிகளின் மூன்றாவது கேரள விஜயத்தின் போது குருவாயூரப்பன் க்ஷேத்திரத்தில் அவருக்கு ஸ்ரீசங்கரருடைய அவதார தலமான காலடி பற்றிய சில உண்மைகள் லேசாக தெரிய வந்ததும், அவர் பெரியதொரு ஆராய்ச்சியாளராகவே மாறிவிட்டார்! அதன் பயனாக அவர் ஸ்ரீசங்கர பகவத் பாதாளின் கருணைக்குப் பாத்திரமாகி, காலப்போக்கில் ஊரும் பேரும் மாறி, தேய்ந்து திரிந்து காணப்பட்ட போதிலும், இன்று காலடி என உலகம் உற்று நோக்கும் தலத்தைக் கண்டுபிடித்து, ஸ்ரீசங்கர விஜயம் பற்றிய நூல்கள் விவரித்த வரலாற்றுக்கு ஏற்ற சில இடங்களையும் அங்கே வசித்த மக்களையும் கண்டார் அவர் களிடம் தீர விசாரித்தபோது பாரம் பர்யமாக வரும் குடும் பக் கதைகளையும், தல சம்பவங்களையும் அவர்கள் கூறக்

Koviloor Digital Library



கேட்டு அவற்றையெல்லாம் தமது கருத்திலிருத்தி தாம் கற்றுணர்ந்த உண்மைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, ஸ்ரீசங்கரருடைய அவதார தலமான காலடி க்ஷேத்திரத்தின் நான்கு எல்லைகளை ஒருவாறு நிர்ணயம் செய்துகொண்டு சீதையை அசோக வனத்தில் கண்ட செய்தியை ஸ்ரீராம பிரானுக்குத் தெரிவிக்க உற்சாகத்தோடு பறந்து வந்த அனுமனைப்போல வந்து, ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீசந்த்ரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பாதாரவிந்தங் களில் ஆனந்தக் கண்ணீரை உகுத்து, தமது அனுபவ பூர்வ மான ஆராய்ச்சியின் துணிபு பற்றிக் கூறினார். அன்றே காலடி அண்டமெல்லாம் அறிய எண் திசைகளிலும் எட்டி விட்டது!

அக்காலத்தில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் அருள் நிறைவும் பொருள் குறைவுமுள்ள ஆன்மீக உறைவிடமா கவே இருந்தது. ஆகவே, காலடியில் ஸ்ரீ பகவத் பாதாள் உடைய அவதார மகிமைக்கேற்ப ஒரு சின்னம் அமைப்பது குருடன் ராஜ பார்வை பார்க்க முயன்றது போல் தான் என்று நமது இன்றைய நடமாடும் க்ஷேத்திரமாக விளங்கும் ஸ்ரீசந்திரசேகரேந்திர சுவாமிகளுக்குத் தோன்றியது. ஆகவே, அவர்கள் மிகவும் பெருந்தன்மையோடு ஸ்ரீநடுக் காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளின் கோரிக்கைக்கு சிறிதும் தயங்காமல் அங்கீகாரம் அளித்தார்கள். தமது காலத்தி லேயே காலடியில் ஸ்ரீசங்கரருடைய அவதாரச் சின்னம் எழுப் பப்பெற்று. அதைத் தரிசிக்க பேராவல் கொண்டு, ஸ்ரீசாஸ்திரிகள் நமது பெரியவர்களிடம் தயக்கத்தோடு, "இத்தகவல்களை யெல்லாம் ஸ்ரீச்ருங்கேரி பீடாதிபதிகளிடம் தெரிவிக்கலாமா? அருளோடு பொருளும் அங்கு இருப் பதாகச் சொல்லப்படுகிறது" என்று விநயத்தோடு விக்ஞாபனம் செய்தார். நமது பெரியவாளின் பரந்த நோக்கையும், பக்தியின் ஆழத்தையும் பிற்காலத்தில் உலகமெல்லாம் போற்றப் போகிறது என்பதற்கு எடுத் துக் காட்டாக அந்த பால்ய பருவத்திலேயே பெரியவர்கள்

Koviloor Digital Library



சிறிதும் யோசியாமல் உலகம் போற்றும் உத்தமருக்கு காலடியில் சின்னம் அமையவேண்டிய அவசியம் ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, இந்த பீடம், அந்த பீடம் என்ற பேதத்திற்கு மனத் தளத்தில் இடம் அளிக்காமல் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளை தமது திருவுள்ளத்தின் ஒப்புதலோடும், ஆசிகளோடும் ஸ்ரீ சிருங்கேரி ஆசாரியாளிடம் அனுப்பி வைத்தார். "அருளில்லார்க்கு அவ்வுலகில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை" என முதுமொழி ஒன்று கூறுகிறது. அருளும், பொருளும், நடமாடும் திவ்ய க்ஷேத்திரமாகிய ஸ்ரீ ச்ருங்கேரியில் கும்பகோணம் நடுக்காவேரி ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் காலடி தல ஆராய்ச்சியும், தீர்ப்பும் ஸ்ரீ மடத்தின் சாஸ்த்திர மேதைகளாலும், மற்றும் பல நிபுணர்களாலும் பல நாட்கள் அலசி ஆராயப்பட்டு கடைசியில் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் இச்சைபூர்வமாக ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளின் கோரிக்கைக்கு அங்கிகாரம் அளித்ததற்கு அனுசரணையாக மகத்தானதொரு திட்டம் தீட்டப்பெற்று, கேரள அரசுகளாக அக்காலத்தில் திகழ்ந்த திருவனந்தபுரம், கொச்சி, கொல்லங்கோடு ஆகிய பிரதேச மன்னர்களுடைய பக்தி பூர்வமான ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டது!

ஆகவே, புனித திராவிடத்தில் தோன்றிய மற்ற மதாசாரியர்களான ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மத்வர் இருவருடைய ஜன்ம பூமியில் ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டு வந்த போது ஸ்ரீ பகவத் பாதாளுடைய அவதார தலம் எது என நிர்ணயிக்கப்படாததால் சற்று ஆயாசத்தோடு இருந்த அத்வைதிகள் பேருவகையோடு காலடியின் வளர்ச்சியில் விசேஷ அக்கறை ஒருமுகமாகக் காட்டினர்.

அற்புதங்கள் நிகழ்வதைத்தான் நாம் பார்க்கிறோம், கேட்கிறோம்! ஆனால் அந்த அற்புத அதிசயங்களுக்கெல்லாம் காரணமாயுள்ள இறைவனை உணரத்தான் முடிகிறது. பார்க்க முடிவதில்லை! பார்ப்பதையும் பார்க்கமுடியாததையும் ஒன்று படுத்துவதே அத்வைத சித்தாந்தம்! அதன் சிற்பி ஒரு திராவிட தேசமணி என்னும்போது நாம் பெருமைப்படுவதற்கு அருகதையுள்ளவர்களே!

Koviloor Digital Library

# 5. பீடம் - மடம்

பீடம் வேறு; மடம் வேறு; இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும் ஒன்றையொன்று தொட்டுத் தழுவி ஆசிர யித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தாலும் பீடமும் மடமும் ஒரே திசையில் செல்லும் தண்டவாளம் போல் ஒன்றை மற்றொன்று தொடாமல், ஆனாலும் இணைந்து செயல் படுகிறது!

பீடம் ஆன்மிகத்தின் அசல்: மடம் நகல்: உலகியலின் இருப்பிடம்! நிர்வாகம் பொருளாதாரம், மக்கள் பணி, பக்தி, சமயம் முதலியன வளர தொண்டு புரிவது மடத்தின் வேலை; பீடமோ சர்வசாக்ஷி மயமான ஆத்மாவைப்போல், எதிலும் பற்றற்ற பரமானந்த மயமான தன்னைத்தான் அறியும் பணியில் ஈடுபட்டு, அதையே ஆதாரமாக நம்பி யுள்ள அகிலத்தை அதில் லவலேசமாவது உணரவைத்து இரும்பை தங்கமயமாக்கும் ஸ்பரிச வேதிகை. மடாதிபதியும் பீடாதிபதியும் ஒன்றுபோல் தோன்றினும், அவை வெவ் வேறு! மடாதிபத்தியம் போகலாம். பீடாதிபத்தியம் பாரம் வரியமானது.

உலக மதங்கள் அனைத்துக்குமே ஒரு தலைமைப்பீடம் ஆதி காலந்தொட்டு இன்றுவரை இருந்துவருகிறது. ஆனால் காலப் போக்கில் அந்தத் தலைமைப் பீடம் பிளவுபட்டு பல பிரிவு களாக இயங்கத் தொடங்கின. இருந்தும், ஆதிகாலத்தில் ஏற்பட்ட பெயரிலேயேதான் அவை இன்றும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தலைவர்களின் ஆளுகைக்குட்பட்டு நடைபெறுகின்றன. அந்த முறையில் நமது பாரத தேசத் தைப் பார்க்க வேண்டியது இக்கட்டுரைத் தொடரில் நமது தலையாய கடமையாகிறது.

* * *

Koviloor Digital Library



18-ம் நூற்றுண்டில் பாரதம், முந்தைய அத்தியாயங்களில் குறிப்பிட்டபடி அரசியல், ஆன்மீகம் இரண்டிலும் பல பிளவுகளாக்கப்பட்டு சிதறுண்டு காணப்பட்டது. விந்திய மலைக்கு வடக்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் ஸ்ரீ பகவத் பாதாளுடைய கருணையால் தோன்றிய ஆம்னாய பீடங்கள்—பத்ரிநாத், துவாரகை, பூரி ஜகந்நாதம்—பற்றிய வரலாறுகளை சரித்திரத்தில் காணோம். அவை ஏதோ ஒரு விதத்தில் அடக்கமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே இருந்து வந்திருக்க வேண்டும். அடியோடு மறையவில்லை என்பதற்கு இந்து 20ம் நூற்றுண்டு எடுத்துக் காட்டாக விளங்குகிறது!

நாட்டைப் பிடித்து ஆட்டிய அரசியல் அலங்கோலங்களில் வடநாட்டு ஆம்னாய பீடங்களும், அவற்றைச் சார்ந்துள்ள ஸ்ரீமடங்களும், இன்று கொந்தளிப்புகள் அடங்கிய பிறகு பரிமளிக்கின்றன. மேலும் நாட்டை ஒன்றுபடுத்திய ஆங்கிலேயர் அரசியல் மேல் அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு, குட்டி சமஸ்தானங்கள், பெரிய சமஸ்தானங்கள் என்று பிரித்து, ஒவ்வொரு சமஸ்தானத்திற்கும் ஒரு அரசபரம்பரையையும் தோற்றுவித்து, டில்லியில் மத்திய கேந்திரமாக அமைந்திருந்த பிரிட்டிஷ் ராஜப் பிரதிநிதியின் தலைமையில் இயங்கும்படி செய்தனர். இதே போன்று அமையப் பெற்ற ஏறக்குறைய 700 க்கு மேற்பட்ட சமஸ்தானாதிபதிகளும், பூமியைப் பிரித்து அளந்து தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் அண்டியவர்களுக்கும், உறவினர்களுக்கும் அளித்து அவர்களை கப்பம் கட்டும் ஜமீந்தார்களாக நியமித்தார்கள். 'யார் எப்படிப்போனால் என்ன! இந்தியர்கள் அனைவரும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை ஏற்க வேண்டும். இல்லாவிட்டால் பதவி பறிக்கப்படும்' என்ற ஒரே கொள்கையோடு டில்லியை தங்கள் வாசஸ்தலமாக்கிக் கொண்டு, நாடாண்ட பிரிட்டிஷார் இந்த சமஸ்தானாதிபதிகள், ஜமீந்தார்கள் விஷயத்தில் தலையிடுவதில்லை. பிரித்தாளும் கொள்கை என்பதை அந்நிய ஆங்கிலேய ஆட்சி தான் இந்நாட்டில் புகுத்தியது என்று கூறுவது தவறு.

Koviloor Digital Library



உலகம் தோன்றியதும் அரசியல் ஆன்மீகம் இரண்டும் தோன்றி விட்டன. அவற்றோடு பிரித்தாளும் கொள்கை, வேறுபட்ட மனப்பக்குவம், மதக்கொள்கை எல்லாம் தோன்றிவிட்டன!

அரசியலில் மட்டுமே முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்த அந்நிய அரசு ஆன்மீகத்தில் அதிகம் தலையிட வில்லை. அவர்களுடைய கிறிஸ்துவ மத பிரசாரத்திற்கு இந்து மதம் வெளிப்படையாக இடைஞ்சல் செய்தால் மட்டுமே தலையிட்டு தடுத்து நிறுத்தி தங்கள் மேலதிகாரத்தின் சொரூபத்தைக் காட்டும். இத்தகைய விநோத சூழ்நிலையிலும் நமது ஸநாதன இந்து மதம் ஏறக்குறைய நாலைந்து நூற்றாண்டுகளில் பெட்டிக்குள் அடங்கிக் கிடந்த சர்ப்பம் போன்று மறைந்திருந்தாலும் 19—20ம் நூற்றாண்டில் பெட்டி மூடியைத் திறந்து கொண்டு தலை நீட்டத் தொடங்கியது. வட நாட்டில் அதுவரை மனம்புழுங்கி ஆழத்திலிருந்தபடி அவதிப்பட்டுக் கொண்டிருந்த மத வேட்கை எரிமலை போன்று கிளம்பியது. ஆனால் நமது சாஸ்திரீய பீடங்களும், மடங்களும் அந்த எழுச்சியை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாததால், சாஸ்திரீய ஸநாதன மதம் வட நாட்டில் செல்வாக்கை இழந்து, ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர், வல்லபர், ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸர் போன்ற மகான்களின் பக்தி மார்க்கத்தில் மட்டுமே ஜனங்கள் முழு நம்பிக்கை வைக்கும்படி நேர்ந்துவிட்டது: அதில் தவறு ஒன்றும் இல்லை என்றாலும், அம்மகான்கள் தோற்றுவித்த பக்தி மார்க்கம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தையும், ஸ்ரீராமாவதாரத்தையுமே மையமாகக் கொண்டு வட இந்திய மதச்ரேஷ்டர்கள் பக்தியை வளர்த்தனர். ஸ்ரீராமகிருஷ்ணரோ பராசக்தியின் பரம - மங்கள வடிவான காளிதேவியை சரணடைந்து, அந்தத் துல்யமான பக்திக்கு ஈடு இணை கிடையாது என்பதற்குச் சான்றாக தமது வாழ்க்கை அனுபவத்தையே பரிபூரணமாக அமைத்துக் காட்டியருளினார். ஆனால் அவர்வழி வந்த அவருடைய பிரதம சிஷ்யர் சுவாமி விவேகா

Koviloor Digital Library



னந்தர் எந்த ஒரு தனிப்பட்ட தெய்வத்தையும் குறிப் பிட்டுக் கூருமல், நமது வேதபூர்வமான மதக் கொள்கை, அத்வைத சித்தாந்த சிறப்புகளை எடுத்துக் கூறி, ஸ்ரீபகவத் பாதாளின் கிஷ்யராகவே மறைமுகமாக விளங்கினுர். ஆக, 19—20ம் நூற்ருண்டில் நமது பாரததேசம் கண்டு அனுப வித்த அளவுக்கு அரசியல்—ஆன்மீக மாற்றங்களை உலக நாடு களில் வேறு ஏதேனும் ஒன்று அனுபவித்திருக்குமா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

*          *          *

இந்த அத்தியாயத்தில் வட நாட்டைப் பற்றிச் சுருக்க மாகக் கூற வேண்டியதன் அவசியத்தை வாசகர்கள் அறிந் திருப்பார்கள். ஏனென்ருல், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கீழ், அரசியல் ரீதியாகவும் அதுவரை இருந்துவந்த ஆர்யம், திராவிடம் என்ற பிரிவினை அடியோடு மறைந்து நாடு ஒன்ருக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் நன்கு அறிவோம். அதேபோல் தக்ஷிணத்தைக் காட்டிலும் உத்திரபாகம் பல விதத்திலும் அவதிக்குள்ளானதையும் நாம் உணர்ந்திருக் கிருேம். ஆகவேதான், இன்று அவர்கள் ஸநாதன மதத் திலிருந்து ஒரே ஒரு புஷ்பத்தை—பக்தி—எடுத்து வைத்துக் கொண்டு மதப் பற்றை நம்மைவிட பன்மடங்கு அதிகமாகக் காட்டிக்கொண்டாடி, அருமையான சித்தாந்தங்களை அதிகம் அறியாமலிருக்கிருர்கள். சித்தாந்தங்கள் தெற்கிலும், பக்தி வடக்கிலும் இன்று தனித் தன்மையோடு வளர்ந்து வருவ தாலேயே இந்து மதத்திலிருந்த பிளவுகளும் நாளடைவில் மறைந்து, சித்தாந்தத் தலைவர்களே மதவெழுச்சிக்கும் காரண மாகத் திகழ்கிருர்கள் என பாமரர்களாகிய நாம் நம்பு கிருேம். அவர்களைத் தரிசிக்கும் போதெல்லாம் ஆனந்தக் கண்ணீர் உகுக்கிருேம். அதுவரை செய்த பாபங்களை அந்தப் புண்ணிய சாகரத்தில் சேர்த்து புனிதமடையச் செய்து விட்டோம் என்ற மன ஆறுதலோடு மறுபடியும் பாவ மூட்டைக்கு சரக்குச் சேர்க்க சமுதாயத்தில் உழலுகிருேம்!

Koviloor Digital Library



அருள் வாக்கைவிட பொருள்வாக்கு ஒன்றே மிக முக்கிய மாகிவிட்ட இந்தப் பொருளாதார உலகில் நாம் வேறு என்ன செய்யக்கூடும்! பொருள் வாக்குக்குக் கட்டுப்பட்டு வயிறு வளர்க்கிறோம்; அருள் வாக்குக்கு கட்டுப்பட்டு ஆறுதல் பெறு கிறோம். ஆகவே, இந்த இரண்டுமே வாழ்வுக்கு அவசியமாகி விட்டன.

அருள் அறிவுக்கு நிறைவுதரும். பொருள் வளமான வாழ்வுக்கு நிறைவுதரும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அரசி யலும் ஆன்மீகமும் எவ்வாறு ஒற்றுமையோடு இயங்க வேண்டுமோ, அதே போல் மனிதன் நல்வாழ்வுக்கு அருளும் பொருளும் அவசியம் தேவை! ஆகவேதான் அருளில் பொருளும், பொருளில் அருளும் ஆநாதியான வேத காலத்தி லிருந்தே இணைந்து வருகின்றன. நமது வேத, இதிகாஸ, புராணங்கள் எல்லாமே அருளையும் பொருளையும் ஈடுபடுத் தியே உருப் பெற்றிருக்கின்றன. அப்படியொரு உண்மை உலகம் தோன்றிய நாள் முதல் இருந்துவரும் போது, பொருளாசையை விட்டு, பற்று பந்தங்களை அறுக்க வேண்டும் என்று கூறுவது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு உளுத்துப்போன அறிவுரை என்று தான் கூற வேண்டும்.

இந்த மகத்தான உண்மையை, நமது பழமையான பீடங் களைப் போற்றிக் காப்பாற்றிவரும் பீடாதிபதிகளும், மடங் களைக் கட்டிக் காத்து மக்களுக்கு அரியசேவை செய்யும் மடாதிபதிகளும் மறுக்கவில்லை. பொருளாசை, பொருள் தேவை இரண்டையும் முன் வைத்து செயல்படும் பக்தர் களுக்காக அவர்கள் இரக்கம் காட்டுகிறார்கள் என்பதையும் பலர் அறிந்திருக்கிறோம்.

* * *

## பீடங்கள்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் காலத்தில்தான் முதன் முதலாக இந்து மதத்தில் பீடம் என்ற அங்கம் இடம் பெற்றி ருக்கிறது. அதற்கு முன்பு, ரிஷிச்ரேஷ்டர்களும், மதம்

Koviloor Digital Library



பற்றுள்ள மகான்களும் நாடெங்கிலும் வாழ்ந்து வந்தார்கள் என்றாலும், அவர்கள் இம்மாதிரியான ஒரு நிர்வாகக் கட்டுக் கோப்புகள், அமைப்புகளைப் பற்றிச் சிந்தித்ததாகத் தெரிய வில்லை. தம்மை நாடி குருகுல வாசம் செய்ய வந்து, வேத இதிகாஸ ஆராய்ச்சிகளைச் செய்து, தமது அறிவை வளர்த்துக் கொள்ள விழைந்தவர்களுக்கு ஆதரவு அளிப்பதை மட்டுமே பெரியதொரு மதத் தொண்டாகக் கருதி வந்தார்கள். ஆனால் ஸ்ரீபகவத் பாதாள் காலத்தில் ஜனத் தொகை பெருகி பிறமத ஊடுறவலும் தலைகாட்ட ஆரம்பித்தது. ஸ்ரீ ஆதி ஆசாரி யாள் தமது பழமையான பரத கண்டத்திற்கு வந்துகொண் டிருந்த ஆபத்தை தீர்க்கதிருஷ்டியால் உணர்ந்து நாட்டின், நாலுதிசைகளிலும் பீடங்களை நிறுவி, தமது அத்வைத சித்தாந்தத்தின் காவலர்களாக பீடாதிபதிகளையும், அவர் களுடைய பீடாதிபத்தியம் தங்குதடையின்றி வாழையடி வாழையாக நடைபெற சிஷ்ய பரம்பரையொன்று ஏற்பட வழி வகுத்துத் தர்மம் தழைக்க அடிகோலினார்கள். இந்தப் பீடங்களின் திறம்பட செயல்படுவதைத் தாமும் கண்டானந் திக்கத் திருவுள்ளம் கொண்டு, ஸ்ரீ காஞ்சியில் ஸர்வக்ஞ பீடமெனும் ஸ்ரீகாமகோடி பீடத்திலமர்ந்து, முற்றிலும் நூதனமான முறையில் இந்த இருபதாம் நூற்றாண்டில் அனைத்துலகத்தையும், அஷ்டதிக்கு பாலகர்களையும் திகைக்க வைக்கும் விதத்தில் ஓர் ஆன்மீக ஜீவிய சுனையைத் தோற்று வித்தார்கள். அந்த ஆன்மீகச் சுனையில் பேரின்பம் எய்திய பெரியபரம்பரையின் நிழலில் வந்து, இன்று நம் தூய வாழ்வு ஒன்றுக்காகவே நம்மிடை வாழ்ந்துவரும் 68வது பீடாதி பதிகள் ஸ்ரீசந்திரசேகரேந்த்ர சரஸ்வதி சுவாமிகளும், அவரு டைய பிரதம சிஷ்யரும் 69வது பீடாதிபதிகளாகத் திகழ விருக்கும் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் நாம் உய்ய, நாம் வாழும் நாடு நலம்பெற, நம்நாடு இடம் பெற்றிருக்கும் இவ்வுலகம் செழிக்க இந்து மதத்தின் ஸநாதன தர்மத்தை நிலை நாட்டிவருகிறார்கள்.

அத்வைத சித்தாந்தத்தின் சிற்பியான ஸ்ரீ பகவத் பாதாள் அமைத்தருளிய பீடங்களில் இரண்டு திராவிட பிர

Koviloor Digital Library



தேசத்தில் இருக்கின்றன. அவற்றில் ச்ருங்கேரி பீடம் மிக செல்வாக்கும், செல்வச் சிறப்போடும் விளங்கி வருகிறது. அதற்கு அநேக காரணங்கள் இருந்தாலும் ஒன்றை மட்டும் இங்கே அவசியம் குறிப்பிடவேண்டும். விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்களும், பின்னர் மைசூர் மன்னர் பரம்பரையும் ச்ருங்கேரி பீடத்திற்கு பொன்னும், பொருளும், பூமியும் காணிக்கைகளாக வாரிவழங்கியுள்ளார்கள். தவிர, இந்து மதத்தை ஆராய்ச்சி பூர்வமாக வர்ணனை செய்துவந்த அப்போதைய மேதைகள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தைப் பற்றிய வரலாறுகளை ஏதோ காரணத்தால் அதிகமாகக் குறிப்பிடவில்லை. ஸ்ரீ காஞ்சி பீடம் ஆதி ஆசாரியாள் காலந் தொட்டு இருந்துவந்திருந்தும், இந்த ஆராய்ச்சியாளர்கள் தங்கள் நூல்களில் நான்கு ஆம்னாய மடங்கள் என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். 'நான்கு என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய உண்மை என்றால் ஸ்ரீ காமகோடி பீடத்தைச் சேர்த்து ஐந்து பீடங்கள் என்பதும் ஒருமுகமாக ஏற்கப்படவேண்டிய உண்மை'' என்று நமது ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், தமது இளம் பிராயத்தில் பீடத்தை ஏற்றது முதல் மிகமிக நுணுக்கமான ஆராய்ச்சிகள் பல செய்து, செப்பேடுகளையும், கல்வெட்டுகளையும் ஆதார பூர்வமாகக் காட்டி, புனித ஐந்து பீட பிரசாரத்தை இடைவிடாது செய்து, இந்த இருபதாம் நூற்றாண்டின் அதிசயங்களில் ஒன்றாக ஸ்ரீ காஞ்சியில் காலடியைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து காட்டியுள்ளார்கள். இனி இந்து ஸநாதன மதம் உள்ளவரை அத்வைத பீடங்கள் ஐந்து என்று நமது சரித்திராசிரியர்களும், உலக ஆராய்ச்சியாளர்களும் வலியுறுத்தி எழுதுவார்கள். நமது பரமாசாரியாளுடைய பணி தமிழகத்தோடும், இந்நாட்டோடும் மட்டுமின்றி உலக நாடுகளனைத்திலும் பாராட்டப்படும் விந்தையை இன்றைய இந்து சமூகம் கண்டு வியந்து ஆனந்தமடைகிறது எனக் கூறுவது மிகையாகாது.

Koviloor Digital Library



அத்வைத பீடங்களின் காலத்தை சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பு என ஏற்கெனவேயே நிர்ணயித்துள்ளோம். ஸ்ரீ பகவத் பாதாளின் காலத்திற்குப் பிறகு தோன்றிய மதாசாரியர்களில் விசிஷ்டாத்வைதத்தை இந்த ஸ்தாபித்த ஸ்ரீ ராமானுஜரைக் குறிப்பிடவேண்டும். அத்வைதத்திற்கு முதல் எதிர்ப்பு, கண்டனம், அதே சமயம் மறைமுகமான அங்கீகாரம் அளித்த மகான் ஸ்ரீராமானுஜர்! விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை உருவாக்கியதோடு, அதன் பிரதான அங்கமாக ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தையும் வரையறை செய்து ஏராளமான மக்களின் குருநாதனாக விளங்கினார். ஆனால் ஸ்ரீராமானுஜர் அத்வைத சித்தாந்த பீடங்களைப்போல், தமது சித்தாந்த பிரசாரத்திற்காக பீடங்களை ஸ்தாபிக்கவில்லை. 'எல்லாம் ஸ்ரீ நாராயணனே' என்ற தத்வத்தை பிரபலப்படுத்தியதோடு, அந்த ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் ஆதிபுருஷனாகவும், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் தலைவனாகவும், திருவரங்கத்தில் தூங்காமல் தூங்கி உலக ரக்ஷகத் தொழிலைச் செய்யும் ஸ்ரீ ரங்கராஜப் பெருமானின் திருவடிகளிலேயே தமது சித்தாந்தம், பீடம், உடல், பொருள், ஆவி அனைத்தையும் கலந்துவிட்டார்! ஆகவே தான் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் பல பிரிவுகள் இருந்தாலும் ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் காட்சியே பரமபத காட்சியென ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயக்காரர்கள் முழுமையாக நம்புகிறார்கள். அக்காட்சியை பூலோகத்தில் திருவரங்கத்தில் காண்கிறோம். அந்தத் திருவரங்கமே அவர்கள் சித்தாந்த பீடம்! அந்த அரங்கநாதனே பீடாதிபதி! அவன் பாதம் துணை கொண்டு மத சித்தாந்தப் பிரசாரம் செய்யும் மடாதிபதிகள் அனைவருக்கும் புகலிடம் பைநாகப் படுக்கையில் அனந்தமாக சயனித்திருக்கும் பரந்தாமனின் பாதாரவிந்தங்களேதான்!

தக்ஷிணத்தில் தோன்றிய த்வைத சித்தாந்த சிற்பியான ஸ்ரீமத்வாசாரியரின் கொள்கை, சித்தாந்த பிரசாரம், மதத் தொண்டு எல்லாம் முற்றிலும் மாறுபட்டவை. அவருடைய

Koviloor Digital Library



சித்தாந்த பீடம் நாட்டில் எங்குமே ஸ்தாபிக்கப்படவில்லை. ஸ்ரீ ராமானுஜரைப் போலவே ஸ்ரீமத்வரும் தமக்கென ஒரு தெய்வ சந்நிதியை ஏற்படுத்திக்கொண்டு அந்த தெய்வத்தின் பாதகமலங்களிலேயே த்வைத சித்தாந்த பீடத்தைத் தோற்றுவித்துள்ளார். அந்தத் தெய்வ நிலையைத்தான் இன்று நாம் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணனாக தரிசிக்கிறோம்.

ஸ்ரீமத்வாசாரியரின் த்வைத சித்தாந்தம் பற்றி ஏற்கெனவேயே விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இங்கு அந்த மகானுடைய சித்தாந்த பீடமாக விளங்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, வெண்ணெய் கடைந்தெடுக்கும் மத்து ஒன்றைக் கரத்தில் வைத்துக்கொண்டு பாலகனாகவே காட்சி தருகிறார். ஸ்ரீமத்வாசாரியரின் சித்தாந்தம் பிரத்யட்சத்திலும், பக்தி மார்க்கத்திலும் முழு நம்பிக்கை வைத்து மக்களை நல்வழிப்படுத்துகிறது. வேத பூர்வமான ஸநாதன மதத்திலிருந்து ஸ்ரீமத்வர் இம்மியளவும் விலகிச் செல்லவில்லை. ஸ்ரீ பகவத் பாதாளின் அத்வைதத்தை பாதாதி கேசம் கண்டனம் செய்திருக்கிறார். தமது கண்டனத்திற்கான காரணத்தை, அருமையான சாஸ்த்திர விளக்க விரிவுரைகளோடு எடுத்துத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். பக்தி மார்க்கத்தின் இலக்கணமாகத் திகழும் த்வைத சித்தாந்தத்தின் பீடம் தான் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணனுடைய உருவம். ஸ்ரீமத்வாசாரியரின் சிஷ்ய பரம்பரையினர் இந்த உண்மைக்கு முதலிடம் கொடுத்துச் செயல்படுகிறார்கள். த்வைத சித்தாந்தக்காரர்களிடமும் கருத்து வேற்றுமையால் பல பிரிவுகள் இருந்தாலும், எல்லா பிரிவினரும் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பீடாதிபத்யத்தை எதிர்க்கத் துணிவதில்லை!

* * *

சுத்தாத்வைத சித்தாந்தத்தைத் தோற்றுவித்த ஸ்ரீ வல்லபாசாரியரும் தெய்வ நிலையொன்றிடம் சரண் புகுந்து, அந்த தெய்வத்தின் நிழலிலேயே தமது சித்தாந்த பீடத்தை ஸ்தாபித்துள்ளார். ராஜஸ்தான் மாநில எல்லையில் உள்ள நாதத்துவாரம் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீகிருஷ்ண

Koviloor Digital Library



பரமாத்மாவின் கோவர்த்தனதாரி கோலத்தை சிற்பத்தில் தரிசித்து ஸ்ரீ வல்லபர் வெகுகாலம் பக்திபூர்வமாக ஆராதித்து வந்திருப்பதாக வரலாறு கூறுகிறது. மேலும் அந்த கோவர்த்தனதாரி ஸ்வயம்புமூர்த்தி. இந்த தேச சிற்பி யாரும் அதைச் செதுக்கவில்லை. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணன் போலவும், அரங்கத்தம்மானைப் போலவும் தாமே உரு வெடுத்து, பரம பக்த சிரோமணியான ஸ்ரீவல்லபரின் அகக் கண்களுக்குத் தெரியும்படி தமது இருப்பிடத்தைக் காட்டி யருளி, இடம் பெயர்ந்து, ஸ்ரீவல்லபர் கட்டித்தந்த திருமாளிகையில் தரிசனம் தருகிறார். கோவர்த்தனதாரியின் கோவர்த்தன மலை நிழலில் இன்பம், பேரின்பம் இரண்டை யும் அக்காலத்தில் வாழ்ந்த கோபியர்கள் அனுபவித்தார்கள் என பாகவதம் வர்ணனை செய்கிறது. அந்த கோபியர்கள் நமது மூதாதையர்கள் என்பதால் நமக்கும் நாதத்துவாரத் தில் அந்தப் பேரின்ப மூர்த்தத்தின் தரிசனம் கிடைக்கிறது. ஸ்ரீவல்லபர் மூலம் இந்நாட்டு இந்துமதத்தினருக்குக் கிடைத்த வரப்பிரஸாதம் நாதத்வார நந்தகோபாலன். அவனே சுத்தாத்வைத பீடாதிபதி. அவன் பாதமே பீடம்!

* * *

சித்தாந்தங்கள் பல தோன்றிய பிரதேசத்தில் நாம் வாழ்கிறோம் என்ற பெருமை இந்து மதத்தைச் சார்ந்தவர் கள் அனைவரையும்விட, திராவிடத்தில் வாழும் நமக்குத்தான் அதிகம்! ஏனென்றால் சாஸ்த்ரீய சித்தாந்தங்கள் எல்லாமே இங்குதான் உருப்பெற்றன. அவற்றை உருவாக்கிய மகான் கள் அவதரித்த பூமியும் திராவிடம்தான்! ஆகவே, திரா விடத்தின் இரு கண்களாக இருக்கும் சைவ வைஷ்ணவ சித்தாந்தங்களில் வைஷ்ணவத்தைப் பரப்பும் விசிஷ்டா த்வைத, த்வைத சித்தாந்த பீடங்களைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டு, மற்றொரு கண்ணாகிய சைவசித்தாந்த பீடத்தைக் குறித்து எழுதாமல் தாண்டிச் செல்வது பொருத்தமற்ற செய்கை! ஆகவே, சைவசித்தாந்தத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

Koviloor Digital Library



சைவசித்தாந்தத்தில் மற்ற சித்தாந்தச் சிற்பிகளைப் போல் குறிப்பிட்டு ஒரு மகானை மட்டும் சொல்வதற்கில்லை. சைவசித்தாந்தத்தின் சிற்பிகள் பலர். அவர்கள் எல்லோரும் சைவம் தழைக்க சிவனடியார்களாகி, சுத்த சிவத்தின் பெருமையைப் பாடி, பக்தி செலுத்தியுள்ளார்கள். தென் னட்டில் கி. பி. 10—11-ம் நூற்றுண்டுகளில் சைவ-வைஷ்ணவ சித்தாந்தங்கள் இரண்டும் பந்தயக் குதிரைகள்போல் போட்டியிட்டுப் பரவி வந்தன. ஆனல் யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்று ஆராயப் புகுந்தால் இந்த அத்தியாயத்தின் நோக்கமே மாறிவிடும். ஆகவே, பின்னொரு சமயம் அதை ஆராய்ந்து பார்க்கலாம். இப்போதைக்கு சைவசித்தாந்த பீடாதிபதி யார் என்பதையும் அவர் எந்த அந்தப் பீடத்தை ஸ்தாபித்தார் என்பதையும் கண்டு கொள்ள முயற்சிப்போம்.

சைவ சமயம் இந்து மதத்திலிருந்து வேறுபட்டதல்ல. சைவத்தின் தலைவன் பரமசிவம். வைஷ்ணவத்தின் தலைவன் ஸ்ரீ நாராயணன் என்று கூறப்படுவதுபோலவே சைவம் சிவபெருமானைத் தலைவனுகவும், பீடாதிபதியாகவும் கொண்டு வந்துள்ளது. இந்த சிவபெருமானின் திருக் கோவில்கள் திராவிடத்தில் எல்லா ஊர்களிலும் உள்ளன. சில ஊர்களில் விஷ்ணுவின் கோயில் இராது. ஆனல் சிவம் உறையாத ஊர் இல்லை. ஆகவே, சிவன் உறையும் தலங்கள் யாவும் சைவசித்தாந்த பீடம் என்று சைவசமயத்தினர் கருதினலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஆடும் தில்லை நாயகனுகிய நடன குஞ்சிதபாதமே சைவசித்தாந்த பீடத் தின் ஆதிநாயகன். அவன் ஆடிய பாதமே சித்தாந்த பீடம். இந்த மகத்தான கொள்கையை மறுக்கத் துணியும் சைவ சித்தாந்த சீடர் எவரையும் காண்பதரிது. நாஸ்திகவாதிகள் கூட இந்த விளக்கத்தைக் கண்டிக்க மாட்டார்கள். தில்லை சபாநாயகன் தேவாலயக் கோபுர தரிசனமே கோடானு கோடி தர்மங்களைச் செய்த பலனைக் கொடுக்கிறது என்றல், அந்த இரத்தின சபாபதியின் திருமேனி, திருப்பாத தரிசனம் எப்படி சாமானியமானதாகக் கருதப்படும்!

சித்தாந்த பீடங்களைத் தரிசித்தோம். இனி இந்த பீடங் களைச் சார்ந்த ஸ்ரீமடங்களை தரிசிக்க முற்படுவோம்.

Koviloor Digital Library



## ஸ்ரீமடங்கள்

திராவிட தேச அத்வைத சித்தாந்த பீடங்கள் இரண்டில் ஸ்ரீ ச்ருங்கேரி பீடத்திற்கு உப மடங்கள் உள்ளன. இவை ஸ்ரீ பகவத்பாதாள் காலத்தில் இருந்ததாக வரலாறு தெளிவு படுத்தவில்லை. பின்னர் வந்த பீடாதிபதிகள் காலத்தில் மன்னர்களும், மாமன்னர்களும் ஏராளமாக பீடத்திற்கு மான்யங்களும், பொருளும் அளித்து, புனித கைங்கர்யம் நீடித்து நடைபெற உதவி செய்தார்கள். மதப்பற்றும், நெறி வாழ்க்கையும் அணிகலன்களாகக் கொண்டு பீடாதிபதியின் பேரபிமானத்திற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருந்த சிடர்களிடம், பீடத்திற்கு அளிக்கப்பட்ட மான்யங்களை நிர்வகித்து, தர்மத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என விளக்கலாம். அவ்வாறு பொறுப்பை ஏற்று வெவ்வேறு பிராந்தியங்களில் ஸ்ரீ ச்ருங்கேரி பீடாதிபதியின் ஆதிக்கத்திற்குட்பட்டு இயங்கிய சிஷ்ய பரம்பரையின் வாசஸ்தலமும், அப்பிரதேசத்திலுள்ள பீடத்தைச் சேர்ந்த மான்ய சொத்துக்களும் ஸ்ரீ மடங்கள் என்றும் உப மடங்கள் என்றும் அழைக்கப்பட்டன. சிவகங்கை. சகடபுரம், கூடலி என பல இடங்களில் அத்வைத மடாதிபதிகள் ஆன்மீக ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள். நிர்வாகத் தலைமை பீடாதிபதியான ஸ்ரீ ச்ருங்கேரி ஜகத்குருவிடம் அடக்கமாயிருந்தது. ஆனல், இன்று நாட்டில் சுதந்திர வேட்கை அதிகமாகிவிட்டதால் இந்த உப மடங்களில் சில, ஸ்ரீச்ருங்கேரி பீடாதிபதியின் மேல் அதிகாரத்திற்குட்பட விரும்பாமல் தனிக்கொடியைத் தூக்கிக்கொண்டு நியதியைப் புறக்கணித்து, அத்வைத சித்தாந்தத்தை உருவாக்கிய ஸ்ரீ பகவத்பாதாளை ஆதிகுருவாக வழிபட்டு வரத் தொடங்கி விட்டன. ஆன்மீகத்தில் அரசியல் புகுந்துவிட்டதால் இந்த உப மடங்களும் முன்பு இருந்ததுபோல் பலம் பெற்று விளங்கவில்லை. ஆனல் இந்தப் பிளவும், போர்க்கோலமும் பீடாதிபத்தியத்தைச் சிறிதளவும் பாதிக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது பீடத்திற்

Koviloor Digital Library



கான விதைதயை ஊன்றிய ஸ்ரீ பகவத் பாதாளின் கருணை உள்ளத்தின் சக்தியைப் புரிந்துகொள்ள முடிகிறது!

ஸ்ரீ ச்ருங்கேரி பீடத்தைதப்போன்று ஸ்ரீ சங்கரருடைய புகழைப் பரப்பிவரும் ஸ்ரீ காமகோடி பீடத்தின் நிலைமையை ஆராயும்போது, இந்த உப மடங்களுடைய குட்டி ஆதிபத்யம், போர்க்கோலம், எதிர்ப்பு எதுவும் இல்லை என்பது புலனாகும். ஏனெனில், இது செல்வச் சிறப்பு வாய்ந்த பீடம் இல்லை. ஏராளமான மானிய சொத்துக்களைப் பெற்று, அவற்றைக் கட்டிக் காத்துவரவேண்டிய தொல்லையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், இது குடியரசு பீடம்: ஜன நாயக பீடம் என்று கூட குறிப்பிடலாம். ஸ்ரீ காமகோடி பீடாதிபதியின் உப மடங்களைக் கணக்கிட்டுச் சொல்வது கடினம். ஏனெனில் இந்தப் பீடாதிபதிகளிடம் பக்தி கொண்டு, சிஷ்யர்களாக விளங்கும் பல லக்ஷம் பேருடைய இல்லங்கள் எல்லாமே உப மடங்கள் என்று வருணனை செய்யலாம். இந்த நூற்றாண்டில் நடைபெற்ற, நடைபெறும் பல அதிசயங்களில் இதுவும் ஒன்று. இக்கட்டுரைத் தொடரின் நடுநாயகனாகிய ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் சிஷ்யர்களிடம் காட்டும் பரிவினாலும், வழங்கும் ஆசிகளினாலும் அவர்கள் குடும்பத்தில் நிலையான இடம்பெற்று விட்டிருக்கிறார்கள். மேலும் தமது திக் விஜயத்தின்போதெல்லாம், தமது மனத்தளத்தில் உள்ள ஆன்மீகத் தராசில் எடை நிற்கும் பக்தரின் இல்லத்திற்கு தாமே சென்று, அவருக்கு ஏதோ ஒருவிதமான பூஜை சாதனத்தைக் கொடுத்து, எங்கோ ஒரு திசையில் சென்று கொண்டிருந்த அவரையும், அவர் குடும்பத்தையும் ஸ்ரீ காமகோடி பீடத்திற்கு உட்பட்டவர்களாக்கி, அங்கே ஒரு காமகோடி உப மட ஸ்தாபிதம் செய்து விடுவார்கள்! இம்முறையில், நாடெங்கிலும் ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகளிடமிருந்து யந்திரங்களும், பஞ்சாயதன பூஜையும், சாலிக்ராமமும், மேருவும் பெற்று பூஜையில் ஈடுபட்டு தம்மைத்தாமே தூய்மை படுத்திக்கொண்டு நாஸ்திக நாகரிக வாழ்க்கையிலிருந்த மோகத்தைவிட்டு, ஆஸ்திக

(தொடர்ச்சி 137-ஆம் பக்கம்)

Koviloor Digital Library

# VISIT TIRUMALA
# THE MOST SACRED HILL TEMPLE OF LORD VENKATESWRA.



Puranas and tradition acredit this place as Kaliyuga Vaikunta on which Lord Maha Vishnu as Venkateswara condescended to dwell, leaving his Vaikunta for the emancipation of the man kind.

Sthala Mahatyam and other personal experiences of devotees extol the Lord as the most powerful deity on earth in this Kali age. Thi. Sacred place of the Lord of Lords is situated at a height of 3,000 feet among the seven beautiful serpent shaped hills, called Seshachala in eastern ghat- in Chittoor District.

Famous from ancient days, protected and enriched by Kings, consecrated by the penance of sages, glorified by

Koviloor Digital Library



the enraptured songs of the poets, this shrine continues to be a dynamic centre of spirutality.

There are connecting trains to Tirupati the foot of the hill from various places of India. There are direct trains from Vijayawada and Madras.

Well furnished and hygienic accommodation is being provided by the T.T.D. to all the pilgrims both at Tirupati and at Tirumala.

The two ghat roads and the fleet of buses plying from early morning to late night will lead you to the sacred Hill temple-wherein everyday is a festival day. Devotees can have varied nature of Darsana from morning 5 A.M. to 10 P.M. in the night.

Your visit to Tirupati will not be a visit to the Lords temple alone. The Govindaraja Temple consecreated by Ramanuja Charya, the Kapileswara Temple worshiped by sage Kapila, the Kodandarama Temple famous as the boon giver and the Padmavathi temple wherein Mahalakshmi enshrine as Padmavathi, the consort of Lord Venkateswara are all in Tirupati only. If the time permits you, you can have the blessings of Lord Venkateswara of Mangapuram where Venkateswara stayed after his marriage for some time. The Kalyana Venkateswara Temple at Narayanavaram where the Lord married Padmavathi and the Vedanarayana Swamy temple at Nagalapuram which according to puranas is the place where Lord Maha Vishnu restored Vedas to Brahma after killing the demon Somaka.

Your offering to Hundi will be fully utilised for devotional, educational and social welfare purposes. Better to see than to say.

Every devotee has his own experience about the blessing of the Lord. Visit the temple and your experience may be a different one to be retold to others.

If you require any more particulars please contact the Executive Offier TTD Tirupati, Chittoor District, Andhra Pradesh.

**(Sd.) P. S. Rajagopala Raju,**
*Executive Officer.*

Koviloor Digital Library


# பஜ கோவிந்தம்

பஜ கோவிந்தம் பஜகோவிந்தம்
பஜ கோவிந்தம் மூடமதே |
ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே
நஹி நஹி ரக்ஷதி டுக்ரிஞ் கரணே || 1

யோக நித்திரையில் சசல ஜகத்தையும் பரிபாலனம் செய்யும் மூர்த்தியே கோவிந்தன். அந்த பரம்பொருளைப் பஜிப்பாய் மனமே. அஞ்ஞானத்தினால் வியாகரணம் போன்ற நூலறிவில் நாக்கைப் பழக்கவிட்டு விட்டால் மட்டும் போதாது. அது யமனோலை ஒன்றை கண்டு தடுக்க உதவுமோ? ஆகவே எப்போதும் நாப்பழக்கம் கோவிந்த நாமாவில் இருக்கட்டும். "நாவினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்று கோதை கூறியது நினைவுகொள். நாக்கை அடக்கினால் எல்லாம் தன் வசமாகும் அதனால் கோவிந்த ருசியை சுவை! உணவின் ருசியைக் குறியாதே" என்று கூறாமல் கூறுகிறார் ஸ்ரீ சங்கரர்.

"அச்ராந்தம் பத்யு: குணகண கதாம் ரேடன ஜபா' என்று அம்பிகையே பர்த்தாவின குணகணங்களை இடைவிடாது ஜபிக்கிறாள் என்றால் நாம் எம்மாத்திரம்? ஆகவே, நம்முடல் இறந்தபிறகு வரும் புண்ணியம் பாவம் மட்டுமே என்பதால் கோவிந்தனை பஜி, கூடிப்பாடு, கைகொட்டிப்பாடு என்று கூறுகிறார். பசுவாகிய ஜீவாத் மக்களை மேய்த்து பரிபாலனம் செய்பவன் பசுபாலன் = கோபாலன், கோவிந்தன்.

★

"பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந் துரிசு வர மேன்மேல்
அன்புடையார்கள் அழுதகன்றார்களே" (திருமந்திரம்)

"ATHMA IS THE SOLE REALITY—
THE ONLY ABSOLUTE TRUTH"
*(SANKARA)*

2163—5

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

மூட ஜஹீஹி தநாகமத்ருஷ்ணும்
குரு ஸத்புத்திம் மநஸி வித்ருஷ்ணும் |
யல் லபஸே நிஜகர்மோபாத்தம்
வித்தம் தேந விநோதய சித்தம் || 2

'அன்னவிசாரம் அதுவே விசாரம்
அது ஒழிந்தால் சொர்ண விசாரம்
தொலையா விசாரம்'

என்றார் பட்டினத் தடிகள். நாச்சுவைக்காக அதை முதலில் அடக்கு என்ற ஆசாரியாள் அடுத்த மனவாசை மயக்கறு—பணம் பணம் என்று பேராசை படாதே, என்கிறார். அருணகிரியாரும் "பேராசை எனும் பிணியில் பிணிபட்டு ஓராவினையேன் உழலத்தகுமோ" என்கிறார். ஆகவே, விதிக்கப்பட்ட கர்மாக்களிலிருந்து வழுவாத தர்ம வழியில் உனக்கு விதிக்கப்பட்ட வருவாயில் திருப்தியடைந்த மனதுடையவனாக இரு என்கிறார். "போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து" என்பதுதான். மனத்தை 'ஸத்' வழிகளில் செலுத்து என்கிறார்; பரப்பிரம்மத்தில் நிறுத்து என்கிறார். 'ஸத்' என்னும் பதத்தை ஸ்வயம்பிரகாசர் வியாக்யானம் செய்யும்போது நித்ய, சுத்தா, புத்தா, முக்தா, ஸத்ய, அத்விதியா, ஸூக்ஷ்ம, ஸன்மாத்ரா, விபு: ஆனந்த ஸாகரா என்று பத்துவிதமான குணங்களை உடையதே பரம்—ஸத் என்கிறார்.

★

NOTHING BUT TRUTH EXISTS ETERNALLY.
THE TRUTH IS SELF—ATHMA.

*(SANKARA)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

நாரீ–ஸ்தந–பர–நாபீ–தேசம்
த்ருஷ்ட்வா மாகா மோஹாவேசம் |
ஏதந்மாம்ஸ–வஸாதி–விகாரம்
மநஸி விசிந்தய வாரம் வாரம் || 3



"நற்தோகையரை பன்ன விசாரம்
பலகால் விசாரம்"

என்றார் பட்டினத்தடிகள். இதைத்தான் சங்கரர் கூறினார். "பெண்களின் பாதத்தளவே உன் கண் செல்லட்டும். அவர்களைத் தாயாக வழிபடு" என்று கூறுகிறார் ஞானஸாதனம், வைராக்யம் அதற்கு கண்கள்! கவனிக்கப்பட வேண்டும். பாபங்களுக்கு காரணமாயிருக்கும் பஞ்சேந்திரியங்களில் முதன்மைத்தானம் கண்களுக்குத்தான். கண்களால் கண்டபின்தான் கருத்தழிகிறது. ஆகவே கண் விஷயத்தில் கண்ணுயிரு. சீதையின் அணிகளை இராமன்காட்டி, "இலக்ஷ்மணா இது சீதையினுடையதா?" என்று அரற்றும்போது, "அண்ணா! இதோ! இது! அண்ணியுடையதே" என்று பாத (நுபுரம்)த் தணியும் அணியைக்காட்டி கூறுவதாக சித்தரித்துள்ளனர். மாமிஸப் பிண்டத்தில் பெருத்தது என்ன? சிறுத்தது என்ன? மாமிஸம்தானே என்று விசாரித்து தினம் மனமாசை அகற்று என்கிறார்.

★

"இலை நலவாயினும் எட்டிபழுத்தால்
குலை நலவாங்கனி கொண்டுணலகா"
முலை நலங்கொண்டு முறுவர் செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வைத்து கொள்ளீரே" (திருமூலர்)

REALITY is altogether different from apperance;
Appearance has an ephemeval EXISTENCE.

*(SAGE ASHTA VAKRA)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

நளினீ-தள-கத-ஜமலதி தரளம்
தத்வஜ்(த்) ஜீவிதம திசயசபலம் |
வித்தி: வ்யாத்யபிமாந க்ரஸ்தம்
லோகம் சோகஹதம் ச ஸமஸ்தம் || 4



''வாழ்க்கையை குடங்கவிழ் நீர்
ஓட்டமென்றேயிரு''

என்று பட்டினத்தார் கூறுவர். தாமரையிலையிலே நிற்கின்ற நீர்த்துளிபோல் சஞ்சலமுள்ளது வாழ்வு.

நீர்க்குமிழிக்கு நிகராகும் இவ்வாழ்வு, இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பர் என்றெண்ணவோ திடமில்லையே'' (தாயுமானவர்) கூறுவர் வியாதியும் அபிமானமும் பீடித்து துன்பத்துக்கு இருப்பிடமானது இவ்வுலகம். இதிலிருந்து நிரந்தரமாக விடுபட கோவிந்தனை பஜி என்கிறார் ஆசாரியாள்.

★

To BE MORE than Man, To be blessed with the Divine Vision of the Brahmam, One must have Self Discipline.

*(SAGE ASHTA VAKRA)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

யாவத் வித்தோபார்ஜந ஸக்த:
தாவந்நிஜ பரிவாரோ ரக்த: |
பஸ்சாஜ்(த) ஜீவதி ஜர்ஜர—தேஹே
வார்த்தாம் ப்ருச்சத்தி கோபி ந கேஹே || 5

"அற்றகுளத்து அருநீர்ப் பறவை போல" செல்வம் இல்லாவிடில் உற்றார் உறவினர் யாவரும் அங்கிலர். கறக்கும் பசுவிற்குத்தான் நல்ல தீவனம் கிட்டும்! அதுபோல் சம்பாத்யம் இருக்கும்போது குசலம் விசாரிக்கும் சுற்றமும் உற்றமும் வயது தளர்ந்து வருமானம் குறைந்தால் நீர்பறவைகள் வற்றிய குளத்தைவிட்டு நீங்குவதுபோல் சொல்லாமல் கொள்ளாமல் விலக முற்படுவது இயற்கை அந்த நிலையில் ஏமாற்றமடையாமலிருக்க, இளமையின் துடிப்பும் மிடுக்கும் உள்ளபோதே உண்மை உறவான கோவிந்தனை ஸ்மரிக்க வேண்டும். இதனைப் பட்டினத்தாரும்,

தாயும் பகை கொண்ட பெண்டிர் பெரும் பகை
சேயும் பகை யுறவோரும் பகையிச் செகமும்
பகை ஆயும்பொழுது
அருஞ்செல்வம் நீங்கில் இங்கு ஆதலினல்
தோயுநெஞ்சே
மருதீசர் பொற்பாதம் சுதந்திரமே" என்ருர்.

★

"வாழ்வுமனைவியும் மக்கள் உடன் பிறந்
தாரு மனவே தெமக்கென்பர் ஒண் பொருள்
மேவுமதனை விரிவுசெய்வார்கட்குக்
கூவுந் துணையென்று கூடலுமாமே" (திருமூலர்)

If your aim in life is liberation, Renounce the sense objects as poison & Drink the Nectar of Truth, Kindness, Straight forwardness & for giveness.

*(SAGE ASHTA VAKRA)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

யாவத் பவனோ நிவஸதி தேஹே
தாவத் ப்ருச்சதி குசலம் கேஹே |
கதவதி வாயௌ தேஹாபாயே
பார்யா பிப்யதி தஸ்மிந் காயே || 6

எதுவரை ஓட்டைப் பாண்டமான இவ்வுடலில் மூச்சுக்காற்று உள்ளதோ அதுவரையே க்ஷேம லாபங்களை விசாரிக்கப்படுகிறது. பிராணவாயு வெளியேறியபின் அத்தேகத்தைக் கண்டு மனைவியும் பயப்படுகிறாள்.

“கட்டியணைத்திடும் பெண்டிரும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம் போல் சரீரத்தை
வீழ்த்திவிட்டால்
கொட்டி முழககி யழுவர் மயானம் குறுகி
அப்பால்
எட்டி அடி வைப்பரோ இறைவா!
கச்சியே கம்பனே”

என்று வீடுவரைவும் காடுவரையும் தான் உறவு எல்லாம். இறந்தபின் ஏற்படும் நிலைகுறித்து சோர்வடையாமலிருக்க உயிருள்ளபோது கோவிந்தனைபாடு, அது சோர்வையும், பயத்தையும் போக்கும் என்கிறார்.

★

As Fire is different from the wood it illuminates ! You are different from the body. You are not the body. You feel that it is ‘My Body’. So you are different from that of the body.

*(SAGE ASHTA VAKRA)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

பாலஸ்தாவத் க்ரீடாஸக்த :
தருணஸ்தாவத் தருணீஸக்த :
வ்ருத்தஸ்தாவச்(த்) சிந்தாஸக்த :
பரே ப்ரஹ்மணி கோபி ந ஸக்த: ‖ 7

'பாலப்பருவம் விளையாட்டிலும், இளமைப் பருவம் பெண்களிடத்தும், வயோதிகனாகிய பின்னே மனக் கவலையிலுமே ஆழ்ந்து விடுகிறான். எவனும் ப்ரஹ்மத்தில் ஈடுபடுவதில்லையே' என ஆசாரியாள் நமக்காகப் பச்சாதாபப்பட்டு கோவிந்தனை சரணடையச் சொல்கிறார். இதனையே பட்டினத்தார்,

"தெருவிலிருந்து புழுதியளைந்து தேடிய பாலரோடோடி நடந்து—விளையாடியே" என்றும், 'மாமயில்போலவர் போவது கண்டு மனம் பொருமலவர் பிறகோடி" என்றும் கூறி அங்கலாய்க்கிறார்.

★

The knower of the Brahmam attains immortality; He lives, not for himself but for others as a becon light of Truth unto the world.

(*SANKARA*)

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

காதே காந்தா கஸ்தே புத்ர:
ஸம்ஸாரோ (அ)யம் அதீவ விசித்ர: |
கஸ்ய த்வம் க: குத ஆயாத:
தத்வம் சிந்தய ததிகம் ப்ராத: || 8



மூடனே, உன்னுடைய மனைவி, புத்திரன் யார்? இந்த மாய விசித்திர ஸம்ஸாரம் எல்லாம் ஆச்சரியமானது. நீ யாருடையவன்? எங்கிருந்து வந்திருக்கிறாய்? அந்த எங்கும் நிறை பரப்ரஹ்மமேதான் உன்னுடைய ஜீவாத்மாவும் என்ற உண்மையை அறிந்து கொள்.

"உற்றாரார் பெற்றாருடன் பிறப்பார்
பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும் போதுதவுவரோ?"

என்ற பட்டினத்தார் வாக்கு இதனையே குறிக்கிறது. மற்றவர் எவரும் நமக்கு உதவார். நாமே நமக்கு உற்ற துணை. பேரின்பமே உண்மை நிலை என்று கூறுகிறார். உன் பொறுப்புகளை நிறைவேற்றுபவன் கோவிந்தன். அவனுக்கு நன்றி செலுத்த அவன் நாமத்தை பஜி.

★

REFLECT WELL within your soul; REST there: The Need of liberation is Blessed peace.

*(ACHARYAL)*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் |
நிர்மோஹத்வே நிச்சலசித்தம்
நிச்சலசித்தே ஜீவன்முக்தி : || 9

'உலக உபகாரம் ஞானிகள் விவகாரம்' என்பது ஒரு சிறந்த பழமொழி. நல்லோர்கள் சேர்க்கை நல்ல எண்ணங்களை உண்டுபண்ணும். வழி தெரியாது வழுக்கல் பாதையில் தடம் புரண்டு உருண்டு விழாதபடி ஊன்றுகோலாக 'ஸத்ஸங்கம்' அமைகிறது.

"இழுக்கலுடைய யுழி ஊற்றுக் கோலற்றே
ஒழுக்கமுடையரர் வாய்ச் சொல்."

(திருக்குறள்)

அதன்பயனுக ஸங்கமின்றி இருக்க பழகுகிருன்: தியானிக்கிருன்: பிரார்த்திக்கிருன்! மோனத்திலிருந்து விடுபடுகிருன்! நிர்மோஹியானபின் அசஞ்சலமான மனமுடையானுகிருன். சஞ்சலமற்ற மனமே காற்றற்ற இடத்தே வைத்த தீபம்போல் ஜீவன் முக்தியளிக்கிறது. சாது சங்கம் ஜீவன் முக்திக்கு வித்து.

"நல்லாரிணக்கமும் நின் பூசை நேயமு
ஞானமும்"

என்ருர் பட்டினத்தார்.

ஜீவ பிரும்ம ஐக்கியத்தின் கோஷமே கோவிந்தன் நாமம்.

★

The fire of Yoga Burns the cage of Sin that is around a man. Knowledge becomes purified & NIRVANA is directly obtained.

—*Swami Vivakananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

வயஸி கதே க: காமவிகார:
சுஷ்கே நீரே க: காஸார:
க்ஷீணே வித்தே க: பரிவார:
ஜ்ஞாதே தத்வே க: ஸம்ஸார: || 10

'வற்றிய நீரில்லாத காலத்தில் ஏரி என்று என்ன பெயர்? வயதான காலத்தில் காம விகாரம் இல்லை. பணமின்றேல் பந்துக்கள் ஏது? தத்வ ஞானம், சித்தியாயின் அங்கு ஸம் ஸாரம் எங்கு இருக்கும்?' என்கிறார். வெளிச் சம் உள்ள இடத்தே, சூரிய ஒளியின் முன்னே எவ்வாறு இருள் இருக்க முடியாதோ அப் படியே, ஞானிக்கு ஸம்ஸாரம் இல்லை.

"ஞானிக்கு இல்லை இன்பமும் துனபமும்"

ஞான சாகரமாகிய கோவிந்த நாம சங்கீர்த்தனத்தில் மூழ்கினால் ஞானம் தானே வருகிறது.

★

Meditation is the continuous flow of one thought of God or Atma, like the continuous flow of oil from one vessel to another. Meditation follows concentration; Meditation is the only Royal road to the attainment of Salvation—or Moksha.

—*Swami Sivanandha*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

மா குரு தந ஜந-யௌவ ந கர்வம்
ஹரதி நிமேஷாத் கால ; ஸர்வம் |
மாயாமயமிதமகிலம் ஹித்வா
ப்ரஹ்ம-பதம் த்வம் ப்ரவிச விதித்வா || 11

'தனம், உற்றம், யௌவனம் இவை யாவும் உளதென்று கர்வங்கொள்ள வேண்டாம்: இமைக்குமுன் அனைத்தும் காலத்தில் பிடியில் சிக்குண்டு சிதறுண்டு போகும். அகிலமும் மாயாமயம். ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்று உணர்ந்து அதை அடைவாயாக. அந்த ஸத்ய ஸ்வரூபன்தான் கோவிந்தன் என்ற வேங்கடமுடையான்!

"நீரிற்குமிழி இளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று" (நீதிநெறி)

★

There is not even an iota of Bliss in this world. All are illusory in this world. All worldly things are generative of pain only & fraught with all dangers. This precious life is meant for attaining Self-realisation.

—*Swami Sivanandha*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

தின–மபிரஜனீ ஸாயம் ப்ராத :
    சிசிர–வஸந்தௌ புநராயாத : |
கால : க்ரீடதி கச்சத்யாயு :
    ததபி ந முஞ்சத்யாசா–வாயு ॥ 12

கங்குலும் பகலும், காலையும் மாலையும் சிசிர ருதுவும் வஸந்த ருதுவும் மாறி மாறி மீண்டும் மீண்டும் வருகின்றன. காலம் என்னும் பக்ஷி சிறகடித்துப் பறக்கிறது. காலத்தின் விளையாட்டில் ஆயுள் போகிறது. அப்படியிருந்தும் ஆசையை விடுகிறதில்லையே.

கோவிந்தனை நினைத்தால், கலங்கவேண்டிய அவசியம் இல்லை.

"நாள் என ஒன்று போற் காட்டி, உயிர் ஈரும்
வாள துணர் வாரிப் பெறின்" (குறள்)

காலையில் சூரியன் கிளம்பும்போதே உயிர்த்தொகையின் உயிரினை முன்பணமாக வாங்கிக்கொண்டுதான் உயரே எழும்புகிறான். ஆகவே ஆசை வாய்ப்பட்டு அந்தகன் கைபடாது ஆனந்த நிலை எய்தும் வழியினை அடைவாய்.

★

Live under life-long Vows. Conquer your internal of and external nature. Fight against the antagonistic dark evil forces through Japa & Meditation.

—*Swami Sivanandha*

Koviloor Digital Library


# பஜ கோவிந்தம்

கா :தே காந்தா : தந-கத–சிந்தா
வாதுல :கிம் தவ :நாஸ்தி :நியந்தா |
க்ஷணமபி :ஸஜ்ஜந-ஸங்கதிரேகா
பவதி பவார்ணவ–தரணே நௌகா || 13

கவலைப்பட வேண்டிய ஞானமடையும் மார்க்கத்தைப்பற்றி நீ கவலைப்படவில்லை. மனைவி, பொருள் இந்தக் கவலை உனக்கெதற்கு? உனக்கு ரக்ஷகன் இல்லையா? க்ஷண நேர மாயினும் ஸாது ஜனங்களின் ஸங்கம் ஒன்றே பவக்கடலைத் தாண்டும் ஓடமாக ஆகிறது. ஆகவே, ஸாதுக்களின் கூட்டுறவை தேடு என்கிறார்.

கோவிந்தன் சந்நிதியில் இது நீ தேடா மலேயே வந்தடையும்.

"மாய நட்போரையும் மாய மலமெனு மாதரையும்
வீய விட்டாட்டி வெளியே புறப்பட்டு
மெய்யருளாந்
தாயுடன் சென்று பின் தாதையைக் கூட்டிப்பின்
தாயை மறந்
தேயுமதே நிட்டை யென்றுனெழிற் கச்சி
யேகம்பனே."

என்ற பட்டினத்தடிகள் வாக்கு இதையே குறிக்கிறது.

*

The organs are Separate States of the mind stuff. I see a book; the form is not in the book, it is in the mind. Something is outside which calls that form up. The real form is in the Chitta. The organs identify themselves with and take the forms of, whatever comes to them. If you can restrain the mind will remain calm. This is called pratyahara.

—*Swami Sivanandha*

Koviloor Digital Library


# பஜ கோவிந்தம்

ஜடிலோ முண்டீ லுஞ்சிதகேச :
காஷாயாம்பர பஹீக்ருதவேஷ : |
பச்யந்நபி ச ந பச்சிமூட :
உதர-நிமித்தம் பஹுக்ருதவேஷ : || 14

* * *

காவியுடுத்தும் தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்கும் தடுமாறிக்
காய்கனி துய்த்தும் காய மொறுத்துங்
காசினி முற்றும் திரியாதே
சீவனெடுக்கம் பூதவொடுக்கம்
தேறவு திக்கும் பரஞான
தீயவிளக்கங் கான வெனக்குள்
சீதள பத்மந் தருவாயே.

ஜடையினால் ப்ரஹ்மம் அடையப் பெறுவதில்லை. மொட்டை அடித்துக் கொண்டும், ஒவ்வொரு ரோமமாக பிய்த்து எடுத்து ஜைன சந்நியாசிபோல் ஆயினும், காஷாயம் முதலிய பலவித வேடங்களுடனிருந்தாலும், பரமார்த்த தத்துவம் பார்த்துக் கொண்டிருந்தாலும் பிரஹ்ம ஸாக்ஷாத்காரம் அடையவில்லையெனின் பயன் இல்லை. இந்த ஞானம் ஸித்திக்காவிடில் எல்லாம் வயிற்றுக்காக போடும் வேஷமாகிவிடுமல்லவா ? வேஷம் நிஜமாக மாற கோவிந்தனைப் பாடு!

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன
கந்தை சுற்றி
ஓடே யெடுத்தென்ன உள்ளன்பிலாதவர்"

என்ற பட்டினத்தடிகள் (சிவமயமாகுவதே) அன்பு மயமாவதே சிவம் அதுவே மோக்ஷம் என்கிறார்.

★

Dharana is holding the mind on to
some particular object.

—*Swamiji*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தசந-விஹீநம் ஜாதம் துண்டம் |
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாசா பிண்டம் || 15



முக்காலுக்கேகாமுன் முன்நரையில் வீழாமுன் அக்காலரைக்கால் கண்டஞ்சாமுன் விக்கி இருமாமுன் ஒரு மாவின்கீழ் உறைவானை உள்' என்று பின்ன எழுத்துக்களான முக்கால், அரை, கால், அரைக்கால் இருமா, ஒருமா என்று வைத்துப் பாடும்படி கூறிய அரசனுக்கு ஒரு புலவர் இருபொருள்பட இப்படிப் பாடினர். மூன்று காலாகி அதாவது கைத்தடி பற்றி நடப்பதற்கு முன் தலை நரைக்குமுன், எமதூதரைக் கண்டு பயப்படுமுன், விக்கலும் இருமலும் வருமுன், கச்சி மாவடி சிவனை நினை என்ருர். அதையேதான் இப்பாடல் உணர்த்துகிறது. உடல் தளர்ந்து, தலை நரைத்து பற்கள் அற்று தடிபிடித்து தடுமாறும் கிழவனுகிய பின்னும் ஆசையை விடுவதில்லையே என்கிருர்.

"ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே"

என்கிருர் திருமூலர். கோவிந்தன் நாமம் ஆசை அழிக்கும் அருமருந்து.

★

"Man never progresses from EROR to TRUTH, but Truth to Truth, from lesser Truth to higher Truth."

—*Swami Vivakananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

அக்ரே வஹ்நி : ப்ருஷ்டே பாநு :
ராத்ரௌ சுபுக ஸமர்(ப்) பிதஜாநு : |
கர தலபிக்ஷஸ் தருதலவாஸ : ||
ததபி ந முஞ்சத்யாசா பாச: || 16

முன்புறத்து நெருப்பும்; பின்புறம் சூரியனும் இருக்கின்றனர். இரவின் குளிர் வேதனையால் மூப்பின் சேட்டையால் முழங்காலில் தலையிடுவன்போல் குறுகி படுத்துறங்குவதோ மரத்தடியில் என்றுலும் ஆசைக்கு இனிமையாயிராது நரையும் மூப்பும் வரவில்லையே. ஆசை அப்படியே இளமை முறுக்குடன் இக்கிழத்தையும் பந்தப்படுத்துகிறதே. காலத்தில் கோவிந்தனை பஜிக்காததால் ஏற்படும் வினை இது!

★

"You have Simply to Shine as the Soul of All, as the Source of Light, as the Spring of Delight, O Blessed ONE, and energy, life, activity will naturally begin to radiate from you. The flower blooms and lo! fragrance begins to emanate of itself.

—*Swami Ramthirtha*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

குருதே கங்கா-ஸாகர கமநம்
வ்ரத-பரிபாலந மதவா தாநம் |
ஜ்ஞாந விஹீந : ஸாவமதேந
முக்திம் பஜதி ந ஜந்ம சதேந ‖ 17

'கங்கையிற் படிந்திட்டாலும், கடலில் மூழ்கிட்டாலும் விரதங்கள் பல நோற்றிட்டாலும் தானங்கள் கோடி ஆற்றிட்டாலும் எம்மதத்திலும, ஞானமடையார் எனின் (நூறு பிறவி எடுத்தாலும்) மோக்ஷமில்லை' என்கிறார். எல்லா மாக விளங்கும் கோவிந்தனுடைய புகழ் ஏணியின் உயரததைக் கண்டு வியந்து பாடுகிறார் ஆசாரியாள், இதனையே அப்பர் பெருமானும்,

"கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்கு தண் குமரித்துறையாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீராடிலென்
எங்கும் ஈசனெனுதவர்க் கில்லையே"

என்கிறார். எங்கும் ஈசன் என்றார் அதாவது பரப்பிரம்மம்தான் இவ்வுலகத்திலும் தன்னிலும் வியாபித்துள்ளது என்ற ஞானநிலை அடையாது மற்றவைகளால் மட்டும் பயன் ஏது என்கிறார்.

★

"It is Advaita of India—Non—dualism, UNITY, the idea of ABSOLUTE, of the Impersonal God; "The only religion that can have any hold on intellectual people"

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

ஸுர-மந்திர-தரு-மூலநிவாஸ :
சய்யா பூதலமஜிநம் வாஸ: |
ஸர்வ-பரிக்ரஹ-போக-த்யாக :
கஸ்ய ஸுகம் ந கரோதி விராக : || 18

'தேவாலயத்திலும், மரத்தின் அடியிலும் வாஸம் செய்தல், தரையிலே படுத்தல், மான் தோல் ஆடை, (சகலத்தையும்) பொருள்களை அநுபவித்தலை விட்டுவிடுதல், நிராசையுடன் இருத்தல் இவைகள்தான் சுகத்தின் இருப்பிடம்: கோவிந்தனை உணரும் உபாயம்' என்கிருர்.

நவகோடி செட்டியாராக இருந்த பட்டினத்தடிகள் எல்லாவற்றையும் வாரி எறிந்து விட்டு குப்பைத் தொட்டியின் பக்கம் கட்டின கோவணத்துடன் உட்கார்ந்து பேரின்பத்தில் திளைத்து இருந்தார். அதுகேட்ட அவர் நண்பரான அரசன் வந்து, 'என்ன செட்டியாரே, இதில் என்ன சுகம் கண்டீர்? ஏன் இப்படிச் செய்தீர்?' என்றான். "நீ நிற்க நான் இருக்க" என்றுராம் பட்டினத்தடிகள். ஆகவே, ஆசையை பெருந்தீயாகவும், அநுபவித்தல் நெய்யாகவும் இருக்கிறபடியால் அநுபவித்தலினல் அவ்வாசை போதும் என்று தீருவதில்லை. அப்படியே துறப்பதலால்தான் தீரும்.

"உடுக்கக் கவிக்க குளிர்காற்று வெய்யி
லொடுங்கி வந்தால்
தடுக்கப் பழையவொரு வேட்டியுண்டு
சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்குமுண்டு
பசித்து வந்தால்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமககுக்
குறைவில்லையே"

என்று கூறுகிருர்.

★

We are now in the state of dream. If we wake up from the State, that is the State of Advaita. If this Siddhanta is retained in memory, at least one in a hundred thousand will endeavour to attain that State.

—*Kanchi Acharya Swamigal*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

யோகரதோ வா போகரதோ வா
ஸங்கரதோ வா ஸங்கவிஹீந: |
யஸ்ய ப்ரஹ்மணி ரமேத சித்தம்
நந்ததி நந்நதி நந்தத்யேவ || 19

‘யோகத்தில் ரமித்திருந்தாலும், போகத்தில் திளைத்திருந்தாலும் ஸங்கத்தில் சேர்ந்து இருந்தாலும், ஏகாங்கியாக தனியே இருந்தாலும், எவனுடைய மனமானது ப்ரஹ்மத்தில் லயித்துக்கொண்டே இருக்கிறதோ அவனுக்கு நிச்சயம் ஆனந்தமே கிடைக்கின்றது: அந்த பிரும்மம் கோவிந்தன் வடிவில் காட்சி தருகிறது’ என்கிறார்.

“எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே”

என்கிறார் பட்டினத்தடிகள்.

வேலையில் ஈடுபட்டிருக்கும்போது மனத்தை கடவுளுக்கும் கரத்தை வேலைக்கும் கொடு. வேலையில்லாதபோது இரு கைகளாலும் கடவுளுடைய பாதாரவிந்தங்களைப் பற்றிக்கொள் என்று இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறுவார்.

★

There is nothing Holier in the world than to keep good company, because the good impressions will then tend to come to the surface.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

பகவத்-கீதா கிஞ்சிதத்ஹீதா
கங்கா-ஜல-லவ-கணிகா-பீதா |
ஸக்ருதபி யேந முராரி-ஸமர்ச்சா
க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா || 20

'தத்துவ ஞான உபதேசமான பகவத் கீதையை சிறிசளவாவது அத்யயனம் செய்திருந்தால், ஒரு சிறு துளியாவது புனித கங்கையின் நீரை அருந்தியிருந்தால், பசுக்களாகிய ஆன்மாக்களை ரக்ஷிக்கும் முரனைக்கொன்ற கிருஷ்ண பரமாத்மாவை அர்ச்சனம் செய்திருந்தால் அவனுக்கு யமனுடன் தகராறு ஏதும் இல்லை' என்கிறார்.

ஸகல வேத உபநிஷதங்களின் சாரம் கீதை. அதைப் படிப்பதால் மனம் பக்குவமடைந்துவிடும்: காசியாந்தே மரணம் முக்தி; என்று காசி க்ஷேத்திரத்தின் மஹிமை கூறப்படுகிறது.

மஹாவிஷ்ணுவின் பாதத்திலிருந்து உத்பவமான கங்கையும் முகத்திலிருந்து உதித்த கீதாசாரமும் பரம பாவனமானது. கோவிந்தனுடைய இலக்கணம் இங்கு தரப்படுகிறது.

★

"Avoid evil company, because the scars of old wounds are in you and evil company is just the thing that is necessary to call them out."

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

புநரபி ஜநநம் புநரபி மரணம்
புநரபி ஜநநீ-ஜடரே சயநம்
இஹ ஸம்ஸாரே பஹுதுஸ்தாரே
க்ருபயா’ (அ)பாரே பாஹி முராரே । 21

‘மீண்டும் மீண்டும் பிறப்பு, இறப்பு, மீண்டும் மாதாவின் வயிற்றில் ஜனனம். இதைத் தாண்டுவதற்கு மிகவும் கடினமானதாகிய ஸம்ஸாரக் கடலிலிருந்து கருணையினால் என்னை ஹே! கிருஷ்ணா! காப்பாற்று’ என்று நாம் அசட்டையாக இருந்துவிடக் கூடாதே என்பதற்காக பரமாசாரியாள் நம் ஸ்தானத்தில் இருந்து கோவிந்தனை அழைக்கிறார்.

“மாதாவும் உடல் சலித்தாள் வல்வினையேன் கால் சலித்தேன்
வேதாவும் கை சலித்துவிட்டானே நாதா
இருப்பையூர் வாழ்சிவனே மற்றுமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா”

என்று பட்டினத்தடிகளும் இப்படியே அலறுகிறார்.

பிறப்பிறப்பற்ற நிலையை அடைவதே ஜீவன் முக்தி.

★

For a Yogi, certain regulations as to food are necessary. We must use that food which brings us the purest mind. If you go into the menagerie, you will find this demonstrated at once. You see elephants huge animals but calm & gentle, and if you go towards the cage of the lion & tiger, you will find them restless, showing how much difference has been made by food.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

ரத்யா-கர்(ப்)பட-விரசித-கந்த :
புண்யா புண்ய-விவர்ஜித-பந்த : |
யோகீ யோக-நியோஜித-சித்தோ
ரமதே பாலோந்மத்தவத்தேவ || 22

கந்தையை உடுத்தியும், புண்ணிய பாபங்களை விட்டு ஞானத்தில் திளைப்பவரும், யோகத்தில் நிறுத்தப்பட்ட சித்தமுடைய யோகி பாலன்போலும், உன்மத்தன் (பைத்யம்) போலும் ப்ரஹ்மத்தில் லயிக்கிறான். அதாவது அவனே கோவிந்தனாக மாறிவிடுகிறான்.

"சென்றது கருதார் நாளைச் சேர்வது
நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யினிலவாய்
விண் விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையாய்
ஒன்றும் பாரார்
நன்று தீ தென்னார் சாட்சி நடுவான
சீவன் முத்தர்"
(கைவல்ய நவநீதம்)

"ஊமர் போல்வர் உன்மத்தர் போல்வர்,
சேயே போல்வர்
மெஞ்ஞானம் தெளிந்தவரே"

என்பதும் ஈண்டு கருதற்குரியது.

★

The Yogi alone has the Sushumna open when this Sushumna current opens and begins to rise we get beyond the senses, our minds become Super sensous, Super conscious—we get beyond even the intellect where reasoning cannot reach.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

கஸ்த்வம் 'கோ'ஹம் குத ஆயாத ;
காமே ஜநநீ கோ மே தாத : |
இதி பரிபாவய ஸர்வமஸாரம்
விச்வம த்யக்த்வா ஸ்வப்ந-விசாரம் ॥ 23

கனவுக்கு ஒப்பான இவ்வாழ்க்கையை ஸாரமில்லாதது என்று விட்டுவிடு. 'நான்யார்? எங்கிருந்து வந்தேன்? என் தாயார் யார்? தகப்பனுர் யார்?' என்று ஆத்ம விசாரணையில் இறங்கு. கோவிந்தன் மனத்தளத்தில் வியாபிப்பான்.

இங்கு ஸ்ரீ ரமண மஹரிஷியின் வாக்குகள் கவனத்துக்குரியது

"நானுரென மனமுண் ணுடியுள நண்ணவே
நானு மவன்றலை நாணமுற—நானுத்
தோன்றுமொனறு தானுகத் தோன்றினு
நானன்று பொருள்
பூன்றமது தானும் பொருள்"

(உள்ளது நாற்பது)

★

Behind every particular thought there is a general thought 'I', That is yourself. Stick to this 'I' thought and question it to find out what it is! When this question takes strong hold on you, you cannot think of other thought.

—*Bagwan Ramana*

Koviloor Digital Library



# பஜ கோவிந்தம்

த்வயி மயி ஸர்வத்ர ஏகோ விஷ்ணு:
வ்யர்த்தம் குப்யஸி மய்ய ஸஹிஷ்ணு: |
ஸர்வஸ்மிந்நபி பச்யாத்மாநம்
ஸர்வத்ரோ த்ஸ்ருஜ பேதாஜ்ஞாநம் || 24

உன்னிடத்தும் என்னிடத்தும் எவ்விடத்தும் விஷ்ணுவானவர் அதாவது, எங்கும் வியாபகமாகி நிற்கும் அப்பரம் பொருள்தான் உள்ளது. பொறுமையின்றி என்னிடத்து கோபமுறுகிறாய். எல்லாப் பொருள்களிலும் ஆத்ம ஸ்வரூபத்தையே பார். எவ்விடத்தும் பேதத்தை உண்டாக்கும் அஞ்ஞானத்தை விட்டு விடுவாயாக. இம்முயற்சியில் வெற்றி காண கோவிந்த நாம பஜனை பெரிதும் உதவும்.'

★

The Yogi must always practice. He should try to live alone. The companionship of different sorts of people distracts the mind; he should not speak much, because to speak distracts the mind.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

சத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌ
மா குரு யத்நம் விக்ரஹ ஸந்தௌ |
பவ ஸமசித்த : ஸர்வத்ர த்வம்
வாஞ்சஸ்யசிராத் யதி விஷ்ணுத்வம் ॥ 25



சத்ருவிடத்தும் நண்பனிடத்தும், புத்திரனிடமும், பந்துவிடமும் சண்டையிலும் ஒன்று சேர்தலிலும் பிரயத்தனப்படாதே! சீக்கிரமே நீ அந்த பரம்பொருளான எங்கும் நிறைந்த நிலையை விருப்பினால், எதிலும் கோவிந்தனை வைத்துப் பார்த்து ஸம சித்தமுடன் இரு.

★

Is there anything in dry intellectual Jargon? It only throws the mind off its balance and disturb it.

—*Swamiji*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

காமம் க்ரோதம் லோபம் மோஹம்
த்யக்த்வா (ஆ)த்மாநம் பாவய 'கோ'(அ)ஹம்
ஆத்மஜ்ஞாந - விஹீநா மூடா :
தே பச்யந்தே நரகநிகூடா : || 26

காமம், குரோதம், லோபம், மோஹம் முதலிய குணங்களை விட்டுவிடு. 'நான் யார்?' என்ற ஆத்ம விசாரணையில் இறங்கு! ஆத்ம ஞானமில்லாதவர்கள் மூடர்களாவர். அவர்கள் ஸம்ஸாரம் என்கிற நரகத்தில் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆனால் கோவிந்தனை பஜித்தால் நரகம் சொர்க்கமாக மாறிவிடுவது நிச்சயம்.

★

Be like a pearl oyster. First hear, then understand and then leaving all distractions, shut your mind to outside influences, and dovote yourself to developing the truth within you.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

கேயம்கீதா : நாமஸஹஸ்ரம்
த்யேயம் ஸ்ரீபதி - ரூபமஜஸ்ரம் |
நேயம் ஸஜ்ஜந - ஸங்கே சித்தம்
தேயம் தீநஜநாய ச வித்தம் || 27



'கீதையைப்பாடு. ஆயிரம் நாமாக்களை அன்போடு சொல், கோவிந்தனை தியானி. ஸத் ஸங்கத்தில் சித்தத்தை இருத்து, தீன ஜனங் களுக்கு உன் பொருளைக் கொடு' என்கிறார் பரமாசாரியாளான ஸ்ரீ சங்கரர். கங்கை, கீதை, காயத்ரீ, கோவிந்தன் இந்த நான்கு 'க' காரம் எவன் மனதில் இருக்கிறதோ அவனுக்கு மறுபிறவி யில்லை.

"கீதா கங்கேச காயத்ரீ
கோவிந்தேதி ஹ்ருதிஸ்திதே
சதுர் ககார ஸம்யுக்தே
புனர்ஜன்ம ந வித்யதே"

★

The whole idea of human life can be put into that one word, UNSELFISHNESS.

—*Swami Vivekananda*

கோவிலூர் ஆதீனம்

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

ஸுகத : க்ரியதே ராமாபோக :
பச்சாத் த(ஹ)ந்த சரீரே ரோக : |
யத்யபி லோகே மரணம் சரணம்
ததபி ந முஞ்சதி பாபாசரணம் ॥ 28



'ஸ்திரீகளின் சேர்க்கை ஸுகமாக செய்யப் படுகிறது. அந்திமக்காலத்து ஐயோ, வியாதி களின் பிடியில் சிக்குண்டு தவிக்கிறாய். உலகில் இறப்பு நிச்சயம்தான் என்று தெரிந்த பின்னும் கோவிந்தனை நினையாமல் பாபம் செய்வதையே தொடருகிறாயே!' என்று வருந்துகிறார்.

"சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க
வெற்றம்பலம் தேடிவிட்டாயே—நித்தம்
பிறந்த இடத்தை தேடுதே பேதைமட
நெஞ்சம்
கறந்த இடத்தை நாடுதே கண்."

என்று பட்டினத்தடிகளும், பெண்களை தாயாக பாவித்து உய்ந்துபோ' எனக் கூறுகிறார்.

★

Samoshi is the property of every human being—nay, every animal. From the lowest animal to the highest angel, sometime or the other each one will have to come to that state and then alone will real religion begin for him.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

அர்த்தமநர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி தத: - ஸுகலேச: ஸத்யம் |
புத்ராதபி தந - பாஜாம் பீதி:
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதி: || 29

செல்வத்தை பயனற்றதாக எண்ணிக் கொள். சிறிது சுகமும் அப் பொருளால் இல்லை என்பதே உண்மை. பிள்ளைகளிடத்திருந்தும் கூட பணம் உள்ளவர்களுக்கு பயம் உண்டு. இது உலக நியதி. தர்மத்துக்கு விருத்தமில்லாத ஆசையும் மோக்ஷத்துக்கு விரோதமில்லாத பணமும் தேவை என்றுதான் சங்கல்பம் செய்யும்போது கூட சொல்கிறார்கள். பணம் பகைமைக்கும் பயத்துக்கும் ஏதுவாகிறது. அதனால் மனநிம்மதி போய்விடுகிறது. மன நிம்மதியின்றி ஆத்மஞானம் எங்ஙனம்? பிறவியின் பயனே போய்விடுகிறதன்றோ? அதனால் பணம் என்பது உபயோகத்துக்கு தேவையே யன்றி அது முடிந்த முடிபு அல்ல. சுருக்கமாகக் கூறினால் அது ஒரு சௌச க்ருஹம் (Latrine). அது மிக தேவையான ஒரு இடமானாலும் அதுவே வீடாக முடியாது. அதுபோலவே தர்ம காரியங்களுக்கு பணம் தேவையாயினும் அதுவே (வீடு) மோக்ஷமாகி விடாது. 'பஜ கோவிந்தத்தின் நாயகனாகிய கோவிந்தன் லக்ஷ்மீ காந்தனாதலால் ஆசாரியாள் எச்சரிக்கையோடு பொருளையும் மெய்ப்பொருளையும் விளக்குகிறார்.

★

Your Heart is working for you round the clock. Whether you are happy or distressed, whether you are engaged in a holy or unholy activity, Why don't you think that 'HEART' atleast 24 minutes a day at the rate of 1 minute per hour in gratitude.

—*SENDIL THURAVI*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

ப்ராணாயாமம் :ப்ரத்யாஹாரம்
நித்யா(அ)நித்ய - விவேக -.விசாரம் |
ஜாப்ய - ஸமதே - ஸமாதி - விதாநம்
குர்வவதாதம் மஹதவதாநம் || 30



பிராணாயாமம், பிரத்யாஹாரம், நித்யா அநித்ய விவேக விசாரம், ஜபத்துடன் கூடிய ஸமாதி முறையை மிகச் சிறிது அனுஷ்டித்தாலும் பெரிய லாபத்தை தரும்.

''நித்ய அநித்யங்கள் நிண்ணயம் தெரி விவேகம்'' என்று கைவல்யத்தின் ஆரம்பமே எது நித்தியம், எது அநித்யம் என்று நிச்சயிக்கும் விவேகம் சாதன சதுஷ்ட்யத்தில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. அங்கசேஷ்டைகள் அகன்று அனந்த குணக்குன்றாகிய கோவிந்தனை அணுக ஆலோசனை கூறுகிறார்.

''இயம நியமமே யெண்ணி லாவாதன
நயமுறு பிராணாயாம நன் பிரத்யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
பயமுறு மட்டாங்க மாவதுமாமே''

(திருமந்திரம்)

உள்ளேயும் வெளியேயும் ஓடும் மூச்சை கட்டுப்படுத்தி நிற்பது பிராணாயாமம். இது மனமடக்க சற்று உதவியாகும்.

(சமம், தமம்,) அந்தக்கரணம், புறக்கரணம் இரண்டையும் தண்டித்தல்.

★

Take up one idea. Make that one idea your life—think of it, dream of it, live on that idea. Let the brain, Muscles, Nerves, every part of your body be full of that idea, and just leave every other idea alone. This is the way to sucess.

*SWAMIJI*

Koviloor Digital Library



# பஜகோவிந்தம்

குருசரணம்புஜ - நிர்ப்பர - பக்த :
ஸம்ஸாராதசிராத் பவ முக்த : |
ஸேந்த்ரிய - மாநஸ - நியமாதேவம்
த்ரக்ஷ்யஸி நிஜஹ்ருதயஸ்தம் தேவம் || 31

குருசரணத்தை கருத்தில் இருத்தி, தீவிர பக்தியுடையவனுகி ஸம்ஸாரத்தினின்று சீக்கிரம் விடுபட்டவனுய் இரு. இந்திரியக் கூட்டத்தையும் மனத்தையும் அடக்கினவனுக உன்னுடைய ஹ்ருதயத்தில் இருக்கும் பரமாத்மாவான கோவிந்தனை பார்ப்பாய்.

எல்லாவற்றிற்கும் மூலம் குரு. குருவின்றேல் குவலயத்தில் ஏதும் இல்லை தெய்வத்தை பிழைக்கினும் தப்பலாம். குருவினுக்கு பிழை எனில தெய்வத்தாலும் காப்பாற்ற இயலாது. குருவின் பாத தீர்த்தம் பவஸாகரத்தை வற்றச் செய்யும். குருவைவிட உயர்ந்த தத்துவம் இல்லை. குருவிற்கு பணிவிடையைவிட சிறந்த தடஸ் இல்லை. தத்வ ஞானத்தை உணாநத அக்குருவே பரம்பொருள.

"தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செபபல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே"
"தானே புலனைந்தும வசமாய்டும்
தானே புலனைந்தும் வசம் போயிடும்
தானே புலனைந்தும் தனனில மடைமாறும்
தானே தனித்தெம்பிரானைதனைச் சுநதித்தேனே."

ஆதிசங்கரரும் தன் குருவின் திருநாமத்தையே முன்வைத்து 'கோவிந்தம் பஜ' என்றதனுல் குருவின் மகிமையை அதிகம் கூற வேண்டாம்!

★

By continence, reverence & devotion to Guru success comes after a long time.

—*PATANJALI*

Koviloor Digital Library



# ஷட்பதீ ஸ்தோத்ரம்

அவினயமபனய விஷ்ணோ தமய
மனஸ்சமய விஷயமிருகத்ருஷ்ணாம் |
பூததயாம் விஸ்தாரய தாரய
ஸம்ஸார ஸாகரத : || 1

அவிநயம்—வணக்கமின்மை அழிவுக்குக் காரணம். இறுமாந்து நிற்பவன் காற்றடித்தால் விழும் நெடுமரம்போல் ஆவான். வணக்க முள்ளவன் நாணல்போல் வளைந்து கொடுத்து சிறப்புடன் அழிவின்றி இருப்பான். ஆதலால் முதலில் விநயத்தை கொடு என்கிறார். அடுத்து மான்போல் கானல் நீராகிய விஷயங்களில் ஓடும் மனத்தை அடக்கு. (சமம் அகக்கரண தண்டம்; தமம் புறக்கரண தண்டம்) ஸர்வ பிராணிகளிடத்தும் கருணையை பெருக்குவாய்; ஸம்ஸார மென்னும் இப்பெருங் கடலினை அடக்கச் செய்வாய், ஹே! விஷ்ணோ! என்று சமுத்திரத்தில் மிதக்கும் கலை வல்லவனால் பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனை அழைக்கின்றார்.

☆

"The best Guide in life is strength; In religion; as in all other matters, discard everything that weakens you! Have nothing to do with it."

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# ஷட்பதீ ஸ்தோத்ரம்

திவ்யதுநீமகரந்தே பரிமள பரிபோக ஸச்சிதானந்தே |
ஸ்ரீபதிபதாரவிந்தே பவபயகேதச்சிதே வந்தே || 2

ஸத்யபி பேதாபகமே நாத தவாஹம் நமாமகீநஸ்த்வம்
ஸாமுத்ரோஹி தரங்க : க்வசன ஸமுதரோ நதாரங்க : || 3

ஸ்ரீமந் நாராயணனது பாதங்களை தாமரையாகப் போற்றுகிறோம். அத்தாமரையில் ஜீவாத்மா என்ற வண்டு (வண்டுக்கு ஆறுகால், இந்த ஸ்லோகத்துக்கும் அதனுல்தான் ஷட்பதீ என்று கூறுகிறோம்) மொய்க்கட்டும் என்கிறார். ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கத்திலும்

"மன: ஷட்பதோ மே பவக்லேசதப்த :
ஸதாமோததாம் ஸ்கந்த தே பாத பத்மே!'

என்று இதையேதான் கூறுகிறார்.

ஈசனே, நம் இருவருக்கும் (அத்வைத சித்தாந்தப்படி) பேதமில்லைதான். எனினும் நான் உன்னைச் சேர்ந்தவன். ஆனால் நீ என்னைச் சேர்ந்தவனல்ல. ஏனெனில் அலை, கடலைச் சார்ந்ததுதானே தவிர, கடல் அலையைச் சேர்ந்ததில்லையே! அதனுல்தான் ஜீவன் முக்தனும், ஞானிகளும் பற்றின்றி ஞான கர்மங்களை பக்தியில் செய்கிறார்கள்.

★

Throw away all weakness. Tell your Body that it is strong; Tell your mind that it is strong and have unbounded faiths aud hope in yourself.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# ஷட்பதீ ஸ்தோத்ரம்

உத்ருத நக நகபிதநுஜ தநுஜகுலாமித்ர மித்ரசசித்ருஷ்டே
த்ருஷ்டே பவதி ப்ரபவதி நவபதி கிம் பவதிரஸ்கார :॥ 4

மத்ஸ்யாதிபிரவதாரைரவதாரவதா,வதாஸதாவஸுதாம் |
பரமேச்வர பரிபால்யோ பவதா பவதாபபீதோஹம் ॥ 5



ஆயர்பாடியில், கோவர்த்தன கிரியை எடுத்துக் குடைபிடித்து இந்திரனுடைய கர்வத்தை அடக்கினுய், வாமனுவதாரமாகி (உபேந்திரனுக) இந்திரனுடைய தம்பியாகி, அஸுர சக்ரவர்த்தி மஹாபலியினிடமிருந்து இந்திரனைக் காத்தவனே! அஸுர வம்சத்துக்கு சத்ருவாகி அமுதத்தை இந்திரனுக்கு அளித்தவனே! சூரிய சந்திரனைக் கண்களாக உடையவனே. (அகந்தையை அடக்கி, அரசு அளித்து, சாகாவரம் தருவதை இங்கு உபமானம் செய்கிருர்) பிரபுவாகிய நீ (விராட ஸ்வரூபம்) அறியப்பட்டால் ஸம்ஸாரபந்த நாசம் ஏற்படாமல் இருப்பதேது ?

பரமேச்வர! மீன் முதலிய அவதாரங்களால் எல்லாவற்றையும் காப்பாற்றுகிற உன்னுல் ரக்ஷிக்கப்படுபவனுக நான் இருக்கிறேன்.

★

A man feels that if he is unchaste Sprituality goes away! He loses mental vigour and moral Stamina. That is why in all the religious orders in the world which have produced spritual giants you will always find absolute chastity insisted upon-

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



# ஷட்பதீ ஸ்தோத்ரம்

தாமோதர குணமந்திர ஸுந்தரவதனரவிந்த கோவிந்த
பவ ஜலதி மதன மந்தர பரமம் தரமபனயத்யம் மே ||
நாராயண கருணமய சரணம் கரவாணிதாவகௌ சரணௌ
இதி ஷட்பதீமதீயே வதன சரோஜே ஸதாவஸது || 6

யோகிகளும் கட்ட முடியாத நீ வெறும் கயிற்றால் வயிற்றில் யசோதையால் கட்டப் பட்டவனுயிற்றே! குணங்களுக்கு இருப்பிடமே! தாமரை முகத்தானே! ஜீவாத்மாக்களை பால னம் செய்பவனே (கோபால) சம்ஸாரக் கடலை மந்திரமலைபோல கலக்குபவனே! நீதான் எனது தாங்கொணாத பயத்தை போக்கவேண் டும் என்கிறார்.

நாராயணா! கருணையே உருவானவனே! உன்னுடைய இரு தாமரைத் திருவடிகளை சரணமடைகிறேன். இந்த ஷட்பதீ ஸ்தோத்ரம் எப்போதும் என்னுடைய வாக்கில் சிக்க வேண்டும்.

சரணாகதி தத்வத்தையே சிறந்தது, அதுவே மோக்ஷஸாதனம், அங்கு-Ego-நான், என்ற அகந்தை இருக்கமுடியாது என்பதை கூறுகிறார். நாராயணா! கருணை உருவே! உனது சரணங்களை, சரணமாக அடைகிறேன் (என்ற ஷட்பதீ) அநுபதம் எப்போதும் என் வாக்கில் இருக்கட்டும். என்றும், வண்டாகிய என்மனம் உன் தாமரைத் திருவடியில் மொய்க்கட்டும் என்றும் கொள்ளலாம்.

★

When a man can direct his mind to any particular object and fix it there, and then keep it there for a long time, separating the object from the internal part, this is SAMYAMA; or Dharana Dhyna & Samadhi; one following the other and making one.

—*Swami Vivekananda*

Koviloor Digital Library



KOVILOOR-
(NEAR) KAR

(68-ம் பக்க தொடர்ச்சி)

ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள லக்ஷக்கணக்கானவர்களின் வீடுகள் எல்லாம் ஸ்ரீ காமகோடி பீடத்தைச் சார்ந்த உப மடங்கள் எனக் குறிப்பிடுவது மிகையாகாது. நமது காஞ்சி ஆசாரியாளின் மனப்போக்கையும், அந்த சக்தியின் ஆழத்தையும் அளவிட்டுச் சொல்வதில் யாரும் வெற்றி கண்டதில்லை! அவர்கள் திருவுள்ளம் காட்டியிருந்தால் ஸ்ரீ சிருங்கேரி பீட உப மடங்களைப்போல் நாட்டின் பல பாகங்களிலும் காமகோடி, உப மடங்களை நிறுவி அவற்றை நிர்வகிக்க சந்நியாஸ யோகத்தில் திளைக்கும் இளைஞர் பலரை நியமித்திருக்கக்கூடும். ஆனால், ஜனநாயகத்தில் அபார நம்பிக்கையுள்ள ஸ்ரீ ஆசாரியாள் ஸ்ரீ மடங்களுக்கும் பீடத்திற்குமிடையே உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்த விரும்பாமல், ஸ்ரீ காமகோடியை ஆச்ரயிக்கும் பக்தர்கள் இல்லங்களையே உப மடங்களாகத் திகழும்படிச் செய்தருளி, கண்டவரும் கேட்டவரும், மெய்சிலிர்த்து வியந்து பாராட்டும் வகையில் ஓர் அற்புதத்தை நிகழ்த்தியுள்ளார்கள்.

இந்நூற்றாண்டு ஆரம்பம்வரை கட்டுக்கோப்போடு இருந்துவந்த ஸ்ரீ சிருங்கேரி பீட உப மடங்கள், தலைக்குத் தலை நாட்டாண்மை செய்ய ஆரம்பித்ததும், அப்போது பீடாதிபதியாக இருந்த ஸ்ரீ நரஸிம்ம பாரதி சுவாமிகள், உப மடங்களை ஒதுக்கிவிட்டு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் ஜனநாயக ரீதியில் சிஷ்யர்களின் இல்லங்களையே உப மடங்களாக மாற்றியமைக்கும் புனித பணியில் ஈடுபட்டார்கள். இப்போதைய பீடாதிபதிகளும் தமது குருநாதர்களுடைய வழியைப் பின்பற்றி தமது திக் விஜயத்தின்போது தம்மைத் தரிசிக்கவரும் பக்தர்களிடம் விசேஷமான அக்கறை காட்டி அவர்களை நல்வழிக்குத் திருப்பி, நெறி வாழ்க்கைக்கான அஸ்திவாரத்தை அவர்கள் இல்லங்களில் அமைத்து ஸ்ரீ சிருங்கேரி உப மடங்களாக அந்த இல்லங்கள் திகழ உதவுகிறார்கள்.

* * *

Koviloor Digital Library



விசிஷ்டாத்வைத பீடாதிபதியான ஸ்ரீரங்கநாதனுக்கு உப மடங்கள் ஏராளம். அவற்றையும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் அவற்றில் சில ஏராளமான சிஷ்யர்களுக்குத் தலைமை தாங்கி தூய தெய்வீக வாழ்க்கை நீடித்து நடத்த உதவுகின்றன. அவற்றில் முக்கியமானவையாக ஸ்ரீ அகோபில மடம், ஸ்ரீ வானமாமலை மடம், ஸ்ரீ பரகால மடம்மூன்றையும் குறிப்பிடலாம். ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் ஸ்ரீ அகோபில மடத்தின் ஸ்தாபகர். ஸ்ரீ மணவாளமாமுனிகள் வானமாமலை மடத்தின் ஆதி அதிபர். விசிஷ்டாத்வைத சித்தாந்த ஆதி மடங்களுக்கு எதிர்ப்புகள் தோன்றுமலில்லை. இன்று நடைமுறையில் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சார்ந்த உப மடங்கள் பல காணப்படுகின்றன. திருப்பதியில் உள்ள ஸ்ரீ பெரிய ஜீயர்மடம் ஒன்றைத்தான் ஸ்ரீ ராமானுஜர் ஸ்தாபித்தார் என்று ஒரு வரலாறு கூறுகிறது. ஆனால் இந்த வரலாற்றுக் கூற்றை நம்புவோரைவிட நம்பாதவர்கள்தான் அதிகம். எப்படியிருந்தாலும் ஸ்ரீ பெரிய ஜீயர்மடம் மிக மிகப் பழமையானது என்ற உண்மையை மறுக்க யாரும் துணியமாட்டார்கள். ஸ்ரீ ராமானுஜருடைய சித்தாந்தத்தைப் பல்வேறு கொள்கையோடு இயங்கும் இந்த ஸ்ரீ மடங்கள் புறக்கணிக்கவில்லை. எல்லா மடங்களிலும் ஸ்ரீ ராமானுஜருக்கே முதல் இடம். அத்வைத சித்தாந்த பீடாதிபதிகளிடம் கருத்து வேற்றுமை இருந்தாலும், அவர்கள் எல்லோரும் ஸ்ரீ பகவத்பாதாளையே ஆதிநாயகனாக வழிபடுவதுபோல் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயக்காரர்களும், அவர்களுடைய ஸ்ரீ மடங்களும் ஸ்ரீ ராமானுஜரைத்தான் தலைவராக ஆராதிக்கிறார்கள்.

* • *

த்வைத சித்தாந்த மடங்கள் பல இருந்தபோதிலும், உடுப்பி அஷ்டமடங்களை ஸ்ரீ மத்வாசாரியரே ஸ்தாபித்தருளியுள்ளார். சித்தாந்த பிரசாரத்தைவிட, சித்தாந்த பீடாதிபதியான உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணன் வழிபாட்டைத் தொடர்ந்து நடத்துவது ஒன்றே இந்த அஷ்ட மட அதிபதிகளுக்கு ஸ்ரீ

Koviloor Digital Library



மதவர் அளித்துள்ள மகத்தான பொறுப்பு. அந்தப் பொறுப்பை, அவர்கள் உட்பூசல் இன்றி பாரத இந்து சமூகம் உய்ய நன்கு நிறைவேற்றி வருகிறார்கள். த்வைத சித்தாந்த மடங்களில் மிகப் பெரியதும், செல்வமும் செல்வாக்கும் உள்ளதுமான ஸ்ரீ உத்ராதி மடத்திற்கு ஏராளமான சிஷ்யர்கள் உள்ளனர். அதற்கு அடுத்தபடியாகத்தான் ஸ்ரீ வியாஸ ராஜ மடத்தைக் குறிப்பிடலாம். உத்ராதி மடத்தைக் காட்டிலும் இன்று பிரபலமாக விளங்குவது ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் மடம். ஆந்திர பிரதேசத்திலுள்ள மந்திராலயத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் ஜீவிய சமாதி உள்ளது. அதன் பராமரிப்பை மைசூரில் நஞ்சங்கூடு என்ற இடத்தைத் தலைமை ஸ்தானமாகக் கொண்டு ஸநாதன தர்மத்தை பிரசாரம் செய்யும் ஸ்ரீ மத்வ பரம்பரை மடாதிபதிகள் கவனித்து வருகிறார்கள். ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் மடம் சமீபத்தில் (300 ஆண்டுகளுக்கு முன்பு) ஏற்பட்டது என்றாலும் த்வைத சித்தாந்தக்காரர்களின் உயிர் நிலையாக அது திகழ்கிறது! இன்னும் சொல்லப் போனால் பிரார்த்தனை தலமாக விளங்கும் மந்திராலயம் எல்லா சித்தாந்தக்காரர்களுக்குமே நிவாரணம் தருகிறது என்ற காரணத்தால் ஸ்ரீ மத்வாசாரியரின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டும் த்வைத சித்தாந்த மடங்கள் எல்லாவற்றுக்கும் ஒருபடி மேலாகவே அது கருதப்படுகிறது.

அடுத்து சைவசித்தாந்த பரம்பரை மடங்களைப் பற்றி குறிப்பிட வேண்டியதவசியம். திராவிடத்தில் சைவம்தான் பெரும்பான்மையோரால் அனுஷ்டிக்கப்படுகிறது. சைவ மடங்கள் தெற்கில் இருப்பதுபோல் வடக்கில் இல்லை. தெற்கிலும் தமிழ் நாட்டில்தான் சைவம் முறையோடு ஆராதிக்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் சைவத்துக்கும் வைஷ்ணவத்திற்கும் போட்டி ஏற்பட்டபோது சைவ சமயாசாரியர்கள் ஈசன்புகழையும், சித்தாந்தச் சிறப்பையும் மையமாக வைத்து கணக்கிலடங்காத வகையில் அருமையான பாடல்களைப் பாடியுள்ளார்கள். தவிர சிவ பக்தியில்

Koviloor Digital Library



தினைத்த இவர்கள் அநேக அற்புதங்களையும் நிகழ்த்தி மக்களை சைவ வழிபாட்டில் ஈடுபடுத்தினார்கள். இன்று அந்தப்புனித சிவனடியார் பரம்பரைக்கு மாசு ஏற்படாதவகையில் தமிழ் நாட்டில் பிரபலமான சைவ மடங்கள் இயங்கி வருகின்றன. மிகப் பழமையானதும், கீர்த்தி வாய்ந்ததுமான தருமை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் இரண்டும் சைவ சமயத் தொண்டைச் சிறப்பாகச் செய்துவருகின்றன. இவற்றைத் தவிர திருப்பனந்தாள் மடம், திருவண்ணாமலை ஆதீனம், மதுரை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் எல்லாம் தமிழன்னைக்கு சைவ சமய திருஆபரணங்களை தேகமெல்லாம் சாத்தி உலகம் போற்ற சைவ சமயத்தை ஜொலிக்கும்படி தொண்டாற்றி வருகின்றன!

* * *

'காஞ்சியில் காலடி' கட்டுரைத் தொடரின் நோக்கம் ஸ்ரீ காமகோடி பீடத்தின் வரலாறு, சிறப்பு, இன்றைய பீடாதிபதிகளின் வாழ்க்கை, திக் விஜயங்கள்பற்றி எழுதுவதுதான். ஆனாலும் இந்து மதத்தின் அங்கங்களாக விளங்கும் எல்லா சமயங்களும் திராவிடத்தில்தான் வேரூன்றியுள்ளன என்பதை ஆரம்பத்தில் குறிப்பிட்டு விடுவதுதான் பொருத்தமாயிருக்கும் என்ற காரணத்தால் அஸ்திவாரத்தை பலமாகப் போட்டிருக்கிறோம். ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் அருளாசியால் பலமான கட்டடம் மேலெழும்பும் என்ற நம்பிக்கையோடு, ஸ்ரீ அத்வைத சித்தாந்த பரமாசாரியாளான ஸ்ரீ பகவத்பாதாள் உலக மாந்தருடைய வாழ்க்கை விநோதத்தை பளிங்குபோல் தெளிவாக்கிக் காட்ட பாடி அருளிய 'பஜகோவிந்த'த்தை இடையில் 69ம் பக்கத்திலிருந்து 135ம் பக்கம் வரை பாராயணம் செய்து பரவசமடைந்தோம். இன்று அகில இந்திய தெய்வ நிலையாக விளங்கும் ஏழுமலையானை பரமாசாரியாள் 25 நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொழுதேற்றி ஆனந்தமடைந்ததற்குச் சான்றாக பஜகோவிந்தம் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

# ஒரு விளக்கம்

காஞ்சியில் காலடி முதல் பாகத்தின் கடைசி அத்தியாயம் 'குருபீடம் கண்ட பட்டணம்' என்ற தலைப்பில் முற்றுப் பெற்றது. 1958ல் ஆனந்த விகடனில் தொடர்ந்து வெளியான கட்டுரைகளின் சேர்க்கையே அதுவாகும். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தமது பிரதம சிஷ்யர் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் தலைநகரில் பட்டினப்பிரவேசம் செய்தருளினர். தொடர்ந்து 1957, 58, 59 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் சென்னை நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் பல இடங்களிலும் ஸ்ரீமடத்தின் முகாமை அமைத்து நகர மாந்தர் அனைவருக்கும் அருளாசிகள் வழங்கினர்கள்.

முறையோடு பார்த்தால் இந்த இரண்டாம் பாகத்தில் ஸ்ரீபெரியவர்களும், புதுப்பெரியவர்களும் சென்னை நகரத்தை புனிதப்படுத்திய அற்புத நிகழ்ச்சிகளைத் தான் தொடர்ந்து எழுதவேண்டி வரும். ஏனெனில், 'குருபீடம் கண்ட பட்டணம்' என்ற தலைப்பின்கீழ் ஸ்ரீகாமகோடி பீடத்தை அலங்கரித்த முந்தைய ஆசாரியர்கள் விஜயம் செய்த வரலாறுகளையும், நகரம் வளர்ந்த கதையையும் ஸ்ரீமடத்தின் குறிப்புகளிலிருந்து விவரங்களைச் சேகரித்து தொடர் கட்டுரையாக ஸ்ரீ பெரியவர்களின் அங்கீகாரத்தோடு எழுதி பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. அதன் இறுதியில் 1957ம் ஆண்டு மத்தியில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் சென்னையில் முகாம் இட்டிருந்ததைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, நகரமெங்கும் ஒலித்த 'ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர'

Koviloor Digital Library



என்ற பகவத் பாதாளின் திவ்ய நாம புனித காற்றை பாவம் நீக்கும் அருமருந்தாக சுவாசித்து இன்பம் எய்தியதை ஞாபகப படுத்திக்கொண்டோம்.

இரண்டாம் பாகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வாசகர்களில் சிலர் மிக உற்சாகத்தோடு ஸ்ரீபரமாசாரியர்களின் சென்னை விஜய வரலாறுகளைப் படித்துப் பரவசமடைய தாங்கள் தயாராக இருப்பதை கடிதங்கள் எழுதித் தெரிவித்திருந்தார்கள். வேறு சில வாசக ரசிக மணிகள் 'இரண்டாம் பாகத்தை நூதனமாக அமைப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் 68-வது பீடாதிபதிகள் மூன்று முறை — அதாவது 1932ம் ஆண்டு, 1957ம் ஆண்டு, 1965ம் ஆண்டு-சென்னை நகரத்திற்கு விஜயம் செய்தருளினார்கள். அதேபோன்று அவர்களுடைய பிரதம சிஷ்யரும், ஸ்ரீபீடத்தின் 69-வது ஆசாரியர்களாகவும் திகழும் ஸ்ரீபுதுப் பெரியவர்களும் மூன்று முறை பட்டினப் பிரவேசம் செய்து அருளியிருக்கிறார்கள். 1957, 58-59லும், 1965-66லும் தமது குருநாதராகிய ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளோடும், 1976ல் தனியாகவும் மூன்று முறை விஜயம் செய்திருக்கிறார்கள். ஆக, ஸ்ரீகாமகோடி பீடம் இருபதாம் நூற்றாண்டில் நான்கு முறை சென்னை நகரத்திற்கு விஜயம் செய்த வரலாறுகளைச் சேகரித்து 'பட்டணம் கண்ட குருபீடம்' என்ற தலைப்பில் **காஞ்சியில் காலடியின்** ஒரு பாகமாகவே எழுதி வெளியிடலாமே! அந்த சந்தர்ப்பத்தை, நூதனமாக பிரசுர படைப்புக்களை அமைத்து வாசகர்களின் பேராவலைத் தூண்டுவதில் தனிச் சிறப்போடு விளங்கும் தாங்கள் ஏன் நழுவ விடுகிறீர்கள்?" என்று பதிப்பகத்தாரின் ஆவலைத் தூண்டும் வகையில் எழுதியுள்ளார்கள். யோசித்துப் பார்த்தபோது, அந்த

Koviloor Digital Library



வாசக ரசிக மணிகளின் அபிப்பிராயம் அமலாக்கு வதற்கு ஏற்றதே என்ற முடிவுக்கு வரவேண்டி இருந்தது.

ஆகவே, வாசக நேயர்கள் "பட்டணம் கண்ட குருபீட"த்தை படிக்க மேலும் கொஞ்ச காலம் காத் திருக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

* * *

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த ஆசாரியர்களில் ஸ்ரீ இளையாத்தாங்குடி சுவாமிகள் என்ற ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகள் காலத்தில் ஸ்ரீபீடம் மகோன்னத நிலையில் இருந்து வந்த வரலாறு ஸ்ரீமடத்து குறிப்புகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பின்வரும் தலைமுறைக்கு வழிக்காட்டியாக அமைந்துள்ள ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அதிஷ்டானம் இளையாத்தாங் குடியில் உள்ளது.

தவயோகம், ஆன்மீகம், நிர்வாகம் மூன்றிலும் மாபெரும் வெற்றி கண்ட அந்த சுவாமிகளின் அதிஷ் டானத்திற்கு சென்னையிலிருந்த முகாமை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் எடுத்துச் செல்ல இளையாத் தாங்குடிக்கு பிரயாணமானார்கள். தமது பிரதம சிஷ்யருக்கு தாம் கற்ற வித்தைகள் அனைத்தையும் போதிக்கும் திவ்ய ஸ்தலமாக இளையாத்தாங் குடியை அவர்கள் மாற்றிய விந்தையையும், அந்த விஜயயாத் திரை விவரங்களையும், அச்சிறிய கிராமத்தில் முகாம் இருந்தபோது நடந்த நிகழ்ச்சிகளையும் வாசகர்கள் அடுத்த அத்தியாயத்தில் தொடர்ந்து படித்து இன்புற லாம்.

Koviloor Digital Library

# 6. நடமாடும் க்ஷேத்திரங்கள்

நமது பழம் பெரும் பாரதத்தின் ஆன்மீகம், சமயம், சமூகம் ஆகியனவை மேதைகளின் அறிவு ஆற்றல் மிகுந்த அநுபவம் வாயிலாகத் தோன்றியவையே! மதம் என்பதோ நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியது. "கடவுள் என்பவர் ஆகாயத்தில் எங்கேயோ இருந்து இயங்குகிருர் என்று யாரோ ஒருவன் கூறினல் அதை அவன் கூறுகிருன் என்பதற்காக என்னை நம்பச் சொல்கிருன். ஆயின் எனக்கும் எனக்கென்று ஒரு வழியும் யோசனையும் தோன்றலாமல்லவா? நான் அதைக் கூறி பிறரை கடவுள் இப்படித்தான் இருக்கிருர், இங்குதான் இருக்கிருர் என்று சொல்லலாம். ஆனல் கேட்பவன் காரணமும் தகுந்த அத்தாட்சியும் கேட்பானேயாகில் அவனுக்கு சரியான பதில் தர இயலாது. மதம், என்பது ஒருவனுடைய ஆன்மீக உணர்ச்சியால் ஏற்படும் வெவ்வேறு நிலைகள் என்பதுதான் இதற்குக் காரணம். படித்த இளைஞர்களில் சிலர் மத சம்பந்தமான கூற்றுகள் யாவும் வெறும் ஏட்டுச்சுரைக்காய் எனலாம். மதத்துக்கு மதம் கொள்கை விளக்கங்கள் வேறுபட்டதாயினும், அடித்தளத்துக்குப் போய் பார்க்கும்போது, எம்மதத்துக்கும் சம்மதமான ஒரு பொதுப்படையான கருத்து இருந்தேயாக வேண்டும். அதுதான் உலக சமயங்கள் யாவும் ஒத்துக்கொள்ளும் அநுபவ அறிவு. உலகில் மதங்களைப் பார்த்தால் அவற்றை இரண்டு விதமாகப் பிரித்துவிடலாம். ஒன்று புத்தகம் மூலமாக யாரோ எப்போதோ வாய்மொழியாக கூறியவற்றைக் குறித்து வைத்த தனி மனிதர் தோற்றுவித்த மதம் என்றும், மற்றது புத்தகம் இல்லாத மதம் என்றும் கூறப்படுகிறது. புத்தகம் உடைய மதத்துக்கு அம்மதத்தை தழுவுபவர்கள் (followers) நிறைய இருப்பர். அம்மதம் பல மிகுந்ததாகவும் இருக்கும். புத்தக மூலமில்லா மதம் கிட்டத்தட்ட இறந்துவிட்டது எனலாம்" என்று அறிவுக் கனலாக ஜொலித்த சுவாமி விவேகானந்தர் கூறுவர்.

Koviloor Digital Library



கிறிஸ்துவர்கள் "இயேசுவையே நம்புங்கள் அவர் கடவுளைக் கண்டவர். அவதார புருஷர்" என்பர். மூலத்துக்கு ஆராய்ந்து செல்லுவோமாயின் இயேசுவின் அநுபவ அறிவே 'பைபிள்' என்பது. அப்படியே புத்தரின் அநுபவங்கள் புத்த மதத்தை தழுவி கடைப்பிடிப்பவர்களுக்கு மூலமாகிறது. இந்து மதம் வியாஸ பகவான் அநுபவத்தின் வாயிலாகத் தோன்றியதாகக் கருதினாலும், மூதாதையரான ரிஷிகள், அவர்களின் தூய வாழ்வு, உணவு, தவம் முதலியவற்றால் சில உண்மைகளை அறிந்து அவற்றை தமது அநுபவநூலாக பிரித்தனர். அவைகள்தான் வேத வேதாங்க சாஸ்திரங்கள், யோக நூல்கள்! ஆக எம்மதத்துக்கும் அநுபவமே அடிப்படை என்பது மறுக்க முடியாத உண்மை.

• • •

வேதம், உபநிஷதம், இதிகாசம், புராணம் சாஸ்திரம், ஆகமம் கலை, கலாசாரம், தத்துவம் முதலியன நமது தேசத்தில் ஊறி, ஒன்றிப்போன பொக்கிஷங்கள். இவைகளின் அங்கங்களாக பல்வேறு துறையில் ஈடு இணையின்றி வாழ்ந்து வர மாபெரும் மன்னர்கள் அவர்களுக்கு மான்யங்களும் சன்மானங்களும் வழங்கிய காலம் நாளடைவில் குறைந்து, கலை வல்லுநர்கள் தம் வாழ்நாளையே கழிக்க சிரமப்படுகின்ற நிலையும் ஏற்படத்தான் செய்தது. 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பதற்கொப்ப தமிழ் நாட்டின் தலைநகரை சீர்திருத்தி பதப்படுத்தி நன்விதைகளை ஊன்றி அவை செழிப்புடன் வளரும்வரை அருள் நீர் ஊற்றி அதுபோல் தானும் நடந்து காட்டி காத்து நின்ற பாங்கினை காமகோடி பீடத்து துறவரசு ஏற்று நடத்தியதை நினைந்து நினைந்து நெக்குருகாத நெஞ்சம் இருப்பதற்கில்லை. மரத்தின் கிளைகளும் இலைகளும் செழித்து வளரவேண்டுமாயின் வேரிலே ஊற்றம் வேண்டும். அதுபோல் கலை, கலாசாரம் தத்துவம் இவைகள் செழித்து வளரவேண்டுமாயின் வடமொழி (சமஸ்கிருத) ஞானம் மிகவும் அவசியம் என ஆய்ந்தறிந்த

Koviloor Digital Library



அம்மகான், அதை நிறைவேற்றும் எண்ணத்தினராய் அந்நாள் முதலமைச்சர் பக்தவத்ஸலம் முதலியவர் ஒத்துழைப்போடு நாசரத் பேட்டையில் ஒரு மகாநாடு நடத்தி, கீழ்த்திசை பாஷைகள் (முக்கியமாக சம்ஸ்கிருதம்) வளரவேண்டி ஒரு வித்யாசங்கத்திற்கு அடிக்கோல் நாட்டினார்கள். சென்னையை விட்டு 'முகாம்' கிளம்பியதும் வழியில் பூவிருந்தவல்லி அருகே நடத்திய அரும்பணியாகும் இது. பிறகு செஞ்சி வழியே சிவசாஸ்திரம் தழைத்தோங்கிய அப்பய்ய தீக்ஷிதர் அவதரித்த தலமாகிய 'அடையபலம்' க்ஷேத்திர கும்பாபிஷேகத்துக்கென புதுப் பெரியவர்களுடன் சென்றனர்.

ஆரணியாற்றைத் தாண்டி அழகிய சித்தூர். ஆயிர மாயிரம் வேத வித்யார்த்திகள் பாடம் பயின்ற புனித பூமி மேலும் புனிதமாயிற்று. அப்பய்ய தீக்ஷிதர் காலம் எப்படி யிருந்திருக்கும் என்று கண்கூடாக் காண முடிந்தது! ஸ்ரீ கால கண்டேச்வரருக்கு கும்பாபிஷேகம் விமரிசையாக நடை பெற்றது. ஆரணி முழுதும் "காஞ்சி தந்த கருவூலமே! பேரறிஞரே வருக!" என்றெல்லாம் வாசகங்கள் எழுதி யிருந்ததை கவனித்த பெரியவர்கள் வேடிக்கையாக 'இது எனக்காக எழுதினதோ?' என்று வினவினர். ஆயின் அது அரசியல் நிபுணர் ஒருவரை வரவேற்க எழுதப்பட்டதாகும்!

மாலையில் ஸ்ரீ பெரியவாள் பேசுவதாக இருந்தது. மேடைமீதேறியமர்ந்து சற்று தமக்கே இயல்பான பாணியில் மௌனத்தை ஊன்றினார்.

"வேதங்களை பரம கருணையினால் வேதவியாஸர் தீர்க்க தரிசனத்தோடு ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று நான்கு கிளைகளாக வகுத்தார். பிற்காலத்தில் கலியின் கொடுமையால் கிரஹிக்கும் சக்தி குறைந்துவிடும். அப்போது ஒவ்வொரு (சாகை) கிளைகளையுமாவது ஒரு பரம்பரையினர் ரக்ஷிக்கட்டும் என்ற பரமகருணையே இதற்குக் காரணம். ஸுமந்து, பைலர், ஜைமினி, வைசம்பாயனர் என்ற நான்கு ரிஷிகளிடத்தில் முறையே, ரிக்வேதம் அதர்வணம், ஸாமம்

Koviloor Digital Library



யஜுர் வேதத்தை ஒப்படைத்தார். உபநயன காலத்தில் 'அபிவாதயே' சொல்லும்போது இன்ன ரிஷி பரம்பரை இன்ன கோத்திரம், இன்ன ஸூத்திரம் என்று இன்றும் சொல் கிறோம். இன்னும் நம்முடைய இரத்தம் ரிஷி பரம்பரை யினருடையதுதான்; அணுப்பிரமாணம் இருப்பதை மேலும் மேலும் வளர்த்து உமியிடையே வைத்த தீப்பொறிபோல் அதை விருத்தி செய்யவேண்டும். இது நமக்கு மூதாதையர் கள் விட்டுச் சென்ற அழியாத சொத்து.

"பரம்பரைச் சொத்துக்குப் பணமானால் சண்டை போட்டு பங்கு கொள்ள வருவதுபோல இதுக்கும் வரவேண் டும். அப்போதுதான் லோகம் பூராவும் க்ஷேமத்தை அடை யும். வீட்டில் செய்யப்படும் ஆத்மார்த்த பூஜையின் முடி வில்கூட "ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து" என்று லோகம் பூராவும் க்ஷேமமாக இருக்கப் பிரார்த்திப்பதுதான் நமது வைதீக மதத்தின் பெருமை. வைதீக மதத்திற்கு மூலம் வேதம்; வேதத்தை ஒரு மரமாக நினைத்துக்கொள்ளுங்கள். ஏன் மரத்துக்கு ஒப்பிடுகிறேன் என்றால் மரம்தான் தனக்கு என்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் பிறருக்காகவே பூத் துக் காய்த்து பழுக்கிறது. பரோபகாரம்தான் அதன் முழுப் பயன். அதுபோலத்தான் வேதத்துக்கும். நம்மால் வேதத்துக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. நமக்குத்தான் பயன் கிடைக்கிறது. ஒரு சுலோகம் சொல்கிறேன்.

" வேதோ வ்ருக்ஷா! தஸ்ய மூலகான்யத்ர விப்ரா: |
அங்கா: சாகா: தர்மகர்மாணி பத்ரம் ||
தஸ்மான்மூலம் யத்நதோ ரக்ஷணீயம் |
சின்னேமூலே நைவசாகா ந வ்ருக்ஷா ||"

வேதம்தான் மரம் என்றால் அதனுடைய வேர்தான் வேதியன். அங்கங்களாகிய சிக்ஷா (Phoneties) வ்யாகரணம் (grammar) சந்தஸ் (Metre) நிருத்தம் (Efymology of words) ஜ்யோதிஷம் (Vedanga Jyothisham) கல்பஸூத்ரம் (Texts that deals with procedure for porforming Acts (Karma-nushtana). இவைகள்தாம் கிளைகள்; ச்ரௌத ஸ்மார்த்த

Koviloor Digital Library



கர்மாக்களிதாம் இலைகள். மூலமாகிய (வேர்) பிராம்மணன் ரக்ஷிக்கப்பட வேண்டும். "அந்தணர் என்போர் அறவோர்" என்று திருக்குறள் ஆசிரியர் அதனால்தான் கூறினர். வேதத்தை அப்யாஸம் செய்து வரவேண்டும்.

"ஆனால் தற்காலத்தில் இந்த வேத மரத்தை ரக்ஷிக்காமல் வேண்டாத மரத்தில் ஏறி கீழே விழுந்து கைகால் ஒடிந்து தவிக்கிறோம். நான் சொல்லவில்லை. ஆதிசங்கரரே இதை சொல்கிறார்,

" ஸம்ஸாரர் வ்ருக்ஷம் அகபீஜம்
அநந்த கர்ம சுகாசதம் கரண பத்ரம்
அநங்க புஷ்பம் ஆருஹ்ய து:கபலிதம்
பததோ தயாளோ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மம
தேஹி கராவலம்பம்"

"'சம்ஸாரமென்பதை மரமாகவும், பாபமே விதைதாகவும், பல்வேறு கர்மாக்களே கிளைகளாகவும், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் இவைகளே இலைகளாவும் மன்மத புஷ்பமாகவும் துக்கமே பழமாகவும் உள்ள மரத்தில் ஏறி கீழே விழுந்து விட்டேனே! என்னை கைகொடுத்து காப்பாற்று! ஹே! லக்ஷ்மீ நரஸிம்மா'!' என்று சொல்கிறார். இது நமக்காகவே சொல்லப் பட்டது.

மருந்தை வாங்கி அப்படியே வைத்துவிட்டால் அதனுடைய வீரியசக்தி, பலம், நாளடைவில் குறைந்துவிடும். அது போல் வேதத்தை அப்யாஸம் செய்யாமல் இருந்தால் அந்தந்த மந்திரங்களின் சக்தி, ஆவர்த்தி திரும்பதிரும்பச் சொல்லாததால் குறைந்துவிடும். வாழைமரத்து இலைகளை வெட்டிக்கொண்டே இருந்தால் குலைபோடும்போது சின்னதாக இரண்டு சீப்புதான் இருக்கும். அதுபோல் குறைத்துக் கொண்டே போகாமல் வளரவிட வேண்டும். அப்போது பலனும் வீரியமுள்ளதாக இருக்கும். பல தவறுகள் தெரிந்தும் தெரியாமலும் செய்கிறோம். அவைகளுக்கு எல்லாம் பிராயச் சித்தம், பரிகாரம் காயத்ரீஜபம்தான். காயத்ரீ வேதத்தின் தாய். அதை விட்டுவிடக்கூடாது, (Philosophy) தத்துவம் பல

Koviloor Digital Library



வேருக இருக்கலாம். அதைச் சார்ந்தவர்கள் வேறுபடலாம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று பல வாஞலும் 'வேதம்' என்ற அடிப்படையில் யாவரும் ஒன்று தான். இவர்கள் காயத்ரீதேவதையை ஒரு முகமாக வணங்கு கிருர்கள்!

"வேதத்தை தமிழில் 'மறை' என்று சொல்லுவர். மறை என்று சொன்ஞல் 'மறைந்துள்ளது' என்றும் அர்த்தம். வேதம் அப்படித்தான். எங்காவது ஒரு திண்ணையில் 4 பேர் உட்கார்ந்து தனியே சொல்லுவார்கள். அதற்கு மற்றவை களுக்கு இருக்கிறப்போல மைக் (ஒலிபெருக்கி) விளம்பரம் அது இதுஎன்று எதுவும்கிடையாது. ஒரு பெரிய பணக்காரன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பெரிய மாமரம் பழுத்து குலுங்கு கிறது. ஆகா, 'நான் பெரிய பணக்காரன். என் வீட்டு மரத்து வேர் சேறிலே இருக்கலாமா?' என்று அவன் அதை பள பள வென்று துடைத்து எல்லோருக்கும் தெரியணும் என்று வைத்தால் மரம் பட்டுப்போய்விடும். அதுபோல் தான் வேதமும் வேர்போல் மறைந்து, எழை அந்தணர்களிடம் பொக்கிஷம் போல் இருக்கிறது. சிலர் அஞசாரமாக இருக் கிருர்களே என்று பார்க்கவேண்டாம். மரத்தின் வேர் சேரில் இருந்தாலும் பழம் தருவது போல் பிறருக்கு தேவையான பலனைத் தந்துவிடும். அஞசாரமானவனுக்கு அநுக்கிரஹ சக்தியிருக்க வேண்டுமாஞல் ஆசார அநுஷ்டானத்திஞல் கிடைக்கிறது. ஆஞல் இதராளுக்கு எப்போதும் வேதம் ஓதும் பலன் கிடைத்துவிடும்.

"வீட்டிற்கு ஒரு பிள்ளையை இந்த நல்ல காரியத்துக்காக அர்ப்பணம் செய்யும் புத்திவரவேணும். அந்த காலத்திலே சண்டைக்கு போவதற்குகூட வீட்டுக்கு ஒரு வாலிபன் என்று அனுப்புவார்கள். அதுபோல் இப்போது எல்லோரும் வேத ரக்ஷணர்த்தம் ஒரு சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும், வேதாப்யாஸம் செய்யாதவர்கள் தண்டனையாக அவர் களுடைய நக்ஷத்திரத்தில் மாதா மாதம் 1 ரூபாயாவது அபராதமாக ஒரு உண்டியல் போட்டு வைத்து அதை வருஷ

Koviloor Digital Library



முடிவில் வேத அப்பியாஸம் செய்யும் மாணவனுக்கு உதவுவதற்காக ஸ்ரீமடத்தில் சேர்ப்பித்தால் அந்தக் குழந்தைகளுடைய செலவுக்கு பயன்படும். நாம் செய்ய வேண்டிய கர்மாவை செய்யாத பாபத்தினின்றும் விடுபடலாம்! அம்பாள் உங்களுக்கெல்லாம் பரம ச்ரேயசைக் கொடுப்பாள்'' என்று தேனினும் இனிய மதுர மொழிகளை உதிர்த்தார்கள்.

கேட்டவர்கள் மனத்தில் அத்தேன் மதுரச் சொற்கள் பலதரப்பட்டதாகத் தான் பாய்ந்தது. வேதத்தை கற்பவன் மனதில் பெருமிதத்தை உண்டுபண்ணிய அந்த சொற்கோவை, வேதத்தை கற்காதவன் மனத்தில் ஏக்கத்தையும், 'ஆஹா! பெருத்த நஷ்டமல்லவா அடைந்துவிட்டோம்' என்று துன்பத்தையும் சேர்த்தது; கூடவே ஆறுதலையும் அளித்தது பெரியவாள் காட்டிய பரிகாரம். நான் நீ என்று போட்டிபோட்டு மக்கள் நக்ஷத்திர உண்டியல் சேர்த்தனர். வேத ஸம்ரக்ஷணம் என்ற செடி வளர்ந்து மரமாக அம் மஹான் பொழிந்த கருணை மழையே காரணம் என்று எவரும் போற்றினர்.

''கற்றுங்கு எரியோம்பி கலியை வாராமே செற்றுர் வாழ் தில்லை'' என்று அப்பெரியோன் தேவாரத்திலிருந்து மேற்கோள் எடுத்துக்கூறி, ''படிப்பு என்பது ரொட்டிக்காக படிக்கும் படிப்பு அல்ல. அது உடற்கூடுக்கு மட்டுமே யாகும் படிப்பு! படிக்கும் படிப்பு 'எரியோம்ப' அக்னி வளர்த்து அதில் மந்திரபூர்வமாக ஆஹுதி அளிக்கக்கூடிய படிப்பாக இருக்கவேண்டும். அதாவது வேதப் படிப்புத்தான் படிப்பு! அதுமட்டுமா? அது கலியை வராது தடுக்க சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும். அது எப்படி சாத்தியம் எனில் 'அனுஷ்டானமே' அநுபவ சித்தாந்தம் என்பதுதான்! நித்ய கர்ம அநுஷ்டானங்களினுல், ஆசார விவகாரத்தினுல் ஏற்படும் பரிசுத்தமான தேஜோமயமான பரிபூரண சக்தி'' என்று கூறியதும் கூடியிருந்து கேட்டவர்கள் ''சுருக்கமாக எப்படித் தான் எங்கிருந்தெல்லாம் மேற்கோள்கள் வருகின்றன, அப்பப்பா! அறிவின் ஆழம் தான் என்னே! இவர் முன்

Koviloor Digital Library



யாவும் திறந்த புத்தகமாக கைகட்டி நிற்குமோ!" என்று விழுந்து வணங்கினர். வேதத்தின் வாயிலாக அடைவதே பலம் என்பதுதான் அடைய பலம் என்று இவ்வூரின் பெயரே அப்படியானதோ என்றுதான் தோன்றியது.

அடைய பலம் விட்டுக்கிளம்பிய ஸ்ரீ பெரியவர்கள் இருவரும் ஊர் ஊராக கிராமம் கிராமமாக ஆங்காங்குள்ள மக்களுக்கு ஆன்மீகத்தின் பெருமையை உணர்த்தினர். அவர்களுடைய அநுஷ்டானங்களையும் கேட்டவர்கள் கண்டவர்கள் இந் நாகரீக அலங்கோலம் தலைவிரித்தாடும் நிலையை துறந்து, ஆன்மீக வாழ்வே உயர்ந்தது என்று உணர்ந்தனர். இந்திய மண்ணின் முதுகெலும்பாக மதமும் ஆன்மீகமும் நிற்பதை ஒவ்வொருவரும் உணரும்படி செய்தது ஸ்ரீபெரியவர்களுடைய செயல்களும் ஆங்காங்கே நிகழ்த்திய உரைகளும்.

அவர்கள் சென்றுகொண்டே இருக்கிறார்கள். இராமேச்வரம் செல்லப் போகிறார்கள் என்று எங்கும் பேச்சு. புதுப் பெரியவர்களின் வடதேச விஜய யாத்திரைக்கு வித்து ஊன்றினார் எனலாம். பூர்வாங்கமாக இராமசேதுவில் மணல் எடுத்து அதை முறையே லிங்கமாக பூஜித்து கங்கையில் கலந்து, கங்கை நீர் கொணர்ந்து இராமநாதருக்கு அபிஷேகம் செய்து, வடக்கும் தெற்கும் இணைந்த ஒற்றுமையே, சேது, காசி யாத்திரையின் பெருமையும் சிறப்புமாகும்.

ஸ்ரீபுதுப் பெரியவர்களுடன் யாத்திரை செய்வது எல்லா ஊர்களுக்கும் புதியது என்பதால் கிராமம் கிராமமாகச் செல்லுமிடங்களில் எல்லாம் மக்கள் திருப்தியடையவில்லை! 'இங்கு இன்னும் இரண்டு நாட்கள் தங்கியிருக்கக் கூடாதா?' என்று ஏக்கமே நிறைந்து காணப்பட்டது. ஜன சமுத்திரத்தின் பக்தி அலைகளில் மிதந்து மிதந்து கப்பல்போல் அசைந்து அசைந்து சீர்காழி வந்து சேர்ந்தனர். தோணிபுரம் என்ற பெயருக்குப் பொருத்தமாக மக்களை அஞ்ஞானத்திலிருந்து கரைசேர்க்கும் தோணிகளாக விளங்கும் மஹந்துக்கள் இங்கு தங்கியதும் பொருத்தமாகவே இருந்தது!

Koviloor Digital Library



ஞானக் கன்றாக திகழ்ந்த திருஞான சம்பந்தர் அவதரித்த தலமல்லவா? சிவ சாஸ்திரம் தளிர்த்த அடைய பலத்திலிருந்து 'சிவ வழிபாடுதான் உயர்ந்தது' என்று பறை சாற்றி நிருபித்து வெற்றிக் கொடி நாட்டி சமணர்களை வாதில் வென்று, மீனக்கொடியோனை சைவனாக ஆக்கிய குழந்தை பிரான் அவதரித்த தலத்திலே, அந்த ஞானசம்பந்த பிரான் போலவே குழந்தை பருவத்து இளந்துறவியைக் காண ஜனத்திரள் எங்கிருந்தெல்லாமோ வந்த வண்ணம் இருந்தனர். சென்னையிலேயே இரண்டு ஆண்டுகளுக்குமேல் தங்கியதால், தன் வீட்டில் ஒருவர் எங்கோ சென்றுவிட்டதாக வெறுமையை உணர்ந்த பக்தர்கள் சீர்காழியை முற்றுகையிட்டுச் சூழ்ந்து கொண்டனர்!

எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து சிரித்தமுகம் மாறாமல் எடுக்க எடுக்கப் பெருகும் அருளூற்றாக அமர்ந்திருப்பார் ஸ்ரீ பெரியவர்கள். பார்க்குமிடமெங்கும் அன்பு, பக்தி! ராமன் இருக்குமிடம் அயோத்தி என்பதுபோல், அம்மஹான் சென்ற இடமெல்லாம் ரமணீயமான சூழ்நிலை, அமைதி. ஆசிரமத்தின் சூழல் பக்தி, எல்லாம் தெரிந்தன.

"ஸம்பூர்ணம் ஜகதேவ நந்தனவனம்
ஸர்வேபி கல்பத்ருமா:
காங்கம் வாரி ஸமஸ்த வாரிநிவஹா: புண்யா;
ஸமஸ்தா: க்ரியா:
வாச: ப்ராக்ருத ஸம்ஸ்க்ருதா: ச்ருதிசிரோ
வாராணஸி மேதினி,
ஸர்வாவஸ்திதி ரஸ்ய வஸ்துவிஷயா த்ருஷ்டே
பரப்ரஹ்மணி ||
—சங்கரர்

ஆதிசங்கரர் ப்ரம்மத்தை கண்டவனுக்கு உலகம் பூராவும் தேவலோகமாகவும், மரங்களெல்லாம் கற்பக விருக்ஷமாகவும் நீர் நிலைகள் யாவும் கங்கையாகவும், பேசும் மொழியாவும் தேவ பாஷையான ஸம்ஸ்கிருதமாகவும் வேத சாரமாகவும்

Koviloor Digital Library



ளர் எல்லாம் காசியாகவும் தோன்றும் என்கிருர். அப்படியே பரம கருணமூர்த்தியாகிய நமது குரு சீலர்கள் தங்கும் இடமும் சூழலும் இருந்தது.

"தர்கோ அப்ரதிஷ்ட: ச்ருதயோ விபின்ன:
நைகோமுனி: யஸ்யமதம் ப்ரமாணம்! தர்மஸ்ய
தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹாஜனோ
யேன கத: ஸ பந்தா: ||

என்று மஹாபாரதத்திலுள்ள சுலோகம் கூறுகிறது.

எது தர்மம், நல்லது எது, கெட்டவை எவை என்பனவற்றை நமது சிற்றறிவினல் மட்டும் அறிந்துகொள்ள முடியாது. மஹான்களின் நடத்தைதான் நமக்குப் பிரமாண மாகும். பெரியோர்களை அணுகி நமஸ்கரித்து அவர்களுடைய கருணை கடாக்ஷத்தில் விழுவதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

வேதமும் இந்த கருத்தைத் தான் கூறுகிறது. மஹான்களின் சேர்க்கையினல் அவிவேகம் மறைந்து ஞானம் உதிக்கும். ஆசாரிய சங்கரரும் அரிய பொக்கிஷமான விவேக சூடாமணியில் மஹான்களை அண்டுவது, மானிடத் தன்மை, முக்திபெற ஆசை மூன்றும் கடவுள் அநுக்ரஹத்தால்தான் ஏற்படும் என்கிருர்.

"துர்லபம் த்ரியமே வைதத் தேவானுக்ரஹ ஹேதுகம்
மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய: ||

வேடிக்கையாகவும், எங்கு சென்ருலும், யாரோடு பேசிலும் இரத்னச் சுருக்கமாகவும் தர்மத்தை வழிபூராவும் சொல்லிக் கொண்டே இருந்தார் ஸ்ரீ பெரியவர்கள்.

"சரீரம் சாச்வதமல்ல. பணமும் சாச்வதமல்ல. மிருத்யு எப்போதும் கூடவே இருக்கிருன். ஆகையால் தர்மத்தையே சிந்திக்கவேண்டும் என்று வியாஸர் கூறியிருக்கிருர்.

Koviloor Digital Library



அசாச்வதானி காத்ராணி விபவோ நைவசாச்வத:
நித்யம் ஸந்நிஹிதோ ம்ருத்யு: கர்த்தவ்யோ தர்ம
ஸங்க்ரஹ: ||

"ஆனால் ஒன்றையுமே, தானமோ தர்மமோ பண்ணுதவனே கடைசியில் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போகிறான். அதனால் தியாகியாகிறான். எல்லோருக்கும் எல்லாவற்றையும் தர்மம் தானம் என்று கொடுப்பவனே கருமி எனலாம். ஏனென்றால், அவன் பரலோகத்துக்கு போகும்போது கூட தான் ஸம்பாதித்த பணத்தைக் கொண்டு போய்விடுகிறான் என்று வியாஸரே வேடிக்கையாகச் சொல்கிறார்.

அதாதா புருஷரஸ்த்யாகி தனம் ஸம்த்யஜ்ய கச்சதி
தாதாரம் க்ருபணம் மன்யே ம்ருதோப்யர்த ந முஞ்சதி ||

"இப்படி எதற்குச் சொல்கிறேன் என்றால் தான தருமம் முக்கியம். இந்த சீர்காழியில் அவதரித்த ஞானசம்பந்தப் பெருமான் திருவீழி மலைக்குப் போய் சிவதரிசனம் செய்தார். அங்கே திருநாவுக்கரசர் (அப்பர்) உடன் இருந்தார். சீர்காழியிலிருந்து எல்லோரும் போய் ஞான சம்பந்தரை சீர்காழிக்கு வரவேண்டும் என்று கூப்பிட்டனர். திருவீழிமலைப் பெருமானிடம் உத்திரவு பெற்று செல்வோம் என்று கூறினர். அன்று இரவே கனவில் சீர்காழிப் பெருமான் தோன்றி திருவீழிமலை விண்ணிழி விமானக் கோயிலிலே தரிசனம் தருவதாகக் கூறி அப்படியே காட்சியளித்தார்! அதனால் சீர்காழி மக்களிடம் பிறகு வருவதாகக் கூறி அனுப்பி விட்டார். பகவான் செய்யும் காரியங்களில் எல்லாம் ஏதாவது நல்ல காரணம் இருக்கும். அப்படித்தான் அப்போதும் நடந்தது. அப்போது ஒரு சமயம் மழை பெய்யாமல் நாடு எங்கிலும் பஞ்சம் உண்டாயிற்று.

"திருநாவுக்கரசருக்கும் திருஞானசம்பந்தருக்கும்பகவான் மடத்திலுள்ள அடியார்களுக்கு உணவு கிடைக்க தினம் ஒரு தங்கக் காசு தருவதாகவும் தெரிவித்தார். அதன்படி சிவலிங்

Koviloor Digital Library



கத்தின் பீடத்தில் கிழக்கு பாகத்திலும் மேற்கு பாகத்திலும் பொற்காசு இருந்தது. அதை வைத்து இருவரும் அடியார்களுக்கு உணவு அளித்தனர். திருஞான சம்பந்தர் மடத்தில் தாமதித்தே உணவு வழங்கினர். அப்பர் மடத்திலோ குறித்த நேரத்தில் நடந்தது. 'காரணம் என்ன?' என்று பிள்ளைபிரான் கேட்டார். 'தாங்கள் தரும் காசு வாசியுள்ளதாகவும் அதனால் வட்டம் கொடுத்து பண்டங்கள் வாங்க தாமதமாகிறது' என்று தெரிவித்தனர்.

'அப்பர் பிரான் உடல் உழைப்பால் பெறுவதால் வாசிதீர நல்கினீரோ?' என்று ஞானசம்பந்தபிரான் கூறி, யானும் அப்பர் உழைப்பால் பெறுவதை பாட்டினால் பெறுவேன் என்று "வாசிதீர காசு நல்குவீர்" என்று பதிகம்பாடி வாசி தீர்ந்த காசுகளைப் பெற்று பஞ்சம் தீரும்வரை மக்களுக்கு உணவு வழங்கி வந்தனர்.

வழிநெடுக யாத்திரை செய்த களைப்பு நீங்கவும், தனது சிஷ்யரின் ஹிதம் ஒன்றையே மனதினில் கொண்ட உத்தம குரு இளையாத்தங்குடி என்ற சிறு கிராமத்தை முகாமிற்கு கருத்தில் கொண்டார்.

* * *

இளையாத்தங்குடி என்ற சிறு கிராமம் செட்டி நாட்டில் கீழ் சேவல்பட்டிக்கு சமீபத்தில் உள்ளது. பட்டி தொட்டி என்போமே, அது கிராமத்தைவிட சிறியது என்பதைக் குறிக்கத்தான். இதைச்சுற்றிலும் பிள்ளையார்பட்டி,வைரவம் பட்டி, நேமம், சூரக்குடி, இறுப்பக்குடி, வேலங்குடி இரணியூர்,மாத்தூர் என்று கிராமங்கள் இந்த 9 ஊர்களிலும் உள்ள சிவாலயங்களை புதிப்பித்து பளிங்குபோல் வைத்துக்கொண்டிருக்கும் பெருமை நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்குத் தான் சேரும். ஸ்ரமாபநோதனபுரம், இளைசைப்பதி என வழங்கும் இவ்வூர் பிந்துஸ்தானம்போல் (திருவானைக்கா, திருவரன்குளம் மதுரை மூன்றையும் முக்கோணமாக) அமையப்பெற்றது. சூரனால் துன்பப்பட்ட தேவர்கள், கண்வமுனி இளைப்பாறுவதற்காக வந்து வதிந்திட்டதலம்.

Koviloor Digital Library



உடலுக்குமட்டுமின்றி உயிர்கள் இளைப்பறவும் இப்பதி சிறப்புடையது. ஸ்ரீமடத்து புகழ் மிக்க ஆசாரிய பீடம் ஸ்ரீ மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இவ்வூரையே தனது அதிஷ்டான தலமாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இங்குதான் நமது பெரியவர்களும் தங்கினார்கள். ஸ்ரீ புதுப் பெரியவர்களுக்கு ஞான சாஸ்திரம் பூரணமாக பயில்விக்கத்தான் இப்பதியைத் தேர்ந்தெடுத்தார்கள். ஸ்ரீ பெரியவர்களின் பூர்வாசிரம தம்பியான ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகளிடம் வேதம் பயில அனுப்பியதுபோல், இங்கு ஆந்திரபிரதேசத்தைச் சேர்ந்த சிறந்த பண்டிதரான ஸ்ரீ மண்டலீக வேங்கடா சாஸ்திரிகளிடம் இப்பணியை ஆக்ஞாபித்தார். தினம் அதிஷ்டானத்தில் வித்தையை, பரிபூரணமாக சுமார் 1½ ஆண்டு காலம் தங்கியிருந்து அப்யஸித்தார். வெளியுலகிற்கு இளையாத்தங்குடி என்ற புனித க்ஷேத்திரம் தெரிய வந்தது இந்நாட்களில்தான். கடல் கடந்த அந்நிய மாது Eugenia-Bonghini ஸ்ரீ பெரிய வர்களை இங்கேதான் சந்தித்தார்—பிறகு ஒரு சமயம் தன் சொந்த நாட்டிற்குச் சென்றதும் "Not a single day is pasing without remembering ELAYATHANGUDI and all of you Who have the happiness of living daily near His Holiness and His great peace" என்று குறிப்பிட்டார்கள்.

நமது முன்னேற்றம் நமது புராதன கலைகளிலும் சாஸ்திரங்களிலும்தான் இருக்கிறது. அவைகளை அழிந்து விடாமல் பாதுகாப்பதால் நாம் பெரிய தர்மத்தைச் செய்கிறோம், நமக்குப் புரியவில்லை அல்லது தெரியவில்லையே என்பதனால் அந்தப் புராதனமான சாஸ்திரங்களையோ கிரந்தங்களையோ தள்ளிவிடாது வருகின்ற சந்ததியார்களுக்காக பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். பறவை எப்படி தன் குழந்தைகளுக்கு தேடித்தேடி உணவு கொண்டு வந்து ஊட்டி அதைப் பாதுகாத்து உலகில் முழுப்பறவை யாக அளிக்கிறதோ அப்படி மஹான்கள், மூதாதையர்கள் தன் நலம் கருதாமல் நமக்காக பல கிரந்தங்களை சாஸ்திரப்

Koviloor Digital Library



பொக்கிஷங்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் வைத்த மரங்களின் பழங்களை நாம் சாப்பிடுகிறோம். நாம் மரம் பழுக்கும்வரை இருப்போமா மாட்டோமா என்று மரத்தையே பயிரிடாமல் இருக்கிறோமா? அதனால்தான் வேதம், புராணம், சில்பம், ஆகமம் முதலியனவற்றை நமக்காக இல்லாவிட்டாலும் நமது சந்ததிக்காகவாவது பாதுகாக்கும் கடமை நம்மிடம் இருக்கிறது. இந்த உண்மையைச் சொல்லாமல் சொல்லி இளையாத்தங்குடி வேத வேதாங்க ஆகம, சாஸ்த்ர சில்பசாஸ்திரம் முதலியவைகளுக்கு புத்துயிர் அளிக்க ஆகம சில்பசதஸை துவக்கி, ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்தார்கள் நம் ஸ்ரீ பெரியவர்கள்.

ஆகமத்தைப்பற்றி பேசும்போது சிவனுடைய ஐந்து முகங்களிலிருந்து அவை தோன்றியதாகவும், ஸ்ரீ பார்வதி தேவியே அவற்றைக் கற்றுணர்ந்து பிறகு மஹரிஷிகளுக்கு உபதேசம் செய்து இன்றுவரை பரம்பரை பரம்பரையாக நம்வரை வெட்டுப்படாமல் வந்துள்ளது என்றும் புராணம் கூறுகிறது.

“ஆகதம் சிவ வக்த்ரேப்ய: கதம் து கிரிஜாமுகே
மதம்துச மஹரிஷிணும் ஆகமம் சேதி கீதத்திதம்”

இதை நம் சந்ததிக்கு கிடைக்கும்படி செய்யாமல் நாம் துண்டாடும்படி நேர்ந்துவிடக்கூடாது.

ஆந்திர தேசத்து புர்ர, கதா, கர்நாட யக்ஷகானம், மலையாள கதகளி, ஒட்டம் துள்ளல், தமிழ்நாட்டு வில்லுப் பாட்டு, பாரத ப்ரஸங்கம், ஒரிஸ்ஸாவின் தாஸக, டி, குஜராத்தின் கோலாட்டம் இவை யாவும் ஒரே மேடையில் மக்கள் காணும் வண்ணம் மிக அற்புதமான ஏற்பாட்டினால் இந்த கலைகள் புத்துயிர் பெற்றன. கலை வல்லுநர்கள் ஊக்கம் அடைந்தனர்.

1962-ல் இளையாத்தங்குடியில் இருந்த சமயம் நமது மதத்துக்கும் மனத்துக்கும் புரிந்த தொண்டின் அளவு மிகப் பெரிது என்று கட்டியம் கூற இராமேச்வரத்து அக்னி தீர்த்

Koviloor Digital Library



தக் கரையில் விளங்கும் ஸ்ரீ சங்கர பிரதிஷ்டையும், வேத, சில்ப, ஆகம மஹாநாடு தொடங்கி வைத்து நலிவடைந்து ஆதரிப்போர் இல்லாததால் மறையத் தொடங்கியிருந்த தச்சர்கலை, வில்லுப்பாட்டு போன்றவைகளுக்கு புத்துயிர் அளித்தார், அப்பெருங் கருணையாளர்! இன்று நாட்டில் கற் சிற்பிகளுக்கு ஏகக் கிராக்கி. வில்லுப் பாட்டு இல்லாத இடமே இல்லை! இந்நாளில் தமிழிலும் தமக்கு இருக்கும் ஆர் வத்தையும், தமிழ் பாட்டிற்கு பரமன் பரமானந்த மடை கிறான்! பக்தர்களுக்கு அருள்கிறான் என்று எடுத்துக்காட்ட எட்டுக் கிரஹங்களின் சேர்க்கையைக் கண்டு உலகமே பயந்து கொண்டு இருந்த நேரத்தில் 'கோளறு பதிகம்' என்று ஒன்று இருப்பதனை, ஓதுவார் தவிர மற்றவர் அறியாது இருந்த அப் பதிகம் நாடு, நகரம், பட்டி, தொட்டி முதலிய எல்லா இடங்களிலும், கோயில்களிலும் வீடுகளிலும் முழங்கச் செய்த தனிப் பெருமை நமது ஸ்ரீ பெரியவர்களையே சாரும்.

ஸ்ரீ மடத்தில் நடத்திய இந்த மகோன்னதமான சதஸ், பாரதத்தின் ஏடுகளில் தங்க மயமாகப் பொறிக்கப்படவேண் டியவையாகும். பத்து நாட்களும் கண்கொள்ளா காட்சி. பல துறையில் மேதைகளாக விளங்கிய வல்லுநர்கள் எல் லாம் மேடையில் ஏறி ஒவ்வொன்றாக விளக்கிக் கூறி விவ ரித்த பாங்கும், அழகும் மனத்திரையில் மறையாத ஒரு அம்சம். ஏதோ பெரும் உற்சவம் நடப்பதுபோல் அவ்வளவு சிறப்பாகவும், சீரிய முறையிலும் நடத்தப்பட்டது இவ் வைபவம்.

அதிமேதையாகிய புத்தி சூக்ஷ்மத்தினால் இரவும் பகலும் மக்களுக்கு பணிபுரிவது ஒன்றே கண்ணும் கருத்துமா யிருந்த அம்முனிவர் எப்போது உண்பார், உறங்குவார் என்று கேட்டால் 'அனைவரது கவலையையும் உண்பார்! அனை வரது கருத்திலும் உறங்குவார்!' என்று கூறுவது மிகை யாகாது.

காலை நேரம்! பொழுது புலர இன்னும் $\frac{1}{2}$ மணி நேரம் இருந்தது. கீழ் சேவல்பட்டியில் இறங்கி கால்நடையாக

Koviloor Digital Library



நடந்து ஸ்ரீ பெரியவாளுடைய முகாமிற்குச் சென்று கொண்டிருந்தேன் :

"பயந்த தனிவழிக்கு செங்கோடன்
மயூரமும் வெற்றி வடிவேலுமே"

என்று அருணகிரியார் பாடியதுபோல் நெஞ்சம் திக்திக் என்று பயத்தால் அடித்துக் கொண்டாலும் ஸ்ரீ பெரியவாள் சிந்தனையிலேயே நடந்தேன்: நடக்கும் இடம்வரைதான் ஒளி இருக்கும்: அவ்வளவு கருக்கிருட்டு. பின்னல் யாரோ பாதுகையுடன் நடப்பதுபோல் சப்தம் கேட்கும். திரும்பிப் பார்ப்பேன். ஒன்றுமிராது. அங்கு நானும் என்னைச் சூழ்ந்த இருட்டுதான். ஆயினும் மீண்டும் நடப்பேன். அந்த சப்தம் கேட்கும். ஸ்ரீ பெரியவாள்தான் துணைக்கு வருகிறரோ என்று கைப்பையில் கொண்டு சென்ற பாதுகையை இறுக்க நெஞ்சோடு அணைத்துக் கொள்வேன். சென்னையை விட்டு கிளம்பியதிலிருந்து முகாம் தோறும் சென்று மனக்களைப்பை ஆற்றிக்கொண்டுவருவேன். போயடைந்ததும், 'வா, எப்போ வந்தே?' என்று பரிவோடு விசாரிக்கும் அத்தேன் மதுரக் குரலுக்கு எத்தனை பிறவி வேண்டுமானுலும் எடுக்கலாம். அப்பர் கூறினரே,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த படையும் பவளம்போற் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"

என்று, அதுபோல் அத்தொனியில் ஒரு தனி பரிவு, கனிவு, குழைவு! அன்பு, ஆசி, அருள், காரணமின்றி ஏற்படும் கருணை எல்லாம் ஒருங்கே இழைந்து இவ்வரிய பெரும் மஹானுக்கு என்னிடம் ஏன் இவ்வளவு தனி அன்பு, கருணை என்று எண்ணுவேன். இம்மாதிரி எண்ணுத நெஞ்சங்கள்தான் ஏது ? அவ்வளவு பேரும் இப்படித்தான் சொல்லுவார் என்று நிச்சயமாகக் கூறலாம்.

இளையாத்தங்குடி நெருங்கியது. எதிரே தென்பட்ட குளத்தில் இறங்கி காலை அனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு

Koviloor Digital Library
2441
R65
கோவிலூர்-630 307



ஸ்ரீ மடத்துக்கு கிளம்பினேன். ஸ்ரீ மடத்துக்கு இன்னும் 10 அடிதான் இருக்கும். இடையே ஸ்ரீ நித்யகல்யாணி ஸமேத கைலாஸநாதன் கோயில். ஸ்ரீ மடத்து வாயிலையே நோக்கி பல்வேறு எண்ணங்களுடன் வந்துகொண்டிருந்த தால் கோவிலுக்குள்ளிருந்து ஸ்ரீ பெரியவாள் வருவதை எதிர்பார்க்கவில்லை. ஆதலால் கையிலிருந்த பை கீழே நழுவியது. அதிலிருந்த பாதுகையும் ஒன்று கீழே விழுந்தது !

கருணை மூர்த்தியும் எதிரே நின்ற வண்ணம் இருந்தார்! மற்றவர் யாவரும் வியந்து நின்றனர். மற்ற பாதுகையையும் எடுத்து இரண்டையும் பாதத்துக்கு அருகே நகர்த்துவதற்குள் எத்தனையாயிரம் எண்ணங்கள், ஓடி ஆடும் மனது அதிர்ந்துபோய் செயலற்று, செய்வதொன்று அறியாது நின்றதை நினைத்தால்கூட ஸ்ரீ பெரியவர்களின் பாதப் பெருமைக்குச் சான்று கூறும். கண்கள் குளமாயின. 'உடல், உயிர், ஆவி, பொருள் எல்லாம் அப்பனே உனக்கர்ப்பணம்' என்று மனம் கூவியது. என் நிலையை உணர்ந்த முற்றுமுணர்ந்தோன் முன்னே சற்று நடந்து பளிச்சென பாதுகைகளில் திருப்பாதங்களைப் பொருத்தினார். அவ்வளவுதான், 'ஹரஹர சங்கர' என்ற கோஷம் வானைப்பிளந்தது. இவ்வளவும் கண நேரத்தில் நடந்துவிட்டது. 'பாதத்தை அளவு எடுத்துப் போனீர்களா ?' என்றார் சிலர். 'குமிழ் தங்கம் எவ்வளவு பிடித்தது' என்றனர் சிலர் 'சரியாக இருக்கிறது. பெரியவாளுடைய அனுக்கிரஹம் பெற்றுக் கொள்ளுங்கள்!' என்று ஒரு 'சிலர்.

அப்பப்பா ! அவனறிவான் அப்பாதுகை எப்படிப் பொருத்தமாக அமைந்தது! அது தங்கம்தானா அல்லது தங்கமாக மாற்றின என் உள்ளம் தங்கமா ? அப்பாதம் தங்கமா ? எல்லாவற்றையும் அளவு செய்யும் வரையறைக்கும் அப்பாதம்; அதற்கு அளவு உண்டோ! அது எடுக்கத்தான் முடியுமோ! பவஸாகரத்தைக் கடக்க உதவும் அப்பாதப் பெருமையை உரைக்க வேண்டுமானால் அச்சங்கரனின் வாய் மொழிதான் அதற்கும் சான்று.

(தொடர்ச்சி அடுத்த பாகத்தில்)